27வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நிதி: 27 | பாலம்: 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2017

# உலகத் தலைவர்கள் ASEAN மாநாட்டில்

பிலிப்பைன்ஸ் இன் தலைநகர் மணிலாவில் 31 ஆவது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (Association of Southn East Asian Nations) மாநாடு 'ASEAN Summit 2017' நொவம்பர் 12ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம் உட்பட 20க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



ASEAN அமைப்பில் தென்கிழக்கு ஆசிய நாடுகளான பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, புருணை, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், கம்போடியா மற்றும் பர்மா (மியன்மார்) ஆகிய பத்து நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ASEAN மாநாடு அதன் 10 உறுப்பு நாடுகளுடன் சீனா, ஜப்பான், மற்றும் தென் கொரியா ஆகிய மூன்று நாடுகளையும் சேர்த்து 13 நாடுகளின் மாநாடாகவே நடைபெறுவது வழக்கம். கடந்த வருடத்துடன் அவுஸ்ரேலியா, இந்தியா, நியூசிலாந்து, ரஸ்யா மற்றும் அமெரிக்கா உட்பட மேலும் ஐந்து நாடுகள் இவ் ASEAN மாநாட்டில் சேர்க்கப்பட்டன. இம்மாநாட்டில் ஆசிய பிராந்தியத்தின் பாதுகாப்புப் பற்றிய பேச்சுக்களே முதன்மை வகித்தன.

கனேடியப் பிரதமர் முதன் முறையாக ASEAN மாநாட்டிற்கு பார்வையாளராக அழைக்கப்பட்டுள்ளார். வியட்நாமில் நடைபெற்ற APEC மாநாட்டில் 2017 நொவம்பர் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் கலந்து விட்டு கனேடியப் பிரதமர் பிலிப்பைன்ஸ் இல் ASEAN மாநாட்டில் கலந்துகொள்ள 2017 நொவம்பர் 12இல் பிலிப்பைன்ஸ் இற்குச் சென்றார்.

ASEAN மாநாட்டில் கலந்துகொண்ட கனேடியப் பிரதமர் கனேடியப் பொருளாதார வர்த்தகம் சம்மந்தப்பட்ட விடயங்களையும் ASEAN அமைப்பில் உள்ள 10 நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடினார். இந்தப் 10 நாடுகளும் சேர்ந்து கனடாவுடன் செய்யும் வர்த்தகம் கனடாவின் வர்த்தகத் துறையில் ஆறாவது இடத்தில் இருக்கின்றது. இந்நாடுகளில் மொத்தமாக 640 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர்.

அமெரிக்காவுடனான NAFTA வர்த்தக ஒப்பந்தம் கேள்விக் குறியாகிவரும் இத் தருணத்தில் கனேடிய அரசு ASEAN நாடுகளுடன் தனது வர்த்தகத்தை வளர்க்க முற்

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Advisor
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING
CALL ME FOR A FREE CONSULTATION
RE/MAX
ROYAL PROPERTIES
DIV MANIKKAVASAGAR
416.888.7877
Office: 416.321.0110
www.divhomes.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE
இப்போது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
✓Wisdom Tooth Extraction.
✓Root Canal.
✓Gum Treatment.
✓Tooth Filling.
✓Dental Implant.
✓Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying-Leasing-Renting-Selling
A name you can trust
RUTH VIJENDRAN
Full Time Sales Representative
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
1% LISTING COMMISSION
Home is where your story begins,
let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721
Fax: 647-351-3099
mortgage@nesan.ca
www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc., Brokerage



$565,000
$589,900
$719,000
$679,900
$649,999
FULLY RENOVATED
$2,850,000
$489,999
$1,450,000
Lawrence/Birchmount, Closing Oct 2018 BR 1+1 WR 2, Parking & Locker
Brampton, Charolais/Chinguacousy BR 3 WR 2 Fin.Basement
Brampton, Full Brick $$$ Upgrade BR 3 WR 3 Fin Basement
Brampton, Queen/Creditview BR 4 WR 3, Luxury 2350 SF
Markham/Sheppard BR 2+1 WR 1 New building, Main. Fee $200
Morningside/Lawrence BR 3+3 WR 3 Fin. Basement Sep. Entrance
Morningside/Sheppard BR 4+2 WR 3 Fin. Basement.$$$ Upgrade
Oshawa, Roseland/Grandview BR 4+2 WR 4, Fin. Basement/Sep. Entrance
Kennedy/401, BR 3 WR 1 Over1000SF, Main. Fee $577
Kennedy/401, BR 2 WR 2 Tridel Condo, Maint. Fee $430
15,000+ SF,Industrial Free Standing Warehousing in Scarborough, Near 401
Markham/Sheppard, Renovated Town house BR 4+1, WR 2, Fin. Basement. Low Main. Fee.
Oshawa Investment Property 4 Units Apt, Two 2 BR & Two 1 BR
Fully leased Apt Building In Oshawa, 11 Units, Renovated
Markham/Eglinton BR 3, WR 2 1200+ SF,Main.Fee $589
Help You Obtain a Mortgage No Matter the Situation
No Mortgage Broker Fee
FREE HOME STAGING
PROVIDED BY:
EMOH HOME & DESIGN
Certified UltimateStager® & ReDesigner
USC Certified
Sangeetha Kanesathas USC™
Certified UltimateStager™
15 Years of Business Experience
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract. All properties advertised herein may not be listed by Thas.




Unique HVAC Inc.
Heating & Cooling
Residential & Commericial HVAC Services
உங்களது உபகரணங்களின் தரத்தை உறுதிப்படுத்த இதோ ஒரு அரிய சந்தர்ப்பம் 50% கழிவு விலை $39.99
உங்களது உபகரணங்களின் தரத்தை சரிபார்த்தால் ஒழுங்காக வேலை செய்கிறதா என்பதோடு பாதுகாப்பாக வேலை செய்கிறது என்பதையும் உறுதிப்படுத்தலாம்
WHAT WE DO:
• BBQ Gas Line • Fire Place
• Humidifiers • Air Cleaners
• Air Conditioners • Furnaces
• Water Heater - Tank / Tankless
• Natural Gas Dryer • Electrical Services
Let Us Keep You're Family Safe From The Dangers Of Carbon Monoxide And High Bills!
WATER TANK RENTAL STARTING FROM $17.49
SIX MONTHS FREE RENTAL!
Purchase an Air Conditioner and Furnace Together and Save Big!
COMBO SPECIAL $3100
FURNACE BY ITSELF $2199
உங்கள் மின்சார, GAS கட்டணங்கள் உயர்ந்து விட்டதா?
குளிர் காலம் தொடங்கும் முன்பும்.
வெயில் காலம் தொடங்கும் முன்பும்.
எம்மை அழைத்து உங்கள்
உபகரணங்களின் தரத்தை
உறுதி படுத்திக்கொள்ளுங்கள்.
Vino (647) 989-4217
Kapilan (647) 981-5224
Thano (416) 543-5125
www.uniquehvacinc.com
uniquehvac.inc@gmail.com
www.facebook.com/uniquehvacinc

# தமிழ் வேட்பாளர், பற்றிக் பிறவுண் தமிழ் ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு!

- வீரகேசரி மூர்த்தி -

பழமைவாத கட்சியின் ஒன்றாறியோ மாகாணத் தலைவர் திரு. பற்றிக் பிறவுண் அவர்களும் எதிர்வரும் ஒன்றாறியோ மாகாணப் பொதுத்தேர்தலில் பழமைவாதக் கட்சியின் சார்பில் போட்டியிட இருக்கும்




மூன்று தமிழ் வேட்பாளர்களும் கடந்த ஞாயிறன்று மாலை தமிழ் ஊடகவியலாளர் களைச் சந்தித்து கலந்துரையாடினர். "ஜே.சி.பாங்குவெற்" மண்டபத்தில் நடை பெற்ற இச்சந்திப்பில் கனடாவில் நீண்ட காலமாக அரசியலில் அனுபவம் பெற்ற வரும் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக மார்க்கம் மாநகர சபை உறுப்பின ராகப் பணியாற்றி வரும் திரு.லோகன் கணபதி, ரொறன்ரோ பல்கலைக்கழக சமூக, பொது மக்களுடனான உறவு, நீதித்துறை ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற பட்டதாரி யான இளைஞர் திரு. விஜே தணிகாசலம், மற்றும் பட்டதாரி யான செல்வி தேனுஷா பரணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. பற்றிக் பிறவுண் உரை யாற்றிய போது "கனேடிய நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் 2006ஆம் ஆண்டு முதன் முறையாக போட்டியிட்டு வெற்றி ஈட்டிய நான் தொடர்ந்து மூன்று முறை போட்டியிட்டு நாடாளுமன்ற எம்.பி.யாகப் பணியாற்றி வந்துள்ளேன். நான் 2015ஆம் ஆண்டிலிருந்து ஒன்றாறியோ மாகாண நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருகின்றேன். நான் 2000ஆம் ஆண்டிலிருந்தே தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர் பினைப் பேணி வருகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி நாடாளுமன்றத்தில் முதன் முதலாக உரையாற்றியவன் நான். உலகெங்கும் இடம் பெற்றுவரும் இன அழிப்பு நடவடிக்கைகள், சிறுவர் மீதான துஷ் பிரயோகம் ஆகிய வற்றுக்கு எதிராக கனடா குரல் எழுப்ப வேண்டுமென வலிறுத்தி வருகின்றேன்.

கட்சித் தலைவர் தேர்தல்களின் போது தமிழ் மக்களாகிய நீங்கள் என்னுடன் ஒன்றிணைந்து பிரச்சாரம் செய்து வெற்றி பெறச் செய்தீர்கள். அத்துடன் தமிழ் ஊடகங்களும் எமது செய்திகளுக்கு முக்கியத் துவம் கொடுத்து பிரசுரிப்பதன் மூலம் எமக்குத் தொடர்ந்து ஆதரவினை நல்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் பல் வேறு வகையான வர்த்தக நடவடிக்கை களையும் இங்கு வெற்றிகரமாக மேற் கொண்டு வருகின்றனர். மிகவும் திறமை வாய்ந்த தமிழ் சமூகத்தின் முன்னேற்றத் துக்கு கைகொடுத்து உதவ நான் பின் நிற்க மாட்டேன். தற்போதைய முதல்வர் கத்லீன் வின் 57 மில்லியன் டொலரை ஊடக விளம்பரங்களுக்காக செலவு செய்துள்ளார். ஆனால் நாங்களோ அரசு சார்பான செய்திகளை தமிழ் ஊடகங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி நடைபெறவிருக் கும் ஒன்றாறியோ மாகாணத் தேர்தலில் ஒன்றாறியோ மாகாணத்தின் 124 தொகுதி களில் இதுவரை எமது கட்சியின் சார்பில் மூன்று தமிழர்கள் உட்பட 87 வேட்பாளர்களை நியமித்துள்ளோம்". எனக் குறிப்பிட்டார்.



புதிய தமிழ் வேட்பாளர்களை தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அறிமுகப்படுத்தி சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த நிகழ்வாக இது அமைந்தது.

குறிப்பு : மாலை 2 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கும் என அழைப்பு கொடுத்திருந்த போதும் 3:20 வரை நிகழ்சிசி தொடங்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# நாமும் நமது இல்லமும் - 499



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969


கனேடிய மக்கள் தொகை அதிகரித்து வருவது யாவரும் அறிந்ததே. இதற்கு முக்கிய காரணம் வெளிநாட்டவர்களின் வருகையே. கனடாவுக்கு வந்துகொண்டு இருக்கும் புதியவர்களினாலேயே மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. ஏற்கனவே வருடாவருடம் 250,000 புதியவர்களை கனடா அரவணைத்துக் கொண்டு வந்தது. இந்தத் தொகை 2018 இலிருந்து 350,000 ஆக அதிகரிக்கப்பட உள்ளது. 2011 இலிருந்து 2016ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் அண்ணளவாக 1.2 மில்லியன் புதியவர்கள் கனடாவுக்கு வருகை தந்துள்ளார்கள்.

இவர்களில் 61.8% ஆனவர்கள் ஆசியாவில் பிறந்தவர்கள். இவர்களில் 188,805 பிலிப்பினோ மக்கள். 2016இல் கனடாவுக்கு வந்தவர்களில் பிலிப்பைன்ஸ், இந்தியா, சீனா, ஈரான், பாகிஸ்தான், சிரியா மற்றும் தென் கொரியாவில் பிறந்து கனடாவுக்கு வந்தவர்களில் 39% ஆனவர்கள் ஒன்ராரியோவை தமது வாழ்விடமாகத் தெரிவு செய்துள்ளர். ஆனால் 2001ஆம் ஆண்டில் இத்தொகை 55.9% ஆகக் காணப்பட்டது. இப்பொழுது குறைந்துள்ளது.

2006 இலிருந்து 2016 வரையான காலப் பகுதியில் அதிகமாக வந்தது அராபியர்கள். அனேகர் அகதிகளாக வந்தவர்கள். மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்று வரும் போர் தான் இதற்குக் காரணம். அண்மைக் காலங்களில் வருபவர்களில் அனேகமானவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டவர்களாவர். இவர்களின் சனத்தொகை கனடாவில் 780,125 ஆகக் காணப்படுகின்றது.



பொதுவாக 10 பேர்களில் ஒருவர் அகதியாகவும், 6 பேர் பொருளாதார ரீதியாக வருபவர்களாகவும், 3 பேர் குடும்ப இணை வாக வருபவர்களாகவும் உள்ளனர். இவர் களில் 6 பேர் பணத்துடன் கனடாவுக்கு வருபவர்கள். இவர்களில் பலர், கனடாவில் உடனடியாக ஆதனம் வாங்குவதனைக் காணலாம். புதியவர்களின் வருகை, ஆதனத்தின் பெறுமதியை விலையில் அல்லது வாடகையில் அதிகரிப்பு செய்வ தனைக் காணலாம். உடனடியாக வாங்க முடியாதவர்கள் வாடகைக்கு செல்வதனைக் காணலாம். இதனால் எதிர்காலத்தில் வாடகையின் பெறுமதி அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். ஏற்கனவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டில் கனடாவில் ஆதனத்தை உரிமையாக கொண்டிருந்தவர்கள் 69% ஆகக் காணப்பட்டது. 2016இல் இந்தப் பெறுமதி 67.8% ஆகக் குறைந்ததிற்கு காரணம், வீட்டின் விலை அதிகரிப்பே. இவ் ஆதன உரிமை ரொறன்ரோவில் 66.5% ஆக உள்ளது.

ஏப்ரல் 2017இல் கொண்டுவரப்பட்டு, அடமானக் கடன் பெறுவதில் ஏற்படுத்திய இறுக்கநிலை, புதிதாக வாங்குபவர்களிற்கு மிக நெருக்கடியை கொடுத்தது. இதனால் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்ததால் ரொறன்ரோ பெரும்பாகத்தின் சில பகுதிகளில் அதிகவிலை இறக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் சில பகுதியில் விலையில் பெரிதவான இறக்கப் ஏற்படவில்லை.

அத்துடன் ஜனவரி 01, 2018 இல் புதிதாகக் கொண்டு வரப்பட இருக்கும் அடமானக் கடன் மீதான இறுக்கம், வாங்குபவர்கள்மீது மேலும் நெருக்கடியை தோற்றுவிக்கும். புதிய ஆண்டின் முற்பகுதியில் ஆதன வியாபாரத்தில் சில மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிதாக வருபவர்கள் வாழ்வதற்கு இடம் தேவை என்பது உண்மையே. இவர்கள் எவ்வாறு இந்நிலைமையை எதிர்கொள்வார்கள் என்பதனை எதிர்பார்ப்போம். இது புதியவர்களுக்கு மட்டுமல்ல ஏற்கனவே கனடாவில் வாழ்ந்துவருபவர்களுக்கும் இதே நிலைமை. புதிய வருடத்தில் இதன் பலா பலன்களைப் பார்ப்போம்.




# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds A Mortgage With US
Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232




# மாற்றுக் கூட்டணி அமைவது சாத்தியமா?

## - ஆதித்தன் -


தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளிடையே நாளுக்கு நாள் விரிசல் அதிகரித்து வருகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எப் கட்சி விலகப் போவதாக செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமது கட்சி விலகாது எனவும், ஆனால், இலங்கை தமிழரசுக் கட்சியுடன் இணைந்து அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடப்போவதில்லை என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். ஒரு பொதுச் சின்னத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் உடன் இணைந்து செயற்பட விரும்பும் கட்சிகளுக்கு அவர் அழைப்பும் விடுத்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான இடைக் கால அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையிலும், அதேவேளை, ஜனவரி மாதம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலும் கூட்டமைப்பிற்குள் இவ்வாறானதொரு முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பிற்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அனுமதி மறுத்த நிலையில், இந்த முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கின்ற கட்சிகள் முரண்பாடான நிலைப்பாட்டை கொண்டுள்ள போதும் கூட்டமைப்பு பிளவுபடுவது ஆரோக்கியமானதாக அமையாது என கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகள் கருதுகின்றன. எனவே, கூட்டமைப்பை பிளவு படாமல் பாதுகாக்க முயற்சி மேற்கொள்ளவுள்ளதாக புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். சுரேஸ் பிரேமசந்திரனுடன் கலந்துரையாடுமாறு, இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். இதனிடையே மன்னார் ஆயர் இல்லத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைய ஆயரின் ஆலோசனைகளைப் பெறுவதற்காக இந்த சந்திப்பு - கலந்துரையாடல் இடம்பெற்ற போதும் சுமுகமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை.

அடுத்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை (12-11-2017) வவுனியாவில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது. அதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் கலந்துகொண்டிருந்தார். இந்தக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவ்வாறு நடைபெற்றதாகத் தெரியவில்லை. நடைபெற்ற மத்திய குழுக் கூட்டம் குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளித்த எம்.ஏ.சுமந்திரன் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டதாகக் குறிப்பிடவில்லை.



ஊடகவியலாளர்கள் இது குறித்து வினா தொடுத்த போதும் தெளிவான பதில்கள் வரவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடாது என அக்கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி-யெழுப்பிய போது, தமக்கு இது தெரியாது என்றும், தங்களிடம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டால்அது குறித்து பரிசீலிக்கப்படும் என்று சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவுசெய்ய தமிழரசுக் கட்சி பின்வாங்குவது குறித்த கேள்வி எழுப்பப்பட்ட போதும் அதற்கான சரியான பதிலை சுமந்திரன் வழங்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனிக் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்பதும் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளின் நீண்ட நாள் கோரிக்கையாகவுள்ளது. இதனை தமிழரசுக் கட்சியே மறுத்து வருகின்ற தென்ற குற்றச் சாட்டும் உள்ளது. இதுவும் தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்குமிடையே முரண்பாடுகளை வளர்த்துள்ளது.

இதேவேளை, தமிழ் மக்கள் பேரவை யாழ்ப்பாணத்தில் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளது. தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக மாற்றமடையாது என அந்த அமைப்பின் இணைத் தலைவர்களில் ஒரு-வரான வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துவரும் நிலையில், தமிழ் மக்கள் பேரவையின் பங்களிப்புடன் புதிய கூட்டணி ஒன்று எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கூட்டணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியன பொது இணக்கப்பாட்டுடன் பங்குபற்றலாம் என்றும் கூறப்படுகின்றது. இத்தகவலை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஈ.பி. ஆர்.எல்.எப் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரனும் தெரிவித்துள்ளனர். எனவே, அடுத்து வரும் தேர்தல்களில் வடக்கில் மாற்றுக் கூட்டணியொன்று களமிறங்கும் என எதிர்பார்க்கலாம்.

இவை ஒரு புறமிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாக ஒரு கூட்டணி அமைந்தால் மக்களின் ஆதரவு அதற்கு கிடைக்குமா என்கிற கேள்வியும் எழுகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் உருவாக்கத்தின் பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தனர் என்பது இரகசியமானதொன்றல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இதில் பங்கேற்றன. விடுதலைப் புலிகளின் வழிநடத்திலில் இக்கூட்டமைப்பு இயங்கியதால் கட்சிகளுக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் அவை அப்போது வெளிக்காட்டப்படவில்லை.

புலிகள் இருந்த காலகட்டத்தில் வெளிப்படையாக முரண்பட்டவர் ஆனந்தசங்கரி மட்டுமே. விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் பகிரங்கமாகத் தெரிவித்தார். இதனால் புலிகளின் பட்டியலில் அவர் துரோகியாகவும் மாறினார். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி யாருக்கு உரித்தானது என்ற வாதம் ஏற்பட்டபோது, அக் கட்சியும் உதயசூரியன் சின்னமும் ஆனந்த சங்கரிக்கே உரித்துடையது என நீதி மன்றம் தீர்ப்பளித்தது. எனவேதான் தமிழரசுக் கட்சி மீண்டும் உயிரூட்டப்பட்டு அதன் வீட்டுச் சின்னம் கட்சியின் பொதுச் சின்னமாக்கப்பட்டது. வீட்டுச் சின்னத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களில் போட்டியிட்டதால், தமிழரசுக் கட்சி கூட்டமைப்பின் பிரதான கட்சியாக தாய்க் கட்சியாக தம்மை வெளிப்படுத்தி வருகின்றது.

தமிழர் காங்கிரஸ் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலக பின்னர் புளொட் அதற்குள் உள்வாங்கப்பட்டது. தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் ஆகிய நான்கு கட்சிகளும் பங்காளிக் கட்சிகளாகவுள்ளன.

போர் முடிவுற்றதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் ஆசனங்களை பகிர்வதில் தமிழரசுக் கட்சி முறையின்றி செயற்படுவதாகத் தெரிவித்து, அப்போதே முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தன. அது மட்டுமன்றி, தமிழரசுக் கட்சி தான்தோன்றித் தனமாக தீர்மானங்களை எடுத்து அவற்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிவாக வெளியிடுவதாகவும் பங்காளிக் கட்சிகளால் குற்றம் சாட்டப்படுகின்றது.

பல்வேறு முரண்பாடுகள் தோன்றினாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டிற்குள்ளிருந்து வெளியேறி தனித்து இயங்க எந்தவொரு கட்சியும் இதுவரை துணியவில்லை. அதற்கு காரணம் தனித்துப் போனால் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற முடியாது என்கின்ற அச்சமே. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி இவ்வாறு தனித்து இயங்கி பல தேர்தல்களில் படுதோல்வியடைந்தமை நல்ல உதாரணம்.

(தொடர்ச்சி 08 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514



OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 13

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.



குரு அரவிந்தன்

முதற்குடி மக்களில்பல்வேறு பிரிவினர் இருந்தாலும் அவர்கள் கனடாவின் பல்வேறு பாகங்களிலும் சிறுதொகையினராகப் பரந்து காணப்படுகின்றார்கள். குறிப்பிட்ட ஒரு தொகையினரைத் தவிர ஏனைய முதற்குடி மக்களால் போதிய கல்வியறிவு பெற முடியவில்லை. அதனால் அவர்களின் வாழ்க்கைத்தரம் பின் தங்கியதாகவே இப்பொழுதும் இருக்கின்றது. சிறு குற்றங்களுக்காக அடிக்கடி சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. முதற்குடி மக்களின் நலன்விரும்பிகளின் முறைப்பாடுகளைத் தொடர்ந்து இதற்கான காரணம் என்னவென்று ஆராய்வதற்காக இப்பொழுது மனிற்ரோபா மாகாணத்தில் விசாரணைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மனிற்ரோபா மாகாணத்தில் சுமார் 130,000 முதற்குடி மக்கள் பதிவு செய்யப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் சுமார் 60 வீதமான முதற்குடி மக்கள் தங்கள் பாரம்பரிய நிலமான றிசேவ் பகுதிகளில் வாழ்கிறார்கள். இத்தகைய றிசேவ் பகுதிகள் சுமார் 60 இங்கே இருக்கின்றன. இவர்கள் Cree, Ojibwe, Dakota, Oji-Cree and Dene போன்ற ஆதி மொழிகளைப் பேசுபவர்களாக இருக்கின்றார்கள். இங்கே உள்ள முதற்குடி மக்களில் குறிப்பிட்ட தொகையினர் அடிக்கடி சிறைவாசம் செய்வதற்குக் காரணம் என்ன என்பதை ஆராயும் பொருட்டு பிரதம நீதியரசர் கிளென் ஜேயல் (Glenn Joyal) தலைமையில் நான்கு நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழுவினர் விசாரணைகளை மேற்கொள்கிறார்கள். வடமனிரோபாவில் உள்ள கிறி இனத்தவர்களின் பிரதிநிதிகளும், ஏனைய முதற்குடி மக்களின் பிரதி நிதிகளும் இந்த விசாரணைக் குழவினருக்கு உதவி செய்யும் வகையில் விசாரணைகளில் பங்குபற்றினார்கள். இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்னவென்பதை அவர்களாகவே வெளியே சொல்லாதவரை அதற்கான நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் கடினமானது என்பது அங்கு தெரிவிக்கப்பட்டது. விசாரணைக் குழுவினரிடம் பிரச்சனைகள் என்ன என்று தெரிவிக்கப்படாவிட்டால் அடுத்த தலைமுறையினர் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படலாம் என்றும் அங்கு வந்திருந்த முதற்குடி மக்களின் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

முதற்குடி மக்களைப் பற்றி அறியும்போது அவர்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்த மிருகங்களைப் பற்றியும் அறிந்திருப்பது நல்லது. ஆதிகாலம் தொடக்கம் இந்த மிருகங்களே அவர்களுக்கு ஏதோ வகையில் பயன்பாடு உள்ளதாக இருந்தன. உணவுக்காகவும், வேட்டையாடும் போது உதவிக்காகவும், பயணிப்பதற்கு உதவியாகவும், இவற்றின் தோல்கள் ஆடை அணியவும், கூடாரம் போடவும் உதவியாக இருந்தன. வடதுருவத்தில் துருவக் கரடிகள், நாய்கள், ஓநாய்கள் என்று பல மிருகங்களும் அங்கே வாழ்ந்தன. இதை விடக் கடல் வாழ் பிராணிகளும் குறிப்பாக மீன்கள், திமிங்கிலங்கள், கடற்சிங்கங்கள், கடல் ஆமைகள் போன்றவையும் அவர்களின் வாழ்வில் ஓர் அங்கமாக இருக்கின்றன. தெற்கே எருமைகள், மான்கள், குதிரைகள், கரடிகள், நரிகள் என்று வேறு வகையான மிருகங்கள் வாழ்ந்தன. இப்போது ஓரளவு நாகரிகம் அடைந்துவிட்டதால் இயற்கைச் சூழலைப் பேணிக் காப்பதற்காக இவற்றை வேட்டையாடி அழிப்பதைச் சில கட்டுப்பாடுகளுடன் ஓரளவு தடை செய்திருக்கின்றார்கள்.

இத்தகைய மிருகங்களைத் தேவையில்லாமல் கொல்வதை அரசும் தடை செய்துள்ளது. சமீபத்தில் போ லாக்கரடிகளின் தோல்களால் செய்யப்பட்ட தரைவிரிப்புக்களை சீனா நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முற்பட்ட போது அதைத் தடை செய்யும்படி வனபாதுகாப்பு அதிகா ரியான ஜோநதன் கம்பாக்னா (Jonathan Campagna) என்பவரால் வேண்டு கோள் விடுக்கப்பட்டது.



அதேபோல கரிபோ (Boreal caribou) என்ற மானினங்களையும் அதன் அழிவில் இருந்து பாதுகாக்கும்படி சிக்ஸ் நேசன், ஜெலோஹெட் குழுவினரால் கேட்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதர வாக மாக்ரட் அட்வூட், அர்யுன் பாசு, ஹத்தி ஜோன்ஸ், கிறிஸ் சோ போன்றவர்களும் குரல் கொடுத்திருக்கிறார்கள். இயற்கைச் சூழலில் வாழும் இந்த மானினங்கள் விரைவாக அழிக்கப்படுவதால் அவற்றை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்புக்களை மாகாணங்களுக்கு விடப்பட்டாலும் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் போதுமானதாக இருக்கவில்லை. அல்பேர்டா, பிரிட்டிஷ் கொலம்பியா, ஒன்ராறியோ, கியூபெக் போன்ற மாகாணங்கள் இத்தகைய மான்களை எப்படிப் பாதுகாக்கலாம் என்ற தமது திட்டங்களை ஒட்டாவாவில் உள்ள திட்டமிடும் குழுவிடம் சமர்ப்பித்திருக்கின்றன. கனடாவில் சுமார் 51 இடங்களில் இந்த மான் வகைகள் கூட்டமாக வசிக்கின்றன. இதில் சுமார் 20 இடங்களில் மான்களின் தொகை பெருமளவில் குறைந்து செல்வதை சமீப காலமாக அவதானிக்க முடிந்தது. இத்தகைய மானினங்களை அழிவில் இருந்து விரைவாகக் காப்பாற்றாவிட்டால் வெகுவிரைவில் அவை அழிந்து விடக்கூடிய சாத்தியங்கள் நிறையவே இருக்கின்றன.

கல்காரியில் உள்ள பான்வ் (Banff) பகுதியில் உள்ள பழங்குடி மக்கள் பற்றிய அருங்காட்சியகத்தில் பல காட்சிப் பொருட்களைக் காண முடிந்தது. ஒரு பகுதியில் பிரித்தானியர்கள் வந்து இங்கே குடியேறியபோது அவர்கள் எத்தகைய ஆடை அணிந்திருந்தார்கள், என்ன வகையான உணவை உண்டார்கள் என்பன போன்ற விபரங்களைக் காட்சிப் படுத்தியிருந்தனர். காட்சியகத்தின் ஒரு கரையில் ஆணும் பெண்ணுமாக இருவர் சமையலில் ஈடுபட்டிருந்தார்கள். அருகே சென்று அவர்கள் என்ன சமைக்கிறார்கள் என்று பார்த்தேன். கயிறு ஒன்றிலே பழைய காலத்து கேத்தல் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதன் கீழே நெருப்பு மூட்டி தண்ணீரைக் கொதிக்க வைத்திருந்தார்கள். அருகே இன்னும் ஓர் இடத்திலே அந்தப் பெண்மணி றொட்டி போட்டுக் கொண்டிருந்தார். நாங்கள் ஆர்வமாக அதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். றொட்டியைத் திருப்பிப் போட்டுவிட்டு 'அவர் வெல்கம் ரு அவ பிளேஸ்' என்று சொல்லி எங்களுடன் ஆங்கிலத்தில் உரையாடினார். சிறிது நேரம் பொறுத்தால் நான் தேனீர் தயாரித்துத் தருவேன் என்றும் குறிப்பிட்டார். நான் றொட்டி கருகப் போகிறதே என்ற பயத்தில் அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் சரியான நேரத்தில் றொட்டியை எடுத்து விட்டு வேறு றொட்டியைப் போட்டார். 'தேனீருடன் றொட்டி சாப்பிட விருப்பமா?' என்று ஆசை காட்டினார். அவர்களின் விருந்தோம்பல் எங்களைக் கவர்ந்தாலும் மரியாதை நிமிர்த்தம் 'நன்றி, இப்பொழுதுதான் சாப்பிட்டோம்' என்று சொல்லிச் சமாளித்து விட்டு எங்கிருந்து இதற்குத் தேவையான பொருட்கள் கிடைக்கின்றன என்று வினாவினேன். அப்போது அந்த ஆண்மகன் அருகே வந்து 'எங்களுக்குத் தேவையான கோதுமை மா, தேயிலை போன்ற உணவுப் பொருட்கள் ரொறன்ரோவில் இருந்து குதிரை வண்டிகளில் வந்தன' என்று குறிப்பிட்டார். நான் அமைதியாக அதை உள்வாங்கிக் கொண்டு அப்படி என்றால் அந்த நாட்களில் ரொறன்ரோ என்ற பெயர் இருக்கவில்லையே, அந்த நாட்களில் 'ஜோர்க்' ( York) என்றுதானே அழைத்தார்கள் என்று நினைவுபடுத்தினேன். அவர் ஒரு கணம் தயங்கிவிட்டு நீங்கள் சொல்வதும் சரிதான். பலர் இங்கே வந்து போகிறார்கள், இதுவரை ஒருவரும் இந்தத் தவற்றைச் சுட்டிக் காட்டவில்லை.



நன்றி என்றார். எங்களுடன் நின்று ஒரு புகைப்படம் எடுக்கலாமா என்று கேட்டு ஒரு செல்பி எடுத்துக் கொண்டார். நாங்களும் எங்கள் ஞாபகத்திற்கு அவர்களுடன் நின்று ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அவர்கள் உண்மையான ஜோடிகளா அல்லது அவர்களுக்குக் கொடுத்த அந்தப் பாத்திரத்தை ஏற்றுத் தத்துரூபமாக நடித்தார்களா தெரியவில்லை!

### ஹைக்கூ!

சொத்துக்களில்
சிறந்த சொத்து
தன்னம்பிக்கை!

கவிஞர் இரா.இரவி

LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110
Scarborough ON. M1B 2W1
Tel: 647.350.7050
- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages


# உலகத்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

படுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. ASEAN நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக ஆராய்வதற் காக கனடா கடந்த செப்ரெம்பர் மாதம் அப்பிராந்தியத்திற்கான தூதுவர் ஒருவரை நியமித்துள்ளது.

ஜஸ்ரின் ரூடோவின் இந்த ஒரு வார காலப் பிரயாணத்திற்கு முன்னர் கனேடிய சர்வதேச வர்த்தக அமைச்சர் Francois - Philippe Champagne ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் இந்த ஆசிய நாடுகளு டனான வர்த்தக முயற்சியில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம் என்றார்.

ASEAN நாடுகள் அவுஸ்ரேலியா, ரஸ்யா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நல்ல வர்த்தக தொடர்புகளைப் பேணி வருகின்றன. ஆனால் அவற்றிற்கு கனடா வுடன் அவ்வாறான வர்த்தக தொடர்புகள் இல்லை. ASEAN நாடுகளுக்குக் கனடா வின் வர்த்தகம் தொடர்பாக நம்பிக்கை மற்றும் உறுதிப்பாடுகள் இன்னமும் போதிய அளவு ஏற்படவில்லை என்று கனடாவின் சீனாவிற்கான முன்னாள் தூதுவர் David Mulroney கூறினார்.

கனடா-ASEAN வர்த்தக சபையின் தலைவ ராக இருக்கும் முன்னாள் குவிபெக் மாகாண முதல்வரான Jean Charest தெரிவிக்கையில் அமெரிக்க அதிபர் தொடர்ந்தும் நாடுகளுக்குக்கிடையேயான வர்த்தக உடன்படிக்கைகளுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து வருகையில் கனடா வின் வர்த்தகத்தை ASEAN போன்ற பல வேறு நாடுகளுக்கு பன்முகப்படுத்த வேண்டும் என்றார். அவர் மேலும் தெரிவிக் கையில் கனடாவிற்கு சீனாவுடன் வர்த்த கத்தை விருத்தி செய்வதைவிட ASEAN நாடுகளுடன் வர்த்தகத்தை விருத்தி செய்வது அரசியல் காரணங்களால் இலகு வானதாகும் என்றார். ஆனால் ASEAN நாடுகளில் இருக்கும் இரண்டு நாடுகளான பிலிப்பைன்ஸ் மற்றும் பர்மா நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் கனடாவிற்கு அந்நாடுகளுடனான வர்த்தகத் திலும் சில அரசியல் பிரச்சனை களை உருவாக்கும்.



2017 நொவம்பர் 11 இல் ஊடகவியலாளர் ஒருவர் கனேடியப் பிரதமரிடம் பிலிப்பை ன்ஸ் இல் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் அதுவும் அரச பாதுகாப்பு அதி காரிகளால் போதை மருந்துக் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் பல ஆயிரக்கணக் கானோர் கொல்லப்பட்டது தொடர்பாக பிலிப்பைன்ஸ் அதிபர் Rodrigo Duterte வுடன் பேசுவீர்களா எனக் கேட்டதற்கு கனேடியப் பிரதமர் தனக்கு பிலிப்பைன்ஸ் அதிபருடனான தனிப்பட்ட சந்திப்பு எதுவும் ஒழுங்கு செய்து தரப் படவில்லை. ஆனால் அவருடன் உரை யாடும் சந்தர்ப்பம் வந்தால் தான் அவருடன் கதைக்க பலதரப்பட்ட விடயங்கள் உள்ளன. அவற்றுடன் இதுபற்றியும் பேச முடியும் என்றார்.

பிலிப்பைன்ஸ் அதிபர் தனது உரையில், தனது நாட்டில் Marawi இல் நடைபெற்ற ISIL க்கு ஆதிவரான தீவிரவாதிகளுக்கு எதிரான ஐந்து மாதகாலப் போரில் உதவிய நாடுகளுக்கு எல்லாம் நன்றியைத் தெரிவித்ததோடு வன்முறை, தீவிரவாதம், பயங்கரவாதம் போன்ற பாதுகாப்பிற்கு எதிரான செயற்பாடுகள் ஒரு நாட்டின் எல்லைக்குள் மட்டும் நடைபெறுவன அல்ல என்றார். இவை நாடுகளின், பிராந் தியங்களின், உலகின் வர்த்தகத்தையும் பாதுகாப்பையும் பாதிக்கும் என்றார். போதை மருந்துக் கடத்துதல் எமது சமுதாயத்தை மிகவும் பாதிக்கிறது என்றார்.

## APEC மாநாட்டில் கனேடியப் பிரதமர்

பசுபிக் சமுத்திரத்தை சுற்றியுள்ள 21 நாடுகளின் தலைவர்களது மாநாடு (Asia - Pacific Economic Cooperation) வியட் நாமில் 2017 நொவம்பர் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் நடைபெற்றது. இங்கு கனடாவும் மற்றும் 10 நாடுகளும் TPP (Trans-Pacific Partnership) உடன்படிக்கை தொடர்பாக சில உடன்பாடுகளுக்கு வந்தன. இவ்வுடன்படிக்கையில் இருந்து அமெரிக்கா விலகிய பின்னர் தற்போது 11 நாடுகளே இதில் உள்ளன. இதனால் இவ்வுடன் படிக் கையை தற்போது TPP 11 என ஊடக வியலாளர்கள் சிலர் அழைக்கின்றனர். ஆனால் இது உத்தியோக பூர்வமாக CPTPP (Comprehensive and Progressive Agreement for Trans-Pacific Partnership) என அழைக்கப்படுகின்றது. அமெரிக்கா இவ்வுடன்படிக்கையில் இருந்து விலகினா லும் ஏனைய 11 நாடுகளுக்கு இடையே யான கடந்த வருட வர்த்தகம் $356.3




பில்லியன் ஆகும்.
இவ்வுடன்படிக்கை தொடர்பாக எல்லா நாடுகளும் ஒரு தீர்மானத்திற்கு வராதபடி யால் மாநாட்டின் முடிவில் ஓர் உடன் படிக்கையும் கையெழுத்து இடப்படவில்லை. இம் மாநாட்டில் ஒரு தீர்மானமும் எடுக்கப் படாததற்கு அவுஸ்ரேலியாவும், நியூசிலாந் தும் கனடாவைக் குற்றஞ்சாட்டின. ஆனால் கனேடியப் பிரதமர் அறிவார்ந்த சொத்துரிமை (Intellectual Property Rights) மற்றும் கலாசார விதிவிலக்குகள் (Cultural Exemptions) தொடர்பாக தகுந்த முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னரே கனடா இந்த உடன் படிக்கையில் கையெழுத்திடும் என்றார்.

# மாற்றுக்...

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

இப்போது, தனியானதொரு கூட்டணியினை அமைத்து களத்திலிறங்க கூட்டமைப்பின் பங்களிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர். எல்.எப் துணிந்துள்ளமைக்கு தமிழ் மக்கள் பேரவையும் அதனால் நடத்தப்பட்ட 'எழுக தமிழ்' பேரணியும்தான் காரணம் என்று கூறினால் அது தவறாகாது. 'எழுக தமிழ்' கூட்டங்கள் வட மாகாண முதலமைச்சர்



சி.வி.விக்னேஸ்வரனை தலைமையாகக் கொண்டு கஜேந்திரகுமார் அணியினரும், சுரேஸ் பிரேமச்சந்திரன் அணியினருமே முன்னின்று நடத்தினர். இக்கூட்டங்களில் கணிசமான இளைஞர்கள் பங்கேற்றனர். 'எழுக தமிழ்' நிகழ்வுகளின் நோக்கம் குறித்து பல்வேறு வியாக்கியனங்கள் வழங் கப்பட்டாலும் இதில் சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்களுக்கான மக்கள் பலத்தை அதிகரிப் பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் தோல்வியடைந்த கஜேந்திரகுமாருக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் இதுவே பிரதான நோக்கமாக இருந்தது. இப்போது இந்த இரு தரப்பும் இணைந்து பொதுச் சின்னம் ஒன்றில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் களமிறங்கினால் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கே புள்ளடி போட்டு பழகிவிட்ட தமிழ் மக்கள் புதிய கூட்டணிக்கு ஆதரவ ளிப்பார்களா என்பதை இப்போது அறுதி யிட்டுக் கூறவியலாது. ஜனவரியில் நடை பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அதனை நாம் கண்டுகொள்ள முடியும்.

27வது ஆண்டு கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | தாரணி இந்திரராஜ் |
| | பிரசாந்தி அருள்தாசன் |
| பதிப்பு: | Canyon Press Inc. |

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# கார்த்திகை 27



மண்மீட்கப் போராடி மண்ணில் மருணித்த மாவீரர்களை
மாசற்ற புனிதர்களை மலர்தூவி நினைவுகூர்வோம்வாரீர்

விடுதலையின் உணர்ச்சிளை உங்கள் உள்மனதில் சுமந்து
விலை மதிப்பில்லா உயிர்களை தமிழுக்காய் ஈந்த வீரர்களே

எல்லை மீறிய பகைவர்களை எதிர்த்து நின்று போராடி
எம் இனத்தையும் மண்ணையும் காக்க முன்னின்ற வீரர்களே

காடு மேடு பள்ளம் தாண்டி கடும் வெய்யில் சூடு தாங்கி
கார் மேக மழை நனைந்து எம்மை கண் இமைபோல் காத்தவரே

சந்ததியின் வாழ்வுக்காய் சலிக்காது சமர்செய்து உயிர் நீர்த்த
சக்தி வாய்ந்த மாவீரர்களும், வீராங்கனைகளும் நீங்களே

விண்உறைந்த மாவீரர் இல்லங்கள் சென்று தொழுதிடநாம்
விளக்கேற்றி வைத்து விழி உதிரும் கண்ணீர்சிந்தி வணங்கிடுவோம்

தன்மானம் கொண்டவன் தமிழன் என்ற தாரக மந்திரத்தோடு
தம் உயிர் நீர்த்த மாவீரர்களே எங்கள் வீர வணக்கம்

யாகத்தீயில் வெந்து மடிந்த மாவீரர்களே இன்று நாம்
உங்கள் இல்லாமையை இட்டு உணர்ந்து பெரிதும் வாடுகிறோம்

காவல் தெய்வம் போல் எம்மைக் காத்த காளையரே கன்னியரே
கார்த்திகை திங்கள் இருபத்தேழில் எங்களது வீரவணக்கம்



**கவிநாதம் பரந்தாமன்**

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP
- A private math institute -

"Teaching Experience in Math for more than 23 years"

# G12 Advanced Function

*Dear Students!*

*If your average is low, it is not late to improve your marks high!*

## We help to Improve your Marks from Mid-term & Onward

With more than 23yrs of experience in teaching math

*Geting High Score in Advanced Function*
*is one of the most important subjects for* **UNIVERSITY ACCEPTANCE**

**Guaranteed Results**

G11- Function
G10- Advanced level
2nd Semester Starting NOW

Limited Space **416-666-5515**

61 Snowy Owl Way (Markham & Steeles)

# அப்பா பெயரைக் காப்பாற்ற வேண்டும்!

## துல்கர் சல்மான் நேர்காணல்

### சந்திப்பு: கண்ணன்


“தமிழில் நடிப்பதுதான் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. டப்பிங்கில்கூட தமிழ்தான் எனக்கு நன்றாக வருகிறதென்று டெக்னீ சியன்கள் சொல்கிறார்கள். கேரளாவைவிட தமிழ்நாட்டில்தான் அதிகம் இருந்திருக் கிறேன். என் அப்பா முதன்முதலா சொந்த வீடு கட்டியதும் சென்னையில்தான். இங்க தான் படித்தேன், வளர்ந்தேன். ஐ லவ் தமிழ், தமிழ்நாடு.” தமிழ் பத்திரிகை நேர் காணல் என்பதற்காக இல்லாமல் உணர்வு பூர்வமாகப் பேசுகிறார், துல்கர் சல்மான். மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டியின் மகன்!

முத்தான கதைகளையும் சத்தான கதாப் பாத்திரங்களையும் தேடித்தேடி நடித்து திறமைக்கு தீனி போட்டுக்கொள்ளும் கெட்டிக்காரர். ஒரே சமயத்தில் மலையாளம், தமிழ் இரு திரைகளிலும் நடிகராக வாகை சூடி வலம் வந்துகொண்டிருக்கிறார். மலை யாள சூப்பர் ஸ்டார் மம்முட்டியின் மகன் என்ற பந்தாவோ, குறுகிய காலத்தில் பெரிய ரசிகர் பட்டாளத்தை பெற்று விட்டோம் என்ற கர்வமோ துளியுமில்லாத இயல்பில் ஈர்க்கிறார். திரைப்பட நிகழ்ச்சி ஒன்றிற்காக சென்னை வந்திருந்த துல்கர் சல்மானை சந்தித்துப் பேசினோம்.

**தமிழ், மலையாளம் இரண்டு மொழிகளி லுமே நல்ல பெயர் வாங்கியிருக்கிறீர்கள். எப்படி இருக்கிறது இந்த திரைப் பயணம்?**

எதிர்பார்த்ததைவிட அருமையா போய்க் கொண்டு இருக்கிறது. நான் கொடுத்து வைத்தவன்தான். இத்தனை சீக்கிரம் ரசிகர் களுடைய அன்பும் ஆதரவும் கிடைத்ததை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. அமெரிக்காவில் ‘பிஸினஸ் மேனேஜ் மெண்ட்’ படித்துவிட்டு, அங்கேயே வேலை கிடைத்து, பிறகு துபாயில் கொஞ்சநாள் வேலை பார்த்தவரை, திரைத்துறைக்கு வரு வேனென்று நினைக்கவில்லை. துபாயில் இருந்து இந்தியா திரும்பியதும் மும்பையில் இருக்கும் நடிப்பு பள்ளியில் சேர்ந்து படித்த போது, திரைப்பட நடிப்பென்று எனக்குள் எழுந்த சின்ன பொறி, இவ்வளவு பெரிய இடத்துக்கு என்னை கொண்டுவரும் என்று எதிர்பார்க்கவில்லை. இயக்குநர் மணிரத்னம் படங்களை பெரிய ரசிகனாகப் பார்த்து வியந்து கொண்டிருந்தவனுக்கு, அவர் இயக்கத்திலேயே நடிக்க வாய்ப்புக் கிடைத்தது கனவு மாதிரி இருக்கிறது. ‘ஓகே கண்மணி’, ‘வாயை மூடி பேசவும்’ படங்களுக்குத் தமிழ் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பு கிடைத்ததற்கெல்லாம் நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நன்றி மணி சார், தாங்ஸ் தமிழ் ரசிகர்கள்!

**உங்களுடைய கதை தேர்வுகள் நன்றாக இருக்கிறதே?**



வித்தியாசம்தான், சிறப்புதான் எல்லோரை யும் ஈர்க்கும். கோடிக்கணக்கான ரசிகர்கள் படம் பார்க்கும்போது, “இது புதுசா இருக்கே இது நல்லா இருக்கே” என்று யோசித்தாலே அந்தப் படம் வெற்றி பெற்று விடும். அந்த யோசனையை ரசிகனுக்குள் கொண்டு வருகிறது மாதிரியான அம்சங்கள் இருக்கிறதா இல்லையா என்பது கதை கேட்கும்போதே தெரிந்துவிடும். அப்படி சிறப்பு இருக்கிற மாதிரியான கதைகளைத் தான் நான் தேர்வு செய்து நடிக்கிறேன், அவ்வளவுதான்.

**அப்பா மம்முட்டியிடம் கற்றுக்கொண்டது என்ன? நடிப்பில் உங்களுக்கு பயிற்சி கொடுப்பாரா?**

அவர் பெயரை கெடுக்காத அளவுக்கு நல்ல பெயர் வாங்குவதே அவருக்கு சந் தோஷம் தரும். மற்றபடி, “இப்படி பண்ணு, இதைச் செய்” என்று ஒருபோதும் அவர் சொன்னது இல்லை. “எனக்கெல்லாம் யாரும் சொல்லிக் கொடுத்ததில்லை நானா கத்தான் என்னை வளர்த்துக் கொண்டேன். யாரையும் ஃபாலோ பண்ணா மல் உனக்கு என்ன வருதோ, எது சரின்னு படுதோ அதை மட்டும் செய். தவறுகளிலிருந்து கூட நிறையக் கற்றுக்கொள்ளலாம்” என்று மட்டும் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதை கவனத்தில் வைத்திருந்தாலே போதுமென்று நினைக்கிறேன். அவர்தான் எனக்கு முன்மாதிரி.

**அப்பா நடித்த தமிழ் படங்களில் உங்களுக்குப் பிடித்த படம் எது?**

தளபதி, அழகன்.

**தற்போது நீங்கள் நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் பற்றி?**

பிஜாய் நம்பியார் இயக்கத்தில் ‘சோலோ’ படத்தில் நடித்து முடித்திருக்கிறேன். இதில் நான்கு வித்தியாசமான வேடங்கள். அப்புறம் ‘மகாநதி’. இந்த இரண்டு படங்களுமே தமிழ், மலையாளம் இரண்டிலுமே வெளி யாகிறது. தவிர ‘கர்வான்’ என்ற இந்தி படத்திலும் ஒப்பந்தம் ஆகியிருக்கிறேன்.

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)

FOR SALE Finance Available
Reduced by $100,000

• 4 Bedroom
• Wide Lot - 53.25ft Frontage
• 4 Car Parking Space
• Driveway Interlock 4” Thick
• Premium Lot with Front Ravine
• Kitchen - Granite Countertop
• Close to All Amenities
• Year Old Gas Stove
• Library Room
• Backyard Deck And Etc...
$1,249.999
40 Smoothewater Ter. Markham, ON

Shiva Sharma
(Shiva Sivagnanaselvam)
ROYAL LEPAGE
Dir: 416.666.5515 Off: 416.321.2228
Vision Reality Inc. Independently Owned and Operated
2210 Markham Rd, Unit 1 Toronto, ON M1B 5V6

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## எமக்குப் பயனுள்ள உணவு மருத்துவம்


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*




- ஒருவர் தினமும் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டுவந்தால் மலச்சிக்கல் ஏற்படாது. உடல் ஆரோக்கியமாக இருக்கும். மலச் சிக்கல் உள்ளவர்கள் விளாம்பழம் அல்லது வில்வம் பழத்தின் உட்சதையை எடுத்துச் சர்க்கரை சேர்த்து உண்டு வர மலச்சிக்கல் நீங்கிவிடும்.

- உணவில் வல்லாரைச் சுண்டல் சேர்த்து உண்டு வந்தால் ஞாபகசக்தி விருத்தியாகும்.

- குடற்புண், இரைப்பைப்புண் உள்ளவர்கள் வாரத்தில் இரண்டு, மூன்று தடவை வாழைத் தண்டு அல்லது வாழைக்கிழங்கு எடுத்துப் பருப்புச் சேர்த்துக் கறியாகவோ, பச்சடியா கவோ, பாற்சொதியாகவோ செய்து சாப்பிட்டு வர பூரண குணம் கிடைக்கும்.

- கிராணிக் கழிச்சல் எனப்படும் நாட்பட்ட வயிற்றோட்டம் உள்ளவர்களும் சாப்பிட்ட பின்பு மலம் கழிக்கும் பிரச்சினை உள்ள வர்களும் வாழைத் தண்டுச் சாற்றை தினம் ½ கிளாஸ் பருகி வர குணம் காணப்படும்.

- மூலநோயினால் பாதிக்கப்படுவோர் கருணைக்கிழங்கு அல்லது தாமரைக் கிழங்கை அடிக்கடி கறிப்பாகம் செய்து உண்டுவர குணம்பெற்று நிம்மதியடைவீர்கள்.

- அக்கரம் என்னும் வாய்புண்ணால் தவிப் போர் அகத்தி இலையை எடுத்து பாற்சொதி செய்து சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம். மணித்தக்காளிப்பழம் அல்லது இலையையும் சுண்டி உணவுடன் சேர்த்து உண்டுவர குணம் கிடைக்கும்.

- சிறுநீர் கழிக்கும் வேளை எரிச்சல் உள்ள வர்கள் வெள்ளரிக்காயை உண்டு வரலாம். அல்லது பாற்கறியாக பாகம் செய்து பாவித்துவர குணம்பெறலாம்.

- வெள்ளை படுதல் (**Leucorrhoea**) என்னும் நோயால் பாதிக்கப்படும் பெண்கள் நீற்றுப்பூசணிக்காயை கறிப்பாகம் செய்து சாப்பிட்டு வர நற்பயன் பெறலாம்.

- மாதவிடாய் காலங்களில் அதிக குருதி இரத்தம் வெளியாகும் 'பெரும்பாடு' என்னும் நோயினால் அவதியுறும் பெண்கள் விடத்தல் இலையைப் பிட்டு மாவுடன் சேர்த்து நன்கு குழைத்துப் பிட்டு அவித்து உண்டு வந்தால் நற்பயன் பெறுவீர்கள்.

- சிறுநீரகக் கல்லால் பாதித்து துன்பப் படுவோர் முள்ளங்கி, சுரைக்காய் என்பன வற்றை கறிப்பாகம் செய்து உணவில் சேர்த்துப் பாவித்துவர குணம் கிடைக்கும்.

- தாய்ப்பால் கொடுத்துவரும் மாதர்கள் தாய்ப்பால் அதிகம் சுரக்க ஈரப்பலாக்காயை கறிப்பாகம் செய்து உணவுடன் உண்டுவர தங்கள் குழந்தைகள் உற்சாகப்படுவதைக் காணலாம். ஒன்றை முக்கியமாக கவனிக்க வேண்டும். ஈரப்பலாக்காயை கறிப்பாகம் செய்யும்போது வெந்தயம், உள்ளி, முருங் கையிலை என்பவற்றை சேர்த்துச் சமைப்ப தால் எம்மை வருத்தும் வாயு வயிற்றுப் பொருமல் ஏற்படாது பாதுகாத்துக்கொள்ளும்.



- ஆண்களைப் பொறுத்தமட்டில் ஈரப்பலாக் காய் உணவை அடிக்கடி பாவித்து வந்தால் சொற்பனத்தில் தானாகவே விந்து வெளி யேறும். இதனால் உரியவருக்கு பாதிப்பு ஏற்பட இடம் உண்டு எனவே தொடர்ந்து எடுப்பதை தவிர்க்கவும்.

- நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் ஒரு கிழமையில் 2,3 தடவை பாவற்காய் சாறு ½ கிளாஸ் வீதம் பாவித்து வந்தால் நற்பயன் உண்டு. அது குடலில் உள்ள குளுக்கோஸ் அகத்துறிஞ்சப்படுவதைக் குறைப்பதுடன் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பதை கட்டுப்படுத்தும். மேலும் சிறுகுறிஞ்சா இலை 2,3ஐ எடுத்தும் காலையில் பச்சையாகச் சாப்பிட்டு வந்தால் நற்பயன் பெறமுடியும். மேலும் அதனை சுண்டலாகவோ, அல்லது கறிப்பாகம் செய்தோ பாவித்து வரலாம்.

- மழை அல்லது பனிக்காலத்தில் எமக்கு ஏற்படும் தொய்வு (ஈழை) முட்டு நோய்க்கு மொசு மொசுக்கை இலையை துவையல் செய்து பாவித்து வந்தால் நற்பயன் பெறலாம்.

- பெண்களுக்கு பெரும்பாடு (அதிக தீட்டுப்படுதல்) என்னும் வியாதிக்கு வாழைப் பூவை கறியாக்கிப் பாவித்து வந்தால் சுகம் கிடைக்கும். அகத்திப் பிஞ்சும் கறியாக்கிப் பாவிக்கலாம். இருமல் சளியுள்ளவர்கள் தூதுவளை இலையை அரைத்து உண்டு வர குணம் கிட்டும்.

- சலக்கடுப்பு, கால்வீக்கம் தணிய செவ்வரத் தம்பூவை பச்சடி செய்து உண்டு வந்தால் குணம் கிடைக்கும். உடல்சூடு தணியும்.

- குழந்தை இல்லாத பெண்கள் தங்கள் உணவில் இதரை வாழைப்பூவை கறிப்பாகம் செய்து பாவித்துவந்தால் நற்பயன் உண்டு. செவ்வாழைப்பழத்தையும் பாவித்தாலும் நற்பயன் உண்டு.

- பொன்னாங்காணி இலையை நெயில் வதக்கி கறிப்பாகம் செய்து பாவித்து வந்தால் கண்பார்வை தெளிவுறும். உடலும் பலம் பெறும்.

- மஞ்சள் கருசிலாங்கண்ணி இலையை கறிசமைத்து சாப்பிட்டு வந்தால் பித்தம் சம்பந்தமான நோய் நீங்கும்.

- வேப்பம்பூ வடகம் உண்டு வந்தால் இரத் தத்தில் உள்ள கொலஸ்ரோல் அளவைக் குறைக்கும். மேற்கூறிய உணவு மருந்து களைப் பாவித்துவந்தால் நற்பயன் பெறு வீர்கள். எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.




**Nimal Subramaniam**

**Cell: 416.816.7994** **Email:neel900@hotmail.com**

La Capitale Financial Group | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# சுவாசம் - சூட்சுமங்கள் மற்றும் சொல்லப்படாத சில தகவல்கள்!

## சத்குரு வாசுதேவ்

ஆழமாக சுவாசியுங்கள் என்ற குறிப்பை பலவிதமான முகாம்களில் கேட்டிருப்பீர்கள். எனினும் அதிக ஆழமாக்க முயன்றால் இருமத்துவங்கும் அளவு நம் ஆழமான சுவாசம் கூட ஆழமில்லாமல் இருப்பதே நிதர்சன உண்மை. அப்படியிருக்க ஈஷாவில் கற்றுத்தரப்படும் ஆசனப்பயிற்சிகளைச் செய்வதுமூலம் சுவாசம் தானாக ஆழமாகும் அழகை இக்கட்டுரை விளக்குகிறது.

கேள்வி சூரியக் கிரியா பயிற்சியிலும் ஆசனா செய்யும்போதும் இயல்பான சுவாசத்தைவிட சற்று ஆழமாய் சுவாசம் செய்யுங்கள் என்று குறிப்பு கொடுக்கிறீர்கள், எதனால்?

சத்குரு: பொதுவாக, மனிதர்கள் ஒரு நிமிடத்திற்கு, 12இலிருந்து 15 முறை சுவாசம் செய்கிறார்கள். 20 சதவிகிதத்திற்கும் குறைவாகவே தனது நுரையீரலின் திறனை மக்கள் பயன்படுத்துகின்றனர். உங்கள் நுரையீரலின் கொள்ளளவு அதிகரிக்கும் போது, இயல்பாக சுவாசம் செய்யும் போதே, நீங்கள் விடும் சுவாசத்தின் எண்ணிக்கையும் குறையும். மூச்சை அடக்கிப் பிடிக்காமல் இது நிகழும். உங்களது புரிதலில் இல்லாவிட்டாலும், இந்தப் பூமி எப்படி சுழல்கிறது என்பது உங்கள் உடலுக்குத் தெரியும். சூரியனில் நிகழ்வது தெரியும், இங்கு நிகழ்வது அத்தனையும் தெரியும். பாரம்பரிய ஹட யோகப் பயிற்சிகளைப் பின்பற்றினால், காலப்போக்கில் உங்கள் சுவாசத்தின் வேகம் குறைவதைப் பார்க்க முடியும். இதனை வெளிப்படுத்த, கவித்துவமான சில சொல்லாக்கங்கள் உள்ளன. ஒரு நிமிடத்திற்கு 11 என உங்கள் சுவாசம் குறைந்தால், விலங்குகள், பட்சிகளின் மொழி உங்களுக்கு புரியும் என்பார்கள். ஒரு நிமிடத்திற்கு 9 என உங்கள் சுவாசம் குறைந்தால், இந்தப் பூமியின் மொழி உங்களுக்கு புரியும். ஒரு நிமிடத்திற்கு 7 என உங்கள் சுவாசம் குறைந்தால், இந்தப் பிரபஞ்சத்தில் அறிய வேண்டிய அனைத்தையும் நீங்கள் அறிவீர்கள். அதாவது, உங்கள் உடல் திடமாக, மந்தமில்லாமல் அனைத்தையும் பரிபூரணமாய் கிரகித்துக்கொள்ளும் திறனுடன் இருக்கிறது என்று அர்த்தம். நாம் தற்சமயம் இருக்கும் நிலையிலும் உடலால் அத்தனை விஷயங்களையும் கிரகித்துக் கொள்ள முடியும். அப்படி இல்லாவிட்டால், அதனால் உயிர் வாழமுடியாது. உங்களது



புரிதலில் இல்லாவிட்டாலும், இந்தப் பூமி எப்படி சுழல்கிறது என்பது உங்கள் உடலுக்குத் தெரியும். சூரியனில் நிகழ்வது தெரியும், இங்கு நிகழ்வது அத்தனையும் தெரியும். நீங்கள் வாழும் காலம் வரை, உங்கள் உடல் அத்தனை விஷயங்களுக்கும் ஏற்ப தன்னை மாற்றிக் கொள்கிறது. உங்கள் உடலமைப்பு மேன்மை அடைய அடைய, ஒரு நிமிடத்திற்கு நீங்கள் செய்யும் சுவாசத்தின் எண்ணிக்கை இயல்பாகவே குறைந்து விடுகிறது. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் கூறுவதை உங்களால் புரிந்து கொள்ள முடியும். உங்கள் சுவாசம் மென்மேலும் திடமாகிக் கொண்டே செல்லும் போது, வாழ்வில் ஏற்படும் இடர்கள் மறைந்துவிடுகின்றன. என்ன நடக்கிறது என்பதை உங்களால் தெளிவாகப் பார்க்க முடியும். இதனை யோகாசனங்களின் மூலம் சாதித்துக் கொள்ளலாம், அல்லது பரிபூரண தியான நிலையை எட்டுவதன் மூலம் அடையலாம். உதாரணத்திற்கு, நீங்கள் சூன்ய தியானம் செய்தால், உங்கள் சுவாசத்தின் வேகம் குறைகிறது. சுவாசமே இல்லாதது போல் ஆகிவிடுகிறது. சூன்ய தியானம் செய்யும்போது, உங்களில் பலபேரது சுவாசம் ஒரு நிமிடத்திற்கு ஒன்பதிலிருந்து பத்து முறை மட்டுமே நிகழ்கிறது.

மீண்டும், சில கணங்களில் வேகமான சுவாசம் நடைபெறத் துவங்குகிறது. இந்நிலையினை தியானம் மூலமும் அடையலாம். ஆனால், உடலையும் இது போன்ற தீவிர நிலைக்கு உயர்த்தி, அதில் நீடிக்கக்கூடிய நம்பகமான கருவியாய் ஆக்க, போதிய ஆயத்தப் பயிற்சிகள் அவசியம். தியானம் செய்வதனால், இன்று நமது சுவாசத்தின் வேகம் குறையலாம், நாளை அப்படி இல்லாமல் போகலாம். ஆனால், உடலைத் தயார் செய்தால் முன்னேற்றம் தடையாறாது, நிலையாய் இருக்கும். தினசரி பயிற்சி செய்வதற்கான முக்கிய காரணம் இதுதான். தினசரி பயிற்சிகள் செய்யும் போது, அது படிப்படியாய் உங்களை மேலேற்றும். வெறும் தியானத்தினால், ஒரு நாள் நீங்கள் உயர்ந்த நிலையிலும், மற்றொரு நாள் அப்படி இல்லாமலும் போவதற்கான வாய்ப்புகள் அதிகம். உங்களது இயல்பான சுவாசத்தை நீங்கள் நீட்டித்தால், சற்று நேரம் கழித்து மூச்சு வாங்கும் சூழ்நிலை ஏற்படும். அது, இந்த உடலமைப்பு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கான வழியல்ல. கஷ்டப்பட்டு, பலவந்தமாக எதையோ திணிப்பதற்கு அது ஒப்பாகும். அதேசமயம், நீங்கள் ஆசனங்களைப் பயிற்சி செய்தால், இயல்பாய் செய்வதைவிட சற்றே ஆழமாய் சுவாசம் செய்தால், காலப் போக்கில் சுவாசத்தின் எண்ணிக்கை குறையும். உங்கள் இயல்பான சுவாசம் மென்மையாகவும், இயல்பைவிட சற்றே ஆழமாகவும் இருக்கும். உடல், படைப்பின் ஒரு துளி என்பதால் அதற்கு இந்தப் படைப்பில் உள்ள அத்தனை விஷயங்களும் புரியும். அதற்கு படைப்பை பற்றிய அத்தனை விஷயங்களும் தெரியும்.

ஏகப்பட்ட தொந்தரவுகள் நம்மைச் சூழ்வதால் நம்மால் அதனை உணர முடிவதில்லை. உதாரணத்திற்கு சொன்னால், இடி இடித்துக் கொண்டிருக்கிறது, மின்னலும் மழையும் தாக்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ரேடியோ கேட்க வேண்டும் என நீங்கள் விரும்பினால் எப்படி இருக்கும்? மழை திடீரென நின்றால், ரேடியோ தெள்ளத் தெளிவாக கேட்கும், அல்லவா? அதனால், நமக்கு பின்னால் ஓடிக் கொண்டிருக்கும் ஓட்டத்தை நிறுத்தினால், அத்தனையும் புரியும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

## வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா கல்லூரிக்கு $1565 பெறுமதியான 2 Multi-Media Overhead Projectors ஐ அன்பளிப்பு செய்துள்ளது. ஒரு எறிகருவி பாடசாலைப்



பிரதான மண்டபத்தில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ளது. இரண்டாவதை தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியும் பழைய மாணவருமான திரு ச. அமிர்தலிங்கம் அவர்கள் மூலம் அதிபர் திரு சி. கிருபாகரன் அவர் களிடம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் எமது சங்கத்தின் சார்பில் கையளிக்கப்பட்டுள்ளது. இது வகுப்பறைகளில் குறிப்பாக விஞ்ஞான புவியியல் மற்றும் வரலாற்றுப் பாடங்களுக்குத் தேவைக்கேற்றவாறு சுழற்சி முறையில் பயன்படுத்தப்படவுள்ளது. இந்த முன்னுதாரணமான செயற்பாட்டுக்கு $1565 நிதி உதவி அளித்த காலஞ்சென்ற திருமதி சாயாதேவி (ஆச்சி) செல்வராசா அவர்களது குடும்பத்தினருக்கு மீண்டும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகட்டும். மேலும் இத்திட்டத்தை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றிய பழையமாணவரும் பொறியியலாளருமான திரு.சிந்துசன் தர்மராஜேந்திரன் அவர்களுக்கும் எமது சங்கத்தின் சார்பிலும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பிலும் நன்றி கலந்த பாராட்டினைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சி. இளஞ்செழியன் (தலைவர்)
வேலணை மத்திய கல்லூரிப் பழைய
மாணவா சங்கம்-கனடா



# பெண்களுக்கு எதிரான வன்முறை



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

உலகெங்கிலும் பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய நிறையவே பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகிறது. மூன்று பெண்களில் ஒருவர் தன் வாழ்நாளில் பால்வேறுபாட்டு அடிப்படையில், உடலியல் ரீதியான வன் முறைக்கு உட்பட்டு வருவதாக கணிப் பீடுகள் கூறுகின்றன. அதுவும் தனது துணைவராலேயே அதிகம் இவ்வன்முறை நடைபெறுகிறது என்பதும் உண்மையாகும். அவுஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் 40-70 வீதமான பெண்கள் தங்களது சொந்தத் துணைவர் களால் கொலை செய்யப்படுகின்றனர். எழுபது சதவீதமான வரையில் பெண்கள் தமது வாழ்நாளில் கணவரால் அல்லது தெரிந்தவர்களால் பாலியல் தொந்தரவு களுக்கு உட்படுகின்றனர். 16 வயதுக்கு உட்பட்ட பெண்களில் 50 வீதமானோர் பாலியல் தொந்தரவுகளுக்கு உட்படுகின்ற னர். 18 வயது வருவதற்கு முன்பே 60 மில்லியன் பெண்பிள்ளைகள் தென்னாசியா, ஆபிரிக்காவின் சில பகுதிகளில் திருமணத்திற்கு பலவந்தப்படுத்தப்படுகின்ற னர். 30 நாடுகளில் 200 மில்லியன் பெண்கள் வரையில் பெண் உறுப்பு சிதைப்பு (Female Genital Mutilation) உட்படுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் பத்து பெண்களில் ஒருவருக்கு மறைமுகமான பயமுறுத்தல் நிகழ்கிறது. இன்றுள்ள பாடசாலைகளில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகளுக்கு கணக்கேயில்லை.

ஐக்கிய நாடுகள்சபை நொவம்பர் 25ஆம் திகதியை பெண்களுக்கு எதிரான வன் முறையை நீக்கும் தினமாக (International Day for the Elimination of Violence against Women) அறிவித்துள்ளது. இதில் உலக அரசுகள், சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் எல்லாம் இணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வலியுறுத்தியுள் ளன. உலக சுகாதார நிறுவனம் (WHO) இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த சர்வதேச தினம் எதற்காக தேவைப்படுகிறது என்பதற்குரிய விளக்கங் களும் அளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கனடாவை மட்டும் எடுத்துக் கொண்டால் இங்கு 16 வயதிலிருந்து அரைவாசிக்கு மேற்பட்ட பெண்கள் ஒரு தடவையாவது உடலியல் அல்லது பாலியல் வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர். 67 வீதமான கனடியர் கள் தங்களுக்கு தெரிந்த வரையில் ஒரு பெண்ணாவது உடலியல் அல்லது பாலியல் துன்புறுத்தலுக்கு உட்பட்டுள்ளதாக கூறு கின்றனர். ஒவ்வொரு 6 நாளுக்கும் ஒரு கனேடிய பெண் தனது துணைவரால் கொலை செய்யப்படுகிறார். தமக்கு பாது காப்பு இல்லை எனக் கருதி அண்மை வரை 3,491 பெண்களும் அவர்களது 2,724 பிள்ளைகளும் காப்பகங்களுக்கு சென்று ள்ளனர். காப்பகத்திலும் பயத்துடன் அதிகம் இருக்கிறார்கள் என, வீடு திரும்புபவர்களும் உள்ளனர். 1980-2012 க்குள் 1,181 பூர்வகுடிப் பெண்கள் காணாமல் போயுள்ள னர் அல்லது கொலையுண்டுள்ளனர். ஏனைய கனடியர்களை விட இது 6 மடங் காகும். எல்லைப்பகுதிகளில் இந்த வன் முறை மிக அதிகம். ஒன்ராரியோ, குவிபெக் குறைந்த வன்முறையுள்ள மாகாணங்களா கும். மறைமுக வன்முறை (Cyber violence), பயமுறுத்தல் (Threats), தொந்தரவு செய்தல் (Harassment), மறைந்து செயல்படல் (Stalking), பாலியல் வன்முறை (Sexual violence), உடலியல் தாக்குதல் (Physical violence) என்பன அறியப்பட்டுள்ளன.

பெண்களுக்கு எதிரான வன்முறை பெண்களின் மனித உரிமைகளின் வன் முறையாகும். இது அச்சமூட்டுகின்ற பின் விளைவுகளுடன் ஒரு பொது சுகாதாரப் பிரச்சினை என்பதுடன், அக்கறையுடன் எடுக்கப்படுவது அவசியமாகும். இது பெண்கள் மட்டுமன்றி ஆனால், முழு சமூகத்தினதும் மீது தாக்கத்தை கொண்டி ருக்கிறது. பெண்களுக்கு அதிகாரமளித்தல், மனப்பாங்குகளை மாற்றுதல், அத்துடன் திட்டமான மாற்றத்தை கொண்டுவருதல் என இப்பிரச்சினைகளை கவனத்திற்கு எடுப்ப தற்கு முக்கியமான அவசியமொன்றை தகவல் விளக்குகின்றது. முழு அளவிலான உதாசீனம் நீண்ட காலமொன்றுக்கு பால் நிலை அடிப்படையிலான பிரச்சினையுடன் இணைந்துள்ளது. இதனை கூறியவர் இலங்கையை சேர்ந்த லக்ஸ்மன் சேன நாயக்கா என்ற அறிஞராவர். இது முற்றிலும் உண்மையாகும்.

**பெண்களுக்குகெதிரான வன்முறையின் வரைவிலக்கணம் பின்வருமாறு.**

உறுப்புரை 1 - பெண்களுக்கு உடல்ரீதியான, பாலியல் ரீதியிலான அல்லது உளவியல் ரீதியிலான கெடுதலை அல்லது கஷ்டத்தை விளைவிக்கின்ற அல்லது அனேகமாக விளைவிக்கக் கூடிய அத்துடன் பொதுவான அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இடம் பெற்றவர். அத்தகைய செயற்பாடுகளின் பய முறுத்தல்களும், சுதந்திரத்தின் பலாத்காரத் திலான அல்லது தன்னிச்சையிலான கவர்ந்து கொள்ளலும் உட்பட பால்நிலை அடிப் படையிலான வன்முறையின் செயற்பாடு.

உறுப்புரை 2 - மேலதிக கருத்துகள்

(அ) குடித்தனத்தின் சிறுமிகளின் பாலியல் துஷ்பிரயோகம், சீதனம் தொடர்பான வன்முறை, திருமணம் சார்ந்த பாலியல்



நொவம்பர் 25 – பெண்களுக்கு எதிரான வன்முறை சர்வதேச தினம்

வல்லுறவு, பெண் பிறப்புறுப்பை சிதைத்தல் மற்றும் பெண்களுக்கு கெடுதலான வேறு பாரம்பரியத்திலான பழக்கங்கள், வாழ்க்கைத் துணை சாராத வன்முறை மற்றும் சுரண்டல் தொடர்பான வன்முறை ஆகியன உட்பட குடும்பத்தில் இடம்பெறும் உடல்ரீதியானதும், பாலியல் ரீதியானதும் மற்றும் உளவியல் ரீதியானதும் வன்முறை.

(ஆ) வேலையிலும், கல்விசார் நிறுவனங் களிலும் பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ் பிரயோகம், பாலியல் தொந்தரவு, பயமுறுத் தல், பெண்களை கடத்துதல், பாலியல் தொழில் நிர்ப்பந்தம் உட்பட சமூகத்தினுள் இடம்பெறுகின்ற உடல், பால், உள ரீதியிலான வன்முறை.

(இ) இழைக்கப்படுகின்ற அல்லது அது எங்கெங்கு நடந்தாலும் அரசாங்கத்தினால் கவனிக்கப்படாமல் விடப்படுகின்ற உடல், உள, பால்ரீதியான வன்முறை. இத்தகைய பெரிய அளவிலான பெண்கள் மீதான வன்முறையை நீக்குவதற்குரிய காரணங் களையும் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது.

1. பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது மனித உரிமைகளை மீறுவதாகும்.
2. பெண்களுக்கு எதிரான பாகுபாடு சட்ட ரீதியாக பல விளைவுகளை உண்டாக்கும். ஆண்- பெண்களின் சமத்துவமின்மையை இது தொடர்ந்து உருவாக்கலாம்.
3. HIV எயிட்ஸ், மற்றும் வறுமை என்பவற்றுடன் இவ்வன்முறை நெருங்கிய தொடர்பில் உள்ளது.
4. பெண்களும், சிறுமிகளும் தவிர்க்க முடியாமல் இந்த வன்முறைகளுக்கு உட் படுகிறார்கள். இதனை தடுப்பது மிக அவசியம்.
5. தொடரும் வன்முறை என்பது ஒரு பூகோள பிரச்சினையாகிறது.

இந்த வருடம் இந்த தினத்திற்கு 'உலகினை ஒரேஞ் நிறமாக்குங்கள், பெண்களும் சிறுமி களுக்கும் எதிரான வன்முறை முடிவுக்கு வர நிதி சேகரியுங்கள்' (Orange the World Raise money to end violence against women and girls) என்ற தாரக மந்திரம் சூட்டப்பெற்றுள்ளது.

**பெண்களுக்கெதிரான வன்முறைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.**

1. உடல்ரீதியானவை
2. உணர்வுபூர்வமான, உளவியல் ரீதியானவை
3. பாலியல் ரீதியானவை
4. வாய்மொழியிலானவை
5. பொருளாதார ரீதியானவை
6. தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில் நுட்பம் தொடர்பான வன்முறை (இன்டர்நெற், கைத்தொலைபேசி, பேஸ்புக்) ஆகியன.

முதலில் உடல்ரீதியான வன்முறைகளை (physical violence): கன்னத்தில் அறைதல், அடித்தல், கையை முறுக்குதல், கூரிய ஆயுதத்தால் குத்துதல், குரல் வளையை நெரித்தல், எரித்தல், மூச்சை திணறடித்தல், உதைத்தல், பொருளொன் றினால் அல்லது ஆயுதமொன்றினால் பய முறுத்தல், தள்ளு தல், குத்துதல், மற்றும் நபர் ஒருவருக்கு உடல் ரீதியான காயங் களை ஏற்படுத்தும் விதத்தில் வன்முறையின் ஏதாவது வேறு வடிவமைப்பு மற்றும் கொலை உட்பட ஒரு வருக்கு எதிராக திசை திருப்பப்பட்டுள்ள உடல்ரீதியிலாக தவறாக நடத்தப்படுதலின் அல்லது மூர்க்கத் தனத்தின் ஏதாவது அமைப்பேயாகும்.

உளவியல் என்னும்போது ஒருவரை உணர் ச்சி ரீதியாக குழப்புகின்ற அல்லது பாதிப்பு ஏற்படுத்துவதை நாடி நிற்கின்ற வன் முறை யின் வடிவமாகும். தொடர்ச்சியாக ஏசுதல், பயமுறுத்தல், சிறுமைப்படுத்துதல், உரத்துக் கத்தல், வீட்டுக்குள் கட்டுப்படுத்தல், மேற் பார்வை செய்தல், கைவிடுவதாக பயமுறுத் தல், பிள்ளைகளை கொண்டு செல்லப் போவதாக பயமுறுத்தல், பொருட்களை

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)

**RENT - OFFICE ROOMS**
**1 - 7 EASTVALE DRIVE MARKHAM & STEELES**
Suitable For Real Estate / Mortgage / Insurance Agents & Law Office.
Ample Free Parking Anytime. Rent From $500/Month
Call: **416.464.3551**

**LAW OFFICE**
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
*3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4*
*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# காப்புறுதி கேள்வி பதில்கள்? கனடிய தகவல் தொடர் 278




சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999


**கறைகள் எதுவுமில்லாத வாகன மோட்டும் பதிவு உள்ளவர்களுக்கு வாகனக் காப்புறுதி புதுப்பித்தலின் போது எதற்காக விலை அதிகரிக்க வேண்டும்?**

**கடந்த பல வருடங்களாக நான் எதுவிதமான தண்டனை ரிக்கற்று களும் வாங்கவுமில்லை விபத்துகள், நட்டஈடுகள் என்றுமே பெறவில்லை. ஆனால் புதுப்பித்தலின் போது எதற்காக எனது வாகன காப்புறுதி விலை அதிகரிக்க வேண்டும்?**

'இன்சூரன்ஸ் இன்ஸ்ரியூட் ஒவ் கனடா' (Insurance Institute of Canada) என்னும் நிறுவனம் நடத்தும் முகவர்களுக்கான காப்புறுதி வகுப்புகளில், இவ்வினாவுக்குரிய பதிலை கனடாவின் பொருளியல் கோட் பாடுகளை (Canadian Economic Principles ) அடிப்படையாக வைத்து வகுப்புகளை நடத் தும் விரிவுரையாளர் தெளிவு பண்ணுகிறார். 'அதாவது ஒவ்வொரு காப்புறுதி கம்பனியும் ஆபத்தில் உள்ளவர்களை பாதுகாக்கும் ஒரு பண பெட்டகம் போன்றது' என்ற அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டிய கோட்பாடாகும். மாதாமாதம் பலரும் சேர்ந்து அதனுள் பணத்தினை போடுகின்றோம். ஆபத்துக்களையும், இழப்புக்களையும் எதிர் கொண்டவர்களுக்கு அந்தப் பணப் பெட்ட கத்திலிருந்து பணம் எடுத்துப் பகிர்ந்து வழங்கப்படுகின்றது.

இந்த 'காப்புறுதி' என்ற பண பெட்டகம் எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும் என்று சட்டங்களினாலும் ஒழுங்கு விதிகளினாலும் வரையறை செய்யப்பட்டு அரசினால் கண்காணிக்கப்படுகின்றது. பணப்பெட்டகத்தி லிருந்து பணம் வெளியே போய் அங்கு இருப்பு குறையுமானால், அதை சகலரும் சேர்ந்தே அதனை நிரப்ப வேண்டும் என்பதே நியதியாகும். இப்பணப் பெட்டகத்தினை நிர்வகிப்பதில் உள்ள பின்வரும் மூன்று அம்சங்களும் பொதுவாக வாகன காப்புறுதி யில் ஒவ்வொருவரினது மாத கட்டுப்பணத் தினையும் தீர்மானிக்கும் கோட்பாடுகளாகும். அவையாவன பின்வருமாறு.

A. **வாகன காப்புறுதி செய்தவர்கள் பெறும் நட்டஈடுகள் & இழப்பீடுகளின் தொகைகள்** (Claim History)

நட்டஈடு கோருபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவிருந்தால் சகலருக்கும் விலை அதிகரிக்கும். நட்டஈடு கோருபவர்களின் தொகைகள், எண்ணிக்கைகள் குறையுமாக விருந்தால் சகலருக்கும் விலை குறையும். கொட்டும் பனி மழையில் நூற்றுக்கு மேற் பட்ட வாகனங்கள் கனடாவின் அதிவேக தெருவில் விபத்துக்குள்ளானது என்ற செய்தியினை வீட்டிலிருந்தபடியே தொலைக் காட்சியில் காண்கின்றோம். அந்த விபத்தின் நிகழ்வு வாகன காப்புறுதி என்ற விடயத்தில் சகலரையும் பாதிக்கும் என்பதனையும் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் மோசடியாகக் காப்புறுதியில் இருந்து பணம் கோருபவர்களும் எல்லோருக்கும் பொது வான பணத்தினையே திருடுகின்றனர்.

2012 ஆம் ஆண்டு 'காப்புறுதி' என்ற பணப் பெட்டகத்தில் இருந்து 'இழப்பீடுகளின் கோரல்' என்ற பெயரில் கனடாவில் மோசடி யாகப் பணத்தினை பெற்ற தமிழர் சுமார் 37 பேரை கைது செய்த சம்பவத்தில் 'இது சகலரையும் சுரண்டும் மோசடி' என்ற வார்த்தையினை ஆங்கில தொலைக்காட் சியில் புலனாய்வுக்குத் தலைமை வகித்த ரொறன்ரோ பொலீஸ் பிரிவின் துப்பறியும் நிபுணர் திரு. கஜமுகநாதன் கதிரவேலு தமிழிலும், ஆங்கிலத்திலும் அறிவித்தார் என்பது இங்கு குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

B. **வாகன காப்புறுதி கம்பனிக்கு ஏற்படும் செலவுகள்** (Operating Expenses)

இப்பண பெட்டகத்தினை நிர்வகிக்கும் சகல செலவுகளும் அதிலிருந்தே செலவழிக்கப் படுகின்றது. நாம் மாதாமாதம் செலுத்தும் பணத்தில் சுமார் 15% மோசடிகளை துப்புத்துலக்க செலவழிக்கப்படுகின்றது என அவர்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. செலவுகள் அதிகரித்தால கட்டுப்பணம் அதிகரிக்கும் செலவுகள் குறைந்தால் கட்டுப் பணம் குறையும். அதாவது கம்பனியின் சகல செலவுகளும் இந்த பண பெட்டகத் திலிருந்தே போகின்றது.

c. **காப்புறுதி கம்பனிகளின் முதலீட்டு வளர்ச்சி** (Investment Income)

இதே 'காப்புறுதி' என்ற பண பெட்டகத்தில் உள்ள பணம் காப்புறுதி ரீதியில் நிபுணர் கள், பொருளியலாளர்களினால் பல்வேறு வகையான முதலீட்டு திட்டங்களினூடாக வளர்த்து எடுக்கப்படுகின்றது. முதலீடு வளரும்போது மாத கட்டுப்பணம் குறையும். முதலீடுகள் வீழ்ச்சி அடையும்போது வாகன காப்புறுதிக்கு செலுத்தும் மாத கட்டுப்பணம் அதிகரிக்கும். ஒரு நாட்டின் பொருளாதார மாற்றங்கள் காப்புறுதியின் விலையினையும் பாதிக்கின்றது.

தனிப்பட்ட ரீதியில் விலை அதிகரிப்பதற்கான காரணிகளோடு, பொதுவாக எதற்காக மாத கட்டுப்பணம் அதிகரிக்கின்றது என்ற புதிருக்கு மேலே குறிப்பிடப்பட்ட மூன்றுமே காரணமாகும்.

**ஏற்கனவே வாகன காப்புறுதியில் பதிந்து, வாகனம் செலுத்திய அனுபவங்கள் என்பது வாகன காப்புறுதியின் விலையில் எத்தகைய தாக்கத்தினை கொடுக்கின்றது?**

'கடந்த காலங்களில் வாகனம் செலுத்தும் போது ஏதாவது விபத்தினை எதிர் கொண்டீர்களா?'
'விபத்துகளில் நட்டஈடுகள் ஏதாவது வாகன காப்புறுதியிலிருந்து பெற்றீர்களா?' போன்ற இரு வினாக்களும் வாகன காப்புறுதிக்கு மனு செய்யும்போது கேட்டு ஆராயும் இரு முக்கிய வினாக்கள் ஆகும்.

ஏனெனில் ஏற்கனவே வாகனம் செலுத்திய அனுபவங்கள் என்பது கனடாவில் வாகன காப்புறுதியின் பதிவுகள் ஊடாகவே நிரூபிக் கப்படல் வேண்டும். அவ்வாறு நிரூபிக்கப் படும்போது, அது விலையில் சாதகமாக அமையும். ஆனால் விபத்துகளில் சிக்கியி ருந்தால் அது, விலையில் ஒரு பாதகமான நிலைமைக்கு இழுத்து செல்லும். அந்த விபத்தில் தங்கள் பக்கம் தவறு என்பது (At Fault Accident) முடிவு பண்ணப்பட்டு அவை பதிவில் இருக்குமானால், விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும்.

**இந்த விடயத்தில் எவற்றினையும் ஒழிக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது.**
'சி.ஜி.ஐ தகவல் மையம்' (C.G.I Group Inc.) என்பது கனடாவில் வாகன காப்புறுதி செய்த ஒவ்வொருவரினது முழு தகவல்களையும் அவரவர் சாரதி அனுமதி பத்திர இலக்கத்தின் கீழ் பதிந்து வைத்திருக்கும் ஒரு நிறுவனம் ஆகும்.

1.பெயர், முகவரி, பிறந்த காலம்
2. எந்த காப்புறுதி கம்பனியில், எந்த பதிவு இலக்க வாகனத்திற்கு, எவர் பெயரில் எவ்வளவு காலம் காப்புறுதி வலிமையில் இருந்தது என்ற விடயங்கள்.
3. வாகன விபத்துகளை எதிர் கொண்டிருந்தால் அவை பற்றிய விபரங்கள். தவறு எந்தப் பக்கம்? எவ்வளவு விகிதத்தில் என்ற முடிவுகள்.
4. நட்டஈடு கோரிய விபரங்கள்.
என சகல விடயங்களும் ஒரு வரலாற்று கோவையாக அங்கு இருக்கும்.

'Auto Plus Report' என்னும் பெயரில் இந்த நிறுவனத்திலிருந்து தங்கள் பெயரில் உள்ள அறிக்கையினை எடுத்து பரிசீலனை செய்து பார்க்கலாம்.

சகல வாகன காப்புறுதி கம்பனிகளும், மனு செய்யும் போதும், தாமாக புதுப்பிக்கும் போதும் இவ் அறிக்கையினையும் ஓர் ஆவணமாக எடுத்து பரிசீலனை செய்த பின்பே விலையினை தீர்மானிப்பார்கள்.

**- 'சாரதி அனுமதி பத்திரம்' வைத்திருந்த வருடங்கள், அதன் தரம், வீதி ஒழுங்கு விதிகளை மீறிய குற்றச்சாட்டுகள் என்பவை வாகன காப்புறுதியின் விலையினை நிர்ணயிப்பதில் எந்தளவுக்கு தாக் கத்தினை உருவாக்குகின்றது?**

G(2) மற்றும் G அனுமதி பத்திரம் வைத்திருக்கும் இருவரின் நிலைப்பாடுகளி லும் சுமார் 10% வீதம்வரை விலை வித்தி யாசம் உருவாகும். இதன் காரணமாகவே நிரந்தரமான G அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளும் பரீட்சையில் சித்தியடைந்தவர் களை உடனடியாக எழுத்து மூலம் காப்பு

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)


TUTORING
Math / Science / English
Over 8 years of Experience (M.Sc., Mathematics)
Param Jyothi Academy is a Tutoring Centre located in Markham. We are very passionate about ensuring that our students understand their Math problems by breaking them down into simple problems. The secret to success for achieving high scores in Math is by practice. That is why we ensure that our students do several problems. We also work with IEP students, ADHD Students and low mark students by catering our skills, experience and knowledge to meet their needs.
FREE
ONE HOUR MATH CLASS
Call today to find out more!
∆ Grade 1-8: Math/Science/English
∆ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
∆ Principles of Mathematics. ∆ Calculus. ∆ Vectors.
∆ Functions. ∆ Advanced Functions.
∆ University: Calculus-1, Calculus-2, Calculus -3
PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329

# கல்சியம் குறைபாடு

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

மனித உடலுக்கு இன்றியமையாத சத்துக் களில் கல்சியம், இரும்புச்சத்து ஆகிய இரண்டும் முக்கியமானவையாகும். அதிலும் பெண்களுக்கு இவை இரண்டும் மிகவும் அவசியம். இக்கால பெண்களுக்கு சிறு வயதிலே மூட்டுவலி, இடுப்புவலி, கை, கால் வலிகள்என்பன விரைவாக வந்துவிடுகின் றன. அதன் காரணம் கல்சியம் குறைபாடு என்கின்றனர் ஆய்வாளர்கள். பெண்களுக்கு 30 வயதிலிருந்து கல்சியம் குறையத் தொடங்குகிறது.

உடலிலுள்ள கல்சியத்தில் 99 சதவீதம் எலும்புகளிலும், பற்களிலும் காணப்படுகிறது. மிகுதி இரத்தத்தில் உள்ளது. எலும்புகளில் வளர்ச்சி மற்றும் பற்களின் உறுதி, தசை களின் இயக்கம், நரம்புகளின் செயல்பாடு, ஹோர்மோன் சுரப்பு போன்ற பலவற்றிற்கு கல்சியம் தேவைப்படுகிறது.

### கல்சியம் தேவைப்படுபவர்கள்

நோயின் காரணமாக கல்சியம் குறைவாக உள்ளவர்கள், 50 வயத்திற்கு மேல் முதுமை காரணமாக குடலில் கல்சியம் சத்து உறிஞ்சப்படாதவர்கள், மாதவிலக்கு நின்று போன பெண்கள், கர்ப்பிணிகள், தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் ஆகியோருக்கு கல்சியம் தேவைப்படுகிறது.

### பெண்களுக்கு ஏன் கல்சியம் தேவை

பெண்களுக்கு சிறுகுடலிலிருந்து கல்சியம் உறிஞ்சப்படுவதற்கு ஈஸ்டரோஜன் ஹோர் மோன் அல்லது விட்டமின் **D** தேவை. மாதவிலக்கு நின்று போனவர்களுக்கு ஈஸ்ட ரோஜன் சுரப்பது குறைந்து விடுவதால் இரத்தத்திற்கு எடுத்துச் செல்லப்படும் கல்சியத்தின் அளவும் குறைந்து விடுகிறது. இதனால் எலும்புகளில் நுண்ணியதுளைகள் உண்டாகி எலும்புகளின் வலிமை குறை கிறது. இதற்கு ஒஸ்டியோபரோஸிஸ் என்று (**Osteoporosis**) என்று பெயர். இதனால் மெதுவாகத் தரையில் விழுந்தாலும் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்புண்டு. இந்த நிலை-மையைத் தடுக்க கல்சியம் தேவையாகும்.

### கல்சியம் நிறைந்த உணவுப் பொருட்கள்

பால் மற்றும் பால் சார்ந்த உணவுப் பொருட்கள், சோயாபீன்ஸ், உழுந்து, மீன், முட்டை, ஆட்டிறைச்சி பீட்ரூட், அவரை, கோளிபிளவர், வெண்டைக்காய், வெங்காயம், கருணைக்கிழங்கு, முள்ளங்கி, திராட்சை, முட்டைக்கோஸ் போன்றவற்றில் கல்சியம் அதிகம் உள்ளது. இதனை தினமும் உணவில் சேர்த்து இயற்கை வழியில் இதனைப் பெற்றுக்கொள்ளலாம். ஒஸ்டியோ பேராஸிஸ் என்னும் எலும்பு தேய்மானம் பிரச்சினையுடைய பெண்களுக்கு மெனோ பாஸ் நேரத்தில் எலும்புமுறிவு ஏற்பட்டால் பால் மிகவும் பயன்தரும். அதிலும் சோயா பால் காலையில் அருந்துவது நல்லது. இதில் கொழுப்பு மிகவும் குறைவு என்பதால் உடல் பருமலானவரும் அருந்தலாம்.



ஆட்டுக்கால் எலும்பு மஜ்ஜையில் கல்சியம், பொஸ்பரஸ், மக்னிசியம், இரும்புச்சத்து என்பன நிறைந்துள்ளன. எலும்பு தேய் மானம் உள்ளவர்களுக்கு முதல்தரமான கல்சியம் கிடைக்கும். கல்சியம் அதிகமாகக் கொண்டது கொள்ளு. மாமிசம் சாப்பிடாத வர்கள் கொள்ளு ரசம் தயாரித்து குடித்தால் எலும்புகள் வலுவாகும். ஒரேஞ்சு, கொய்யா, ஸ்ரோபரி, வாழைப்பழம், அப்பிள் போன்றவை எலும்புகளை பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகின்றன. இதுதவிர கரெட், வெண்டைக் காய், வெங்காயம், கோலிபிளவர் என்பன வற்றை அன்றாடம் உணவில் சேர்ப்பதன் மூலம் பெண்களுக்கு தேவையான கல்சியம் கிடைக்கும்.

கீரைகளில் வெந்தயக்கீரை, முருங்கை, கொத்தமல்லி, முள்ளங்கி என்பனவற்றில் கல்சியம் உள்ளது. கீரைகளை, அசைவத் தோடு சேர்த்து சாப்பிடக்கூடாது. இரவிலும் சாப்பிடக்கூடாது. இதனால் செரிமானம் தாமதப்படும். காலை மதிய உணவோடு சேர்க்க வேண்டும். முந்திரி மற்றும் பாதாம் பருப்பில் அதிக அளவு கல்சியம் உள்ளது. மேலும் உடலுக்கு வேண்டிய மக்னிசியம் பொஸ்பரஸ் போன்ற தாது உப்புகள் உள்ளன. இவை எலும்புகளுக்கு உறுதியை அளிக்கின்றன. இத்துடன் பேரீச்சம்பழத்திலும் அதிக கல்சியமும் பல தாதுப்பொருட்களும் இருக்கின்றன.

### எலும்புகளை உறுதியாக்கும் பயிற்சிகள்

யோகாசனத்தில் உச்சி முதல் பாதம் வரையு முள்ள 263 எலும்புகளையும் உறுதியாக்கும் பயிற்சிகள் பல உள்ளன. உணவுடன் சேர்ந்த கல்சியம் எலும்பு களுடன் சேர்வதற்கு இந்த பயிற்சிமுறைகள் பேருதவி புரிகின்றன. கல்சியத்தின் தேவையை ஒவ்வொருவரும் உணர்ந்து இந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.



## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)



- கனி -
416.261.1348
ptons@hotmail.ca

சென்ற தடவையில் பேரண்டம் தன்னுள் உள்ள பொருட்கள் திணிவினை கொள்வதற்கான அமைப்பினைப் பெற்றுவிட்ட தகுதியைப் பற்றித் தெரிந்து கொண்டும். இனி அதிலிருந்து பார்ப்போம்.

### மின்மெலிக் காலம் (தொடர்ச்சி)

சரி, துணிக்கைகளுக்கு திணிவுகள்தான் வந்து விட்டனவே, இனி ஈர்ப்புவிசையும் வலிந்தவிசையும் தங்களது வேலையைக் காட்டத் தொடங்கலாம்தானே என எண்ணினால், அங்கும் சிறு இடைஞ்சல் அவற்றிக்கு வருகின்றது. புடவியின் அதியுயர் வெப்பநிலைதான் அதற்குக் காரணமாக இருக்கின்றது. வெப்பச் சமநிலையின் காரணமாகப் பேரண்டத்துள் துணிக் கைகள் எல்லாம் உயர் வெப்பநிலையில் தான் இருக்கின்றன. அதன் காரணத்தால் அவற்றின் வெப்பத்தினாலான சக்தி மட்டங்களும் மிகவும் உயர்வாகவே இன்னமும் உள்ளன. ஆதனால், தாம் கொண்டுள்ள சக்தியின் காரணமாக, வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் துணிக்கைகளை ஈர்ப்பு விசையாலும், வலிந்தவிசையாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே, அத்துணிக் கைகளைத் தமது கட்டுக்குள் கொண்டு வருவதற்கான காலம் கனியட்டும் என இன்னமும் காத்துக் கிடந்தன, ஈர்ப்பு விசையும் வலிந்தவிசையும்.

இப்படியிருக்க, பிக்பாங்கின் பின்னரான நேரமும் $10^{-1}$] செக்கனும் வந்து விடுகின்றது. கூடவே பேரண்டத்தின் வெப்ப நிலையும் பத்தின் பதினைந்தாம் அடுக்கு பாகை கெல்வினாகக் குறைந்து விடுகிறது. இந்நிலயில் அடுத்த மாற்றமாக மூன்றாவது சமச்சீர் உடைவு நிகழ்கின்றது. இவ்வுடைவினால் மின்மென்விசையானது தனித்தனியாக மின்காந்தவிசையாகவும், மெலிந்தவிசையாகவும் மாறிவிடுகின்றது. இதனால் பேரண்டத்துள் இன்று காணப் படுகின்ற நான்கு விசைகளும் தனித்தனி விசைகளாகத் தொழிற்படும் நிலை வருகின்றது.

இன்றிருக்கும் அறிவியல் நிலையில் பல விடயங்களின் அடிப்படையில் எங்களுக்கு மின்மெலிவிசையானது மின்காந்தவிசையாகவும், மெலிந்தவிசையாகவும் மாறிய நிலைப் பெயர்ச்சிதான் மிக முக்கியமாகத் தெரிகின்றது. முதலாவதாக, பிக்பாங்கின் பின்னரான முதற் $10^{-12}$ செக்கனிலும் நடந்ததாகக் கூறப்படுகின்ற மாற்றங்கள் எல்லாம் கொள்கையளவிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டவை. அவை எந்தவொரு பரிசோதனை முடிவுகளினாலும் முழுமையாகச் சரி பார்க்கப்படாதவை, சரி பார்க் கப்படவும் முடியாதவை. இரண்டாவதாக, சேனின் துணிக்கை விரைவாக்கிகளின் உதவியினால், $10^{-12}$ செக்கனின் பின்னராகக் கொள்கை வடிவிற் கூறப்பட்டவை எல்லாம் சரிபார்க்கப்பட்டு விட்டன என்றே கூறலாம்.




மூன்றாவதாக, வலிந்தவிசையும், புதியதாக முளைத்த, வலிந்த விசையின் உடன் பிறப்புப் போன்ற மெலிந்தவிசையும் ஓரளவுக்கேனும் தங்களது செயற்பாட்டினைக் காட்டக் கூடியதான நிலைக்கு வந்து விட்டிருந்தன. இவ்விரு விசைகளையும் அணுக்கருவிசை என்ற பதத்துக்குள் வைக்கலாம் என்பதால் அவற்றினை உடன் பிறப்புகள் என்று கூறுகிறேன். புடவியினுள் இந்த இரண்டு விசைகளுக்குமான செல்வாக்குவந்தது, துணிக்கைளின் நடவடிக் கைகளுக்கு நல்வாய்ப்பாக அமைந்து விட்டது. இவ்விருவி சைகளின் செயற்பாடுகளினால் துணிக்கை களின் செல்வாக்கான காலம் புடவியினுள் பிறந்து விட்டது.

இங்கே உங்களுக்கு ஒரு விடயம் பற்றி இன்னமும் அறிந்து கொள்வதற்கான ஆர்வம் பிறக்கலாம். இதுதான் இந்த இயற்கைவிசைகளின் செயற்பாடுகள் பற்றிய விஞ்ஞானிகளின் தெளிவுபடுத்தல்கள். அவற்றினை இன்னமும் கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம்.

பேரண்டத்தை ஆக்கியதில் இயற்கை விசைகளுக்குத்தான் பெரும் பங்குண்டு என இக்கால அறிவியல் கூறுகின்றது. இயற்கை விசைகளில் முதன் முதலில் இனம் காணப்பட்டது ஈர்ப்புவிசையாகும். கோள்களின் இயக்கங்களுக்கு ஏதோ ஒரு மர்ம விசைதான் காரணமாக இருக்க வேண்டும் என கெப்பிளர் தனது கோள்களின் இயக்கங்களுக்கான விதிகளைக் தந்தபோது கூறியிருந்தார். பின்னர் இவ் விதிகள் சரியானவையா என ஆய்வு செய்த நியூட்டன்தான் ஈர்ப்பு விசையினை இனம் கண்டு அதற்கு ஒரு விதியினையும் கொடுத்தார். அதன் பின்னராக அறிவியல் வளர்ச்சியின் விளைவாக மற்ற இயற்கை விசைகளும் விஞ்ஞானிகளால் இனம் காணப்பட்டது.

இந்த இயற்கை விசைகளைச் சாதாரண விசைகளைப் போன்று விஞ்ஞானிகளாற் பார்க்க முடியவில்லை. அவை தமக்குள் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும், சாதாரண விசைகளில் நின்றும் வித்தியாசமானவையாகச் செயற்படுவதைக் கண்ட ஆய்வாளர்கள் அவற்றினைப் பற்றி தீவிரமாக ஆய்ந்து அவற்றைப் புரிந்து கொண்டார்கள்.

இயற்கைவிசைகள் நான்கினையும் பாருங்கள், நாங்கள் காணுகின்ற, அனுபவிக்கிற சாதாரண விசைகளைப் போன்றவையல்ல அவை. இழுத்துவிட்ட இறப்பரில் உள்ள இழுவிசை, பொருள் ஒன்றின் மேல் இன்னொரு பொருளை வைத்து இழுக்கையில் வருகின்ற உராய்வுவிசை, ஒருவரைத் தள்ளுகையில் அல்லது இழுக்கையில் விளைகின்ற விசைகள் போன்றதாய் இயற்கைவிசைகள் காணப்படு வதில்லை. உராய்வு விசை போன்ற சாதாரண விசைகள் யாவும் ஏதோ ஒருவி தத் தொடுகையினால் ஏற்படுகின்றன. ஆனால், இயற்கைவிசைகளான ஈர்ப்பு விசை, வலிந்தவிசை, மெலிந்தவிசை, மின்காந்த விசை என்பன இரண்டு பொருட்களின் ஒன்றுடன் ஒன்றான தொடுகையினால் வருவதில்லை. மாறாக தொடுகையில்லாத நிலைகளில் இவ்விசைகள் காணப்படுகின்றன. எனவே இவற்றிக்கான காரணத்தை வித்தியாசமாக விளக்கினார்கள். முதலில் பொருட்களின் இடையேயான ஈர்ப்புவிசை, வலிந்தவிசை, மெலிந்தவிசை, மின்காந்த விசை போன்ற இயற்கைவிசைகளை விசைகள் எனக் கூறாது, பொருட்களின் இடையேயான இடைத் தாக்கம் (interaction) எனக் குறிப்பிட்டார்கள். இதனால், இயற்கைவி சைகளை மற்றைய சாதாரண விசைகளில் நின்றும் பிரித்துப் பார்க்கக் கூடியதாக இருந்தது. இனி, இந்த இடைத் தாக்கத்திற்குக் காரணமாக இருப்பவை இடையோன்கள் என்கிற துணிக்கைகள் என்றார்கள். எப்படி எனப் பாருங்கள்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொருட்கள் எல்லாம் இந்த இடையோன்கள் என்கிற குட்டித் துணிக்கைகளை ஒன்றுக்கொன்று கொடுத்து வாங்குகின்றன. இப்படி பொருட்களிடையே இடையோன்கள் பரிமாற்றம் நிகழ, ஈர்ப்பு, வலிந்தவிசை, மெலிந்தவிசை, மின்காந்தவிசை போன்ற இடைத்தாக்கம் என்கிற இயற்கைவிசை விளைவுகள், அந்தந்தக் குட்டித் துகள்களின் வகைகளுக்கு ஏற்ப நிகழ் கின்றன என்றொரு அழகான விளக்கத்தைக் கொடுத் ணதார்கள். ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தபடி, ஈர்ப்புவிசை இடைத்தாக்கத்திற்குக் காரணமாக இருப்பவை ஈர்ப்போன் (graviton) என்ற இடையோன்களும், வலிந்தவிசை இடைத் தாக்கத்திற்குக் காரணமாக இருப்பவை குழுவோன் (Gluon) என்கிற இடை யோன்களும், மெலிந்த விசை இடைத் தாக்கத்திற்குக் காரணமாக இருப்பவை மூன்று வகைப் போசோன் (Boson) என்ற இடையோன்களும், மின் காந்தவிசை இடைத்தாக்கத்திற்குக் காரணமாக இருப்பவை போட்டோன்கள் (Photon) என்ற இடையோன்களும் எனக் குறிப்பிட்டார்கள். அவ்வகையிலேயே இயற்கை விசைகளை நாங்கள் அறியக் கூடியதாக

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)

உங்கள்
வருமானத்தைப் பெருக்குவதற்கான
அரிய வாய்ப்பு
• தொழில்நுட்பத்தின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு •
உங்கள் முதலீட்டை பன்மடங்காக பெருக்கிக்கொள்ள அரிய வாய்ப்பு
நிறுவனத்தின்* வழிகாட்டலின்படியான மாதிரி இலாப அட்டவணை

| முதலீடு | இலாபம் 3 மாதத்தில் | இலாபம் 6 மாதத்தில் | இலாபம் 12 மாதத்தில் | இலாபம் 24 மாதத்தில் |
|---|---|---|---|---|
| $ 500.00 | $ 350.00 | $ 1,050.00 | $4,600.00 | $ 71,750.00 |
| $1,000.00 | $ 750.00 | $ 2,200.00 | $ 9,500.00 | $ 147,400.00 |
| $5,000.00 | $ 3,950.00 | $ 11,250.00 | $ 48,650.00 | $ 752,150.00 |
| $20,000.00 | $ 15,950.00 | $ 45,250.00 | $ 195,450.00 | $ 3,019,500.00 |

எவ்வளவு தொகை முதலிட்டாலும் தேவையாயின், அதை எந்நேரமும் திரும்பப்பெறலாம்
*முழு விபரமும் அறியத்தரப்படும், வெளிப்படையான நிறுவனம்
குடும்பமாகவோ, குழுவாகவோ சந்திக்கலாம்
bitcoin | 647 580 5275
Independent Promoter

# நகைச்சுவை



நா. க. சிவராமலிங்கம்

வளமான வாழ்விற்கு பொருள் தேவை. அதே போன்று நலமான வாழ்விற்கு நகைச்சுவை உணர்வு மிகமிகத் தேவை.

சிரிப்பு அதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு என்று கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணர் அந்தக்கால திரைப் படமான 'ராஜாராணியில்' கவிஞர் மருத காசியின் பாடலில் எளிமையாகப் பாடியிருக்கிறார்.

ஒன்பது சுவைகளில் முதற்சுவை, நகைச் சுவை என்பது 2000 ஆண்டுகளுக்கு முன்பே நமது தமிழறிஞர்கள் உலகிற்கு உணர்த்திய உண்மை. வள்ளுவப் பெருந் தகை கூட சிரிப்பவர்களுக்குத் தான் உலகம் ஒளிமயமாக இருக்கிறதென்று கூறியுள்ளார். அப்படி இல்லாதவர்களுக்கு அது பகலாக இருந்தாலும் இருளாகவே இருக்கும் என்பர்.

நகல் வல்லர் அல்லர்க்குமாயிரு ஞாலம் பகலின் பாற்பட்டதன்று இருள். நகைச் சுவையிலும் பிறர் மனம் வருந்துமாறோ, சபையில் உள்ளவர் கூசித் தலை குனியுமாறோ, அமங்கலமானவற்றைப் பேசி நகைக்க வைப்பதாலோ பெருமையில்லை. அது நகைச்சுவையும் ஆகாது.

கள்ளம் கபடம் இல்லாத சிரிப்பை குழந்தை சிரிப்பு என்கின்றோம். காரணம் குழந்தை களுக்கு சூது, வாது தெரியாது. எல்லா மனிதர்களும் குழந்தைகளாக இருந்தபோது சிரித்து மகிழ்ந்தவர்கள் தான். நாளாக, நாளாக வாழ்க்கைச் சூழலால் மன கரும் பாறையாக இறுகிக் போகிறார்கள். நல்ல புத்தகங்களைப் படிப்பது, மகிழ்ச்சி யாகப் பயணம் செய்வது, குழந்தைகளோடு குழந் தையா கூடி மகிழ்வது, நண்பர்களிடையே சத்தமிட்டு சிரித்து மனம் நோகாமல் கேலி செய்வது, அன்பான மனை வியிடத்தில் இனிமையாகப் பேசுவது என்பவற்றைப் புரிந்து கொண்டால் நகைச் சுவை எங்கும் பூக்களால் மலர்ந்திருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இளம் வயது கணவன், மனைவி ஒருவருக் கொருவர் கேலி செய்து கொள்வது மிக இனிமையாக இருக்கும். ஒரு பேருந்தில் புதிதாகத் திருமணமான கணவனும், மனை- வியும் ஊருக்குச் சென்றார்கள். புது மனைவி தன்னிடம் ஒரு வார்த்தை கூட பேச வில்லை என்ற கவலை கணவனுக்கு. அந்த நேரம் பார்த்து பேருந்து நின்ற இடத்தில் இரண்டு நாய்கள் குரைத்துக் கடுமையாக சண்டை போட்டன. உடனே கணவன் இதோ உங்க சொந்தக்காரங்க வெளியிலே சண்டை போடுறாங்க எட்டிப்பாரு என்றானாம். அது வரை பேசாதிருந்த மனைவி போங்க மாமா. உங்க குரலே உங்களுக்கு அடையாளம் தெரியலையா என்றாளாம்.

இதேபோல் கணவன் மனைவி இருவரும் சோதிடர் ஒருவரைப் பார்க்கச் சென்றார்கள். சோதிடர் இரண்டு பேரின் ஜாதகத்தையும் ஆராய்ந்து பார்த்துவிட்டு கணவனிடம் சொன்னாராம் இவங்க தான் ஏழெழு ஜென்மத்திற்கும் உங்கள் மனைவியாய் வருவாங்க என்றாராம். உடனே கணவன் பதட்டத்துடன் கேட்டாராம். இதுக்கு ஏதாவது பரிகாரம் இருக்குதா என்று.

ரஸ்ய நாட்டின் அதிபராக இருந்த குருசோவ் ஒருமுறை தமது காரில் பெரிய கடைவீதி வழியாகச் சென்றாராம். அங்கே புகைப் படங்கள் விற்கும். கடை ஒன்றைக் கண்டு அப்படியே ஆச்சரியத்தில் காரை நிறுத்தி விட்டாராம். காரணம் அந்தக் கடையில் இருந்த அத்தனை படங்களும் அவருடைய படமாகவே இருந்தன. குருசோவ் அந்தக் கடைக்காரரைப் பார்த்து வணக்கம் தோழரே! என்மீது உங்களுக்கு அன்பிருக்கலாம். அதற்காக கடை முழுவதும் என் படத்தையா வைப்பீர்கள். லெனின், ஸ்டாலின் போன்ற தலைவர்களின் படத்தையும் வாங்கி விற் கலாமே என்றவுடன் அந்தப்படங்கள் எல்லாம் வந்தவுடன் விற்றுவிடும் என்றாராம் அந்தக் கடைக்காரர்.



என் பையன் 'கோமாவில்' இருக்கின்றான் என்றாராம் ஒரு பெரியவர். வருத்தத்தோடு அங்கு என்ன செய்கிறான் என்று கேட்டாராம் விபரம் தெரியாத மற்றவர்.

கலை, மலை என்ற சொற்களை அவதானிக்கும்போது அவை இரு பொருள் உடையனவாக இருப்பதை அவதானிக் கலாம். கலை, கலைகளையும், கலைப் பதையும் குறிக்கும். மலை மலையையும், மலைத்துப் போவதையும் குறிக்கும். இவ்வாறே பல தமிழ் சொற்கள் இருப்பதைக் காணலாம்.

தமிழ் சினிமாவில் கோமாளிகளாகவும் பபூன்களாகவும் வந்து மக்களை மகிழ்வித்த வர்கள் பலர். இவர்கள் நகைச்சுவை நடிகர் கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் நகைச்சுவை கலைவாணர்கள் எனப் பின்னர் அழைக்கப்பட்டனர். காளி என் இரத்தினம், கலைவாணர் என்.எண் கிருஷ்ணன், கே. ஏ. தங்கவேலு, ஜேபி சந்திரபாபு, நாகேஷ், சுருளிராஜன், கவுண்டமாணி, கருணாஸ், வையாபுரி போன்றோரும் டி. எஸ். பாலையா, வி.கே. ராமசாமி, எம். ஆர். ராதா, டி. ஆர் ராமசந்திரனும் தமிழ், சினிமாவில் சிறப்பிடம் பெற்றனர். இவர்கள் சொந்தக்குரலில் பாடியும் ஆடியும் செய்து மக்களை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தனர்.

மகிழவும், மகிழ வைக்கவும் தெரிந்து கொண்டால் வன்முறைக் கலாச்சாரம் விடை பெற்றுச் செல்லும். நல்ல நகைச்சுவை மனதுக்கு மருந்தாக, நட்புக்கு வழியாக, உறவுக்கு உறவாகக் கை கொடுக்கும். தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் 100 வயதிற்கு மேலான மூதாட்டி ஒருவர் தன் ஆரோக்கியத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் காரணம் நகைச்சுவை உணர்வுதான் என்று கூறியுள்ளார்.

மரணத்தை தவிர்க்க முடியாது. ஆனால் தள்ளிப் போடலாம். நகைச்சுவை உணர்வு ஆயுளைக் கூட்டும். அது ஔவைக்குக் கிடைத்த நெல்லிக்கனி போன்றது. துன்பத்தைப் பிறரிடத்தே சொல்லும்போது அது பாதியாகக் குறையும். மகிழ்ச்சியை பிறரிடத்திலே சொல்லும்போது அது இரு மடங்காக அதிகரிக்கும். எனவே மகிழ்வோம். மகிழ்விப்போம்.



math tutorial354

Answers to tutorial 353

1)Let the 2nd side be xm, then the 1st side is x-8,and the 3rd side is 4(x-8) . Thetrefore x-8+x +4(x-8) =26

x-8 +x +4x-32 =26 ,6x=26 +32 +8

6x =66 ,x=11 ,therefore the sides are 11,3 &12 m

2)80 American cents were equivalent to 100 canadian cents .One American cent was equivalent to 100/80 =5/4 Canadian cents, that is 100Americans cents were equivalent to 100x5/4 =125 Canadian cents One American dollar was equivalent to $1.25 in Canadian currency

3)y=3f(-x+1) +2 can be written as y=3f-(x-1) +2 . If 9 3,5) is a point on f(x) , then the point on y=f-(x-1) +2 will be -(3+1) =-4 ,and 5x3 +2 =17 such that (-4 ,17)

3b)Since (3,5) is a point on f(x) the point on inverse graph $f^{-1}(x)$ is (5 ,3)

4)The 1st term of the three –term sequence has (a+1) choices, the 2nd term has b+1 and 3rd term has c+1.

Hence there are (a+1)(b+1)(c+1) even divisors of n

Tutorial 354

QUESTIONS

1)Justin estimates that his probability of passing Mathematics is0.8 and English is 0.9 .Find the probability that a)will pass both math &English

b)will not pass either math or English

2)A young couple is planning to have five children.What is the probability that atleast two of the children will have a birth day in the same month

3)In repeated rolling of a pair of dice (a)What is the probability that the first roll of doubles occurs on the 3rd roll?

(b)What is the expected waiting time( number of rolls) before you roll doubles?

By Mr S.F.Xavier(Teacher)
tel6473409490/4167322228

# செஞ்சீனா பச்சையாகிறதா?

## பயணக் கட்டுரை - 17

**- துறையூரான் -**

பாக்கொக் நகரின் மத்தியிலுள்ள மன்னர் அரண்மனையைப் பார்த்தபின், நண்பகல் உணவுக்காக மிகவும் உயர்ந்த கட்டிடமான ஸ்கை ஹோட்டலுக்குச் (367 மீற்றர்) சென்றோம். அது 85 மாடிகளைக் கொண்ட வட்டவடிமான ஒரு கட்டிடம். இங்கு உல்லாசப் பிரயாணிகள் தங்கும் அறைகள், தேகப்பியாச மண்டபங்கள், நீச்சல் தடாகங்கள், மசாஜ் சாலைகள், அலங்காரம் செய்யும் கூடங்கள் எனப்பல ஆடம்பர விடுதிகளில் உள்ள அத்தனையும் உண்டு. இதன் 84 ஆவது மாடியில் ஓர் உணவுச்சாலை உள்ளது. இங்கே பலவிதமான ஐரோப்பிய, ஆங்கிலேய, இந்திய, சீன, தாய் உணவு வகைகள் பழங்கள், புடிங், இனிப்புப் பண்டங்கள், கேக் வகைகள் என ஏராளமானவை வைக்கப்பட்டிருந்தன. நீங்கள் விரும்பிய உணவுகளை எடுத்துச் சாப்பிடலாம். தேவையானால் விரும்பியவற்றைக் கேட்டால் உடனே தயாரித்துத் தருவார்கள். நாங்கள் இங்கு சென்று சில நிமிடங்கள் காத்து நிற்க வேண்டியிருந்தது. பாக்கொக் வரும் உல்லாசப் பயணிகள் யாவரும் இங்குதான் உணவுக்காக வருகிறார்கள். ஏராளமான இருக்கைகள் ஒரு தளம் முழுவதும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போதும் சனக் கூட்டம் அதிகமாயிருந்ததால் வரிசையில் காத்து நின்றோம்.

எனது வாழ்நாளில் இவ்வளவு உணவு வகைகள் ஒரே இடத்தில் இருப்பதைக் கண்டது அன்றுதான். ஒவ்வொரு உணவின் பெயரும் ஆங்கிலத்திலும் தாய்லாந்துப் மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்தாலே அரைவாசிப் பசிபோய் விடும். அத்துடன் எதை எடுப்பது எதை விடுவது எனப் பலர் தடுமாறிக் கொண்டிருந்தனர். உணவை வீணாக்காதீர் எனப் பெரிய எழுத்துக்களில் பல இடங்களில் எழுதப்பட்டிருந்தது. இவற்றுடன் பல்வேறு வகையான பழரசங்கள், தேநீர், கோப்பி, கொக்கோ எனப் பல பானங்களும் இருந்தன. குடிவகைகளுக்குத் தனியான ஓரிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. சைவ உணவு வகைகளும் ஏராளமிருந்தன. பழ வகைகளும் அதிகமாக இருந்தன. இதைவிட ஐஸ்கிறீம், புடிங், பழசலட் எனவும் இருந்தன. ஒவ்வொன்றிலும் சிறிதளவை எடுத்துச் சாப்பிட்டவுடன் வயிறு நிறைந்து விடும். நான் இதுவரைக்கும் சாப்பிடாத சைவ உணவுகளைத் தேடிப்பார்த்துச் சுவைத்தேன். மற்றையோர் யாவரும் அளவுக்கதிமாகச் சாப்பிட்டார்கள் என்பதை அவர்கள் நடக்கமுடியாமல் நடந்து வந்ததிலிருந்து அறியக் கூடியதாய் இருந்தது. உங்களில் யாராவது பாங்கொங் செல்ல நேர்ந்தால் இந்த உணவுச் சாலைக்குக் கட்டாயம் செல்லுங்கள். ஒரு சாப்பாட்டுக்கு $25 அறவிட்டார்கள் என நினைக்கிறேன். எங்களுக்கு எமது முழுக்கட்டணத்திலும் இது சேர்க்கப்பட்டிருந்தால் நாங்கள் தனியாகக் கட்டவில்லை.

உணவுக்காகக் காத்திருந்த வேளை 85 ஆவது மாடிக்குப்படிகள் வழியாக ஏறி மேல் தளத்துக்குச் சென்று நகரம் முழுவதையும் பார்த்தோம். இரண்டு மூன்று இடங்களில் தொலைநோக்குக் கண்ணாடிகளும் இருந்தன. எமது சி. என். கோபுரத்திலிருந்து பார்த்தமாதிரி நகரின் நாற்புறமும் பார்க்கக் கூடியதாய் இருந்தது. வாகனங்கள் ஊர்ந்து செல்வதும் வெவ்வேறு விதமான உயரங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்ததும் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. மன்னரின் அரண்மனையும் புத்தரின் பொற்கோயிலும் கட்டிடங்களுக்கு மத்தியில் கம்பீரமாகக் காட்சியளித்தன. பாங்கொக்கில் வாகன நெரிசல் 24 மணித்தியாலமும் இருப்பதால் சில வீதிகளில் குறிப்பிட்ட நேரத்துக்குக் கனரக வாகனங்களின் போக்குவரவைத் தடைசெய்திருந்தார்கள். மேலும் தனி ஒருவர் பஸ்சுக்காகக் காத்திருக்கும் நேரம் அதிகமாக இருந்ததால் தனியாட்கள் மோட்டார் சைக்கிள்களில் பின்னால் ஒருவரை ஏற்றிச் சென்று (வாடகைக்கார் போன்று) பணஞ் சம்பாதித்தனர். இதனால் தெருக்களிலிருந்து வாகன நெரிசலுக்கூடாகத் தனியொருவர் விரைவாகப் பயணிக்கக் கூடியதாய் இருந்தது. இதை நான் வேறெந்த நகரத்திலோ நாட்டிலோ காணவில்லை.

மதிய உணவை முடித்துக் கொண்டு சலோமிப்பலஸ் என்ற இடத்துக்குச் சென்றோம். இங்கு பல சிறப்பங்காடிகளும் பல உணவுச் சாலைகளும் நிறைய அருகருகே அமைந்திருந்தன. இவையெல்லாம் பல அடுக்குகளுள்ள மாடிக் கட்டிடங்களில் காணப்பட்டன. அன்று வேலை நாளாக இருந்த போதும் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. இக் கட்டிடத்தின் நிலக்கீழறையில் ஒரு நீர்விலங்குக் காட்சியகம் அமைக்கப்பட்டிருந்தது. இங்கே நீர்நாய்கள், பென்குயின் பறவைகள், பல்வேறு வகையான மீன் வகைகள், இறால், திருக்கை போன்றவை காணப்பட்டன. நீர் நாய்களைப் பழக்கிச் சில சாகச விளையாட்டுகள் காட்டினர். இவ்வாறே பென்குயின் பறவைகளும் சில விளையாட்டுக்களைச் செய்து காட்டின. இங்கு பெரும்பாலும் குழந்தைகளும் பெற்றோரும் காணப்பட்டனர்.

அங்கிருந்து நகரின் ஒதுக்குப்புறத்திலிருந்த பெரியதோர் ஆபரண மாளிகைக்குச் சென்றோம். இங்கே மாணிக்கம், வைரம், நீலக்கல் போன்ற மிகவும் விலை கூடிய ஆபரணங்களைப் பல்வேறு நாடுகளிலிருந்தும் தோண்டி எடுத்துக் கொண்டு வந்து செதுக்கியும், மினுக்கியும் ஆபரணங்களைச் செய்கிறார்கள். இவர்களின் காட்சி அறை மிகவும் பெரியது. பல பணக்காரர்கள் இங்கு வந்து விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவதைப் பார்த்தோம். இங்கு செய்யப்படும் நகைகள் மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்குள்ள ஆபரணங்களின் மதிப்பு 5 கோடி டொலர் களுக்கு மேலிருக்கும். ஒவ்வொரு பகுதியிலும் அழகான பெண்களை வேலைக்கமர்த்தியிருக்கிறார்கள். எல்லோரும் ஒரேமாதிரியான உடையில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு மேற்பார்வையாளரும் ஒரு காவற்காரரும் கண்காணித்தபடி இருக்கிறார்கள். நகைகள் யாவும் கண்ணாடிப் பெட்டிகளில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. நாங்கள் உள்ளே போனவுடன் இலவசமாகப் பானங்கள் வழங்கப்படுகின்றன. பின்னர் அங்கிருந்த ஒரு கூடத்துக்கு அழைத்துச் சென்று கற்கள் தோண்டியெடுக்கும் இடங்களையும் முறைகளையும் பின்னர் அவை வெட்டி மினுக்கப்படுவதையும் 15 நிமிடம் படமாகக் காட்டுகிறார்கள். அதன்பின் காட்சியறைகளுக்குச் சென்று பார்த்து வாங்க விருப்பமானவற்றை வாங்கலாம். இங்கு ஏராளமான உல்லாசப் பிரயாணிகள் வருவதைக் காணக் கூடியதாய் இருந்தது. தாய்லாந்தின் மிகப் பெரிய ஆபரணக் கல் வியாபாரி இந்நிறுவனத்தின் உரிமையாளர் என அறிந்தோம். இது ஒரு பரம்பரைத் தொழிலாகச் செய்யப்படுவதாகவும் எமது வழிகாட்டி கூறினார்.

அங்கிருந்து கிலோகிராம் என அழைக்கப்படும் இடத்திற்குச் சென்றோம். இங்கு தேசியப் பொருட்கள் விற்கும் பல கடைகள் ஒரே இடத்தில் அருகருகே காணப்பட்டன. இது ரொறன்ரோவிலிருந்து இரண்டு மணித்தியாலம் பிரயாணஞ் செய்யக்கூடிய சென். ஜோன்ஸ் சந்தையை எனக்கு நினைவூட்டியது. இங்கே பலவகையான தொப்பிகள், விசிறிகள், மரப்பொருட்கள், தேசிய உடைகள், அலங்காரப்பொருட்கள் என எண்ணற்ற பொருட்கள் விற்பனைக்கிருந்தன. இவற்றுடன் உணவுச்சாலைகளும் நிறைய இருந்தன. இவ்விடத்துக்கு அண்மையில் ஒரு விஷ்ணு கோவில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் செல்லும் வாய்ப்புக் கிடைக்

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)




MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து,
- முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# இத்தாலியரான கொலம்பஸ் ஸ்பெயிடிட் நாயகன் எப்படி?



சுந்தரம் இந்திரராஜா

புதிய உலகம் என்று வர்ணிக்கப்படும் அமெரிக்க கண்டங்களுக்குச் சென்றுவரும் தேடலை ஐரோப்பாவில் விதைத்ததன் மூலம் உலக சரித்திரத்தையே மாற்றிய துணிச்சல் மிக்க கடல் பயணத் தலைவன் கிறிஸ்டோபர் கொலம்பஸ். 500 ஆண்டுகள் வரலாறு கொண்ட அமெரிக்கா இன்று உலகத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் முக்கிய நாடாக மாறியிருக்கிறது என்றால், அதற்கான முதல் விதையைப் போட்டவன் கொலம்பஸ். அவரது வாழ்நாளில் ஒரு போதும் அவரது சாதனைகளைப் பாராட்டி விருதுகள் வழங்கப்படவில்லை. ஆனாலும் பல லத்தீன் அமெரிக்கா நாடுகளும் தீவுகளும் கொலம்பஸை ஞாபகப்படுத்தும் முகமாக வெவ்வேறு விடுமுறையுடன் கொண்டாடுகின்றன. 1492 ஒக்ரோபர் 12ஆம் நாள் பஹாமஸ் தீவினை முதல் பயணத்தின் போது அடைந்த நாளை ஸ்பெயினில் தேசிய நாளாகவும், இத்தாலியில் கொலம்பஸ் தினமாகவும் கொண்டாடப்படுகிறது. 1971இலிருந்து கொலம்பஸ் தினம் ஒக்ரோபர் மாத இரண்டாம் திங்கள் கிழமையை அமெரிக் காவில் தேசிய விடுமுறை தினமாக கொண் டாடப்படுகிறது. கொலம்பஸின் பெயரிலிருந்து உருவான உலகில் ஒரு ஒரே நாடு கொலம்பியா.

கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடித்ததை ஞாபகப்படுத்தும் நோக்கில் நினைவுச்சிலை ஒன்று ஸ்பெயின் நாட்டின் கடலோர நகரமான பார்சிலோனா சமாதானத்தின் வாயில் சதுக்கம் (Square of the Gate of Peace) என்ற இடத்தின் மத்தியில் 1888இல் அமைக்கப்பட்டது. 24 அடி உயரமான கொலம்பஸ் சிலை, 131 அடி உயரமான வார்ப்பிரும்புத் தூணில் மேலே நிற்கிறது. இத்தூண் ஒரு கல் பீடத்தில் அமைக்கப்படுகிறது. புதிய உலக பிரயாணமுயற்சியில் தொடர்புள்ள முக்கிய நபர்களையும் கௌரவிக்கும் வகையில் முழுமையான அவர்களுடைய சிலைகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. 197 அடி மொத்த உயரமான கொலம்பஸ் சிலை உயர்த்திய நிலையில் அமைக்கப்பட்டதால் தூரத்திலிருந்தும் பார்க்கலாம்.

கிறிஸ்ரோபர் கொலம்பஸ் ஸ்பெயினில் இருந்து அட்லாண்டிக் பெருங்கடலுக்கூடாக ஒரு முறை அல்ல 4 முறை... 1492இல், 1493இல், 1498இல் மற்றும் 1502 இல் பயணங்களை மேற்கொண்டார். நீண்டதூர கடல் பயணம் என்பது தற்கொலைக்குச் சமமாகக் கருதப்பட்ட 15ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டிலிருந்து பாய்மரக் கப்பலில் புறப்பட்டு அமெரிக்க கண்டத் தீவுகளைச் சென்ற டைந்து அங்கே மாதக் கணக்கில் தங்கியிருந்து, பின் வெற்றிகரமாகத் திரும்பிய துணிச்சல் மிக்க கப்பல் தலைவன் கொலம்பஸ். இந்த துணிச்சல் மிக்க பயணங்களுக்காகக் கொலம்பஸ் சந்தித்த போராட்டங்கள், அடைந்த படுதோல்விகள், எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் எல்லாம் மர்ம நாவல்களில் கூட படித்திருக்க முடியாத உண்மைச் சம்பவங்கள்.

இத்தாலி நாட்டின் ஜெனோவா நகரில் 1451 ஆம் ஆண்டில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கிறிஸ்ரோபர் கொலம்பஸ் 14 வயதிலேயே ஒரு வணிகக் கப்பலில் வேலைக்குச் சேர்ந்தார். 1476ஆம் ஆண்டில் அவர் மேற்கொண்ட ஒரு கடல் பயணம் பெரும் ஆபத்தில் முடிந்தது. அவர் பயணித்த வணிகக் கப்பலைக் கைப்பற்றிய பிரெஞ்சு கப்பல் குழுவினர், கொலம்பஸ் உள்ளிட்ட அனைவரையும் கடலுக்குள் தள்ளி அந்தக் கப்பலைத் தீவைத்துக் கொளுத்தினர். கப்பலின் உடைந்த பாகம் ஒன்றைப் பிடித்தபடி நீந்தித் தப்பித்துக் கரைசேர்ந்தார் கொலம்பஸ்.

'ஆபத்தான கப்பல் வேலைக்கு இனிமேல் போகாதே' என்று பலரும் எச்சரித்தபோதும், 'அதிலுள்ள திகில் அனுபவம் வேறு எந்த வேலையிலும் கிடைக்காது' என்று பதிலளித்தார் கொலம்பஸ். கடல் காற்றின் திசை, கப்பலைச் செலுத்தும் முறை போன்றவற்றைத் தீவிர ஆர்வத்துடன் கற்றுக்கொண்டார். டாலமி, மார்கோ போலோ போன்ற அறிஞர்களின் பயணப் புத்தகங்களைப் பேரார்வத்துடன் வாசித்தார்.

தங்கமும் வைரமும் கொட்டிக்கிடக்கும் இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்குக் கப்பல் மூலமாகச் சென்றுவந்து பெரும் செல்வந்தர் ஆகிவிட வேண்டும் என்பது கொலம்பஸின் கனவாக இருந்தது. ரோமானியர்கள் உருவாக்கிய செல்வவளம் மிக்க கான்ஸ்டான்டினோபிள் (Constantinople) நகரம் 1453ஆம் ஆண்டில் துருக்கியர்கள் வசமான பின், தரைவழியாகக் கிழக்கு ஆசியா செல்வது ஐரோப்பிய நாடுகளுக்குப் பெரும் சிக்கலாக மாறி இருந்த காலகட்டம் அது. உலகம் உருண்டையானது என்பதால், ஐரோப்பாவிலிருந்து மேற்கு நோக்கி கடல்வழியாகப் புறப்பட்டு ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்றுவிடலாம் என்ற கருத்தாக்கம் வலுப்பெற்ற நேரம் அது. மேற்கு நோக்கி அட்லான்டிக் கடலில் பயணப்பட்டால் ஜப்பானுக்கு முன்பாக அமெரிக்கக் கண்டங்களின் பெரும் நிலப் பரப்பு உள்ளது என்பதே அப்போது அவர்களுக்குத் தெரியாது.



அவருடைய கடுமையான ஈடுபாட்டின் காரணமாக அமெரிக்காவைப் பற்றி ஐரோப்பா தெரிந்து கொள்ள வழிவகுத்தது. அத்தோடு இன்றைக்கு பல்வேறு கண்டங்களின் உறவிற்கும் அவருடைய கண்டுபிடிப்பே காரணமாகும். ஐரோப்பாவில் குறிப்பாக மிளகு, கராம்பு போன்ற நறுமணப் பொருள்களுக்கு அப்போது அதிக தேவை இருந்தது. ஏனெனில் குளிர் காலங்களில் மாமிசங்களை பதப்படுத்தி வைப்பதற்கு அவை உதவின. அந்த நறுமணப் பொருள்கள் அத்தியாவசிய தேவை என்று உணர்ந்த ஐரோப்பியர்களுக்கு அவை இந்தியாவிலிருந்து வருகின்றன என்று தெரியும். ஆனால் இந்தியா எங்கிருக்கிறது என்பது தெரியாது. எவ்வுளவு காலம்தான் அரேபிய இடைத்தரகர்களுக்கு தங்கத்தை கொடுப்பது என்று எண்ணிய அவர்கள் இந்தியாவிற்கு கடல்வழி மார்க்கம் கண்டுபிடித்தால் அந்தப் பொருள்களை நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைத்தனர். அப்படி நினைத்தவர்களில் ஒருவர் தான் கொலம்பஸ். 1476ஆம் ஆண்டு கொலம்பஸ் கடல் வழியாக ஐஸ்லாந்திற்கும், இங்கிலாந்திற்கும் சென்றார். ஆனால் ஆசியாவுக்கு கடல்வழி மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதுதான் அவரது தணியாத ஆர்வமாக இருந்தது.

1485ஆம் ஆண்டில் போர்த்துக்கீசிய அரசர் இரண்டாம் ஜோனை சென்று சந்தித்த கொலம்பஸ், தனது கடல் பயணத்துக்கு நிதி உதவிகோரினார். நல்ல பதில் இல்லை. 3 ஆண்டுகள் காத்திருந்துவிட்டு, மீண்டும் ஒருமுறை இரண்டாம் ஜோனை சென்று சந்தித்து தனது திட்டத்துக்கு உதவி கோரினார். ஏமாற்றம் தான் மிஞ்சியது. அடுத்ததாக, ஸ்பெயின் நாட்டு அரசி இசபெல்லாவை 1489ஆம் ஆண்டு சந்தித்து தனது திட்டத்தை விளக்கினார். அரசி தனது மந்திரிகளிடம் விவாதிக்கச் சொன்னார். சாத்தியமே இல்லாத ஏமாற்றுத் திட்டம்" என்று சொல்லி அனுப்பிவிட்டனர். தோல்வியைக் கண்டு துவண்டுவிடவில்லை கொலம்பஸ். திட்டத்தை விவரிக்கும் முறையை மாற்றினால் அரசியையும் அரசரையும் கவர்ந்துவிடலாம் என்று திட்டமிட்டார். எனது கடல் பயணத்தை ஆதரித்தால் அண்டை நாடான போர்த்துக்கல்லைவிட ஸ்பெயின் நாடு பெரிய பேரரசாக மாறிவிடும்" என்று ஆசைகாட்டினார். கொலம்பஸின் விடாமுயற்சிக்கு வெற்றி கிடைத்தது. அரசி இசபெல்லா கொலம்பஸின் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தார். கொலம்பஸ் குழு திகில் பயணம் ஒன்றை நினா, பின்டா, சாந்தா மரியா ஆகிய மூன்று கப்பல்களில் சில மரணதண்டனை குற்றவாளிகள் உட்பட 90 பேருடன் 1492ஆம் ஆண்டு ஒகஸ்ட் 3ஆம் தேதி தொடங்கியது.


ஒக்ரோபர் 12ஆம் நாள் அதிகாலை வட அமெரிக்காவுக்கும், தென் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள கடல் பகுதியில் அமைந்துள்ள பஹாமஸ் தீவினை சென்றடைந்தது கொலம்பஸ் குழு. அடுத்த சில நாட்களுக்குப் பின் அங்கிருந்து புறப்பட்டு அருகிலுள்ள கியூபா நாட்டைச் சென்றடைந்தனர். அதன்பின் ஹைடி (Haiti) தீவுக்குச் சென்றபோது சாந்தா மரியா கப்பல் அங்கு தரை தட்டியது. தன்னுடன் வந்தவர்களில் 39 பேரை அங்கேயே தங்கியிருந்து தனது சார்பில் அந்தப் பகுதியில் ஆட்சி நிர்வாகம் நடத்தும்படி ஏற்பாடு செய்தார் கொலம்பஸ். பின் 1493ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் நாள் நினா கப்பலில் ஸ்பெயின் நோக்கித் திரும்பும் பயணத்தைத் தொடங்கினார்.

மார்ச் 14, 1493இல் கிறிஸ்ரோபர் கொலம்பஸ் தனது முதல் புதிய உலக பிரயாண முயற்சியை வெற்றிகரமாக முடித்து பார்சிலோனா துறைமுகத்திற்கு வந்தபோது அரசர் பெர்டினாண்ட் மற்றும் அரசி இசபெல்லா இருவரும் அவருக்கு வரவேற்பு உபசாரம் அளித்த பிளாக்கா டெல் ரெய் (Plaça del Rei) அரண்மனை பார்சிலோனாவிலுள்ளது. தான் கொண்டுவந்த பரிசுகள், வாசனைத் திரவியங்கள், செடி கொடிகள், போன்றவற்றையும், அரசர் - அரசி முன்பாக வைத்தார் கொலம்பஸ். உறுதி அளித்தபடி, அவற்றில் ஒரு பகுதி கொலம்பஸுக்கே வழங்கப்பட்டது. அவர் கண்டு பிடித்த பகுதிகளில் அவரே நிர்வாகம் செய்யலாம் என்றும் அனுமதி வழங்கப்பட்டது.

கொலம்பஸ் ஸ்பெயினிலுள்ள காடிஸ் (Cádiz) துறைமுகத்திலிருந்து செப்ரெம்பர் 24, 1493இல் தனது இரண்டாவது பயணத்தைத் தொடங்கினார். 17 கப்பல்கள்,

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# அப்பா...

10 ஆம் பக்கத்தொடர்ச்சி

மூன்று, நான்கு கதாநாயகிகள் நடிக்கிற படங்களையே தொடர்ந்து தேர்வு செய்வதன் ரகசியம் என்ன?

இதில் ரகசியம், கிசுகிசு எதற்கும் இடமில்லை. 'சோலோ'வில் எனக்கு நான்கு விதமான கதாப்பாத்திரங்கள். ஒவ்வொரு பாத்திரத்துக்கும் வேற வேற கதாநாயகிகள். 'மகாநதி'யில் கீர்த்தி, சமந்தா இருக்கிறார்கள். கதை அப்படி அமைந்திருக்கிறதே தவிர நிறைய நாயகிகள் இருக்கிறது



மாதிரியான கதைதான் வேண்டும் என்று நான் கேட்பதில்லை.

திரைத்துறையில் யார் உங்களுக்கு நெருக்கமான நண்பர்கள்?

பஹத் பாசில். என்னுடைய கல்யாணத்துக்கு அவனுடைய அப்பாதான் வாசலில் நின்று வந்தவர்களை வரவேற்றார். அதே போல் அவனுடைய கல்யாணத்தில் நான் அவன்கூடவே இருந்தேன். என் மனைவியும் அவனுடைய மனைவி நஸ்ரியாவும் ரொம்ப நெருங்கிய தோழிகள். சென்னை லயோலா கல்லூரியில் படித்தபோது தெலுங்கு நடிகர் நாக சைத்தண்யா என்னுடைய நெருங்கிய நண்பன். அவன் மூலமாக நடிகர் ராணா-வோட நட்பும் கிடைத்தது.

என்ன மாதிரியான பாத்திரங்கள் பண்ணவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

இந்த விஷயத்தில் என்னிடம் எந்த முன் திட்டமும் இல்லை. எந்த பாத்திரமாக இருந்தாலும் ரசிகர்கள் மனதில் பதிகிற மாதிரி இருக்கவேண்டும், அவ்வளவுதான். எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் துல்கர் பண்ணிடுவான் என்ற நம்பிக்கையைத் தரும் எந்தக் கதாப்பாத்திரத்திலும் நடிக்கத் தயாராக இருக்கிறேன்.

# பெண்களுக்கு...

13 ஆம் பக்கத்தொடர்ச்சி

அழித்தல், தனிமைப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும். நபர் ஒருவரின் ஆளுமையையும், சூழலையும் பொறுத்து வன்முறைகள் வேறுபடும்.

வாய்மொழியிலான வன்முறை (Verbal Violence) என்னும் போது உணர்வு பூர்வமான அல்லது உளவியல் ரீதியிலான வன்முறைக்கு வாய்மொழியை பாவித்தல். அச்சுறுத்தல், கத்துதல், ஏசுதல், சிறுமைப்படுத்தல் போன்ற பல செயல்கள் இதில் இடம் பெறும். இது வெளிப்படையாகவன்றி வீடுகளில் நடைபெறுகிறது. இது ஒரு பெண்ணின் சுயகௌரவத்தையும், உளவியல் நலத்தையும் பாதிப்பதுடன் உடலையும் பாதிக்கிறது.

பாலியல் வன்முறை (Sexual Violence) என்னும்போது ஏதாவது ஒரு பின்னணியில் பாதிக்கப்பட்ட நபருக்கு யாரேனும் ஒருவரினால் பலாத்காரத்தை பயன்படுத்தி, நபர் ஒருவருக்கு எதிராக திருப்பப்பட்டுள்ள பாலியல் செயற்பாடு, முயற்சி, தேவையற்ற பாலியல் கருத்துக்கள் அல்லது அணுகுதல்கள் இதில் அடங்கும். அச்சுறுத்தல், பயமுறுத்தல் அல்லது உடல்ரீதியிலான அழுத்தம் ஆகியவற்றினூடாக பாலியல் வல்லுறவு அல்லது நிர்ப்பந்தத்திலான பாலுறவு, முறை தவறிய பாலுறவு, பாலியல் தொந்தரவு, பாலியல் பலாத்காரம் மற்றும் தேவையற்ற பாலியல் செயற்பாடுகளை நிர்ப்பந்தத்தில் அல்லது ஏனையோருடன் பாலியல் மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்தித்தல் இதில் அடங்கும்.

பொருளாதார வன்முறை (Economic Violence) என்னும் போது நிதிசார் அல்லது பொருள் வளங்களை ஈட்டுவதற்கு, நன்மையடைவதற்கு அத்துடன் அனுபவிப்பதற்கு ஒருவரின் சுதந்திரத்தை தடுக்கின்ற செயல்பாடாகும். வாழ்வாதார மற்றும் தனிப்பட்ட செலவினங்களுக்கு நிதியை வழங்கமறுத்தல், நிதிசார் ரீதியாக பங்களிப்பதற்கு நிராகரித்தல், உணவு மற்றும் அடிப்படை தேவைகளை மறுத்தல், தொழில் பெற கட்டுப்படுத்தல் அல்லது நிர்ப்பந்தித்தல் இதில் அடங்கும்.

தொடர்பாடல் வன்முறை (Cyber Violence) என்னும்போது கையடக்க தொலைபேசி மற்றும் வலைத்தளங்கள், ஈமெயில், ஃபேஸ்புக் மூலம் பல வன்முறைகளை இழைத்தலாகும். தற்போது தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் இதில் பெரிதும் பயன்படுகின்றன. ஆபாச படங்களை அனுப்புதல், வலைத்தளங்களை தவறாக பயன்படுத்துதல், பெண்களினதும், பெண்பிள்ளைகளதும் அனுமதியின்றி அவர்களின் புகைப்படங்கள், வீடியோக்களை தரவேற்றுதல், ஈமெயில்களூடாக அச்சுறுத்துதல், பயமுறுத்தி பணம் பறித்தல் ஆகியவை இதில் அடங்கும். தாயகத்தில் இடம்பெற்ற வித்தியா என்னும் இளம் மாணவி ஒருவரின் மரணம் இத்தகைய வன்முறைக்கு உட்பட்டதொன்று. நாட்டினையே உலுக்கிய சம்பவம் இதுவாகும்.



இன்றுள்ள சூழ்நிலையில் வீடுகளில் நடை-பெறும் வன்முறை (Domestic Violence) உச்சக்கட்டத்தினை அடைந்துள்ளது. பெண்களை அடக்குமுறையில் வைத்திருக்கும் வீடுகள் பல உள. பால்நிலை என்ற அடிப்படை முக்கிய காரணமானது. பெண்களை அடக்குகின்ற சமூகங்கள் தொடர்ந்தும் உள்ளன. சில பெண்கள் வன்முறையை தூண்டுகின்றனர் என கருதப்பட்டாலும் பெரும்பான்மையினர் ஆண்களேயாவர். இவ்வகையை வன்முறைகளில் பணம் மட்டும் முக்கிய பங்கெடுப்பதில்லை. சகல சமூக பொருளாதார மட்டங்களிலும் குடும்ப வன்முறை இடம்பெறுகிறது.

ஆண்களின் மதுபான பாவனை, மன அழுத்தம், போதைப்பொருட்களின் பாவனை, தன்னாதிக்கம் என்பன குடும்ப வன்முறைக்கு காரணிகளாகலாம். குடும்ப வன்முறையை சட்டம் தண்டிக்கிறது. சமூகரீதியிலும் இது ஏற்புடையதல்ல. பெண்களின் மனித உரிமையும் மீறப்படுகிறது. இதனை தீர்ப்பதற்கு பால்நிலை குறிப்பான சமுதாய தாக்கங்கள், கலாசார வரைவிலக்கணங்கள், உறவுகளின் வகிபாகங்கள், ஆதனங்களின் உரிமைப் பெறுமானங்கள் மட்டுமே தீர்வு என எண்ணுதல் வேண்டும். ஊடகங்கள் இதுபற்றி அக்கறை கொள்ளாமை தீர்க்கப்படல் வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் அண்மைக்கால நிகழ்வுகளை நோக்கின் தலையே சுற்றலாம். குழுவான பாலியல் வல்லுறவு, நடுவீதியில் வைத்து கொலை செய்தல், முகத்தில் திராவகம் வீசுதல், கட்டாய கருக்கலைப்பு, பெண் சிசுக்கொலை, அதிகாரத்தில் உள்ள படையினர்களின் பாலியல் பலவந்தம், தேவையற்ற பாலியல் தண்டனைகள், பாலுறுப்பு சிதைப்புகள் (ஆபிரிக்கா, மத்தியகிழக்கு), மார்பகங்களை சுடுதல், (மேற்கு மத்திய ஆபிரிக்கா), கட்டாய மகப்பேற்று நிகழ்வுகள் (சிசேரியன்), பூர்வீக குடிகளை கொலைசெய்தல், அகதிகள் மீதான வன்முறை, விளையாட்டு இடங்களில் வன்முறை, ஆண்கல்லூரிகளின் வன்முறை என நூற்றுக்கணக்கில் இன்வன்முறைகள் பெருகி வருகின்றன. பல சீர்த்திருத்த இயக்கங்களின் தேவை இன்று வெகுவாக உணரப்பட்டுள்ளது. VAW எனப்படும் Violence Against Woman பற்றிய கருத்துகள் முதலில் 1993 இல் வியன்னாவில் உருவாகி இன்றுவரை அது தொடர்கிறது. 1999 டிசம்பர் 17இல் இருந்து VAW ஐக்கிய நாடுகளின் அங்கீகாரம் பெற்று வந்துள்ளது.

# செஞ்சீனா...

18 ஆம் பக்கத்தொடர்ச்சி


கவில்லை. இங்கிருந்த ஓர் உணவுச் சாலையில் எமக்கு இராப்போசனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த இடத்துக்கு றூவென் தெப் மண்டபம் என்ற பெயர். இங்கு தாய்லாந்தின் தேசிய உணவு வகைகளுடன் இராமாயணத்திலிருந்து சில காட்சிகளை ஆடக் காண்பித்தார்கள். இக் காட்சிகள் இராமர், இராவண யுத்தத்தை விபரிக்கும் காட்சிகளாகும். இந்நடனம் பெரும்பாலும் கதகளி நடனம் போன்று மிகவும் ஆறுதலான அபிநயங்களைக் கொண்டு ஆடப்பட்டது. அதற்கேற்ற பின்னணி வாத்தியங்களும் இசைக்கப்பட்டன. இவ்வாத்தியங்கள் அக்காலத்தில் பாவிக்கப்பட்ட கம்பி வாத்தியங்களாகவே இருந்தன.

இந்த மண்டபம் ஒரு வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. சிறிய மேசைகளும், கதிரைகளும் பள்ளத்தில் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவருக்கும் ஒரு தனிமேசை ஒதுக்கப்பட்டிருந்தது. நீங்கள்



ஈழநாடு பத்திரிகையின் 25வது ஆண்டு விழாவுக்கு அனுசரணை மற்றும் ஆதரவு வழங்க விரும்பும் அன்பர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இந்நேவேளை சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடவுள்ளதால் வர்த்தகப் பிரமுகர்கள், வியாபார நண்பர்கள் ஆதரவு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9800

# மருத்துவமனைகள் பரப்பும் நோய்கள்!

## அறிவியல் கதிர்

- பேராசிரியர் கே.ராஜு -

உடல்நிலை சரியில்லாதபோது மருத்துவமனைக்குச் சென்று வைத்தியரைச் சந்திக்கிறோம். மிக மோசமான உடல்நிலையெனில் மருத்துவனையிலேயே உள்நோயாளியாக சேர்க்கப்படுகிறோம். அங்கு நாம் எந்த நோயின் சிகிச்சைக்காகச் சேர்ந்தோமோ அந்த நோய் குணமாவது ஒரு புறம் இருக்கட்டும். புதிதாக வேறு ஏதாவது நோயுடன் திரும்ப வேண்டியிருந்தால் எவ்வளவு அதிர்ச்சியாக இருக்கும்? இது என்ன கொடுமையாக இருக்கிறதே என்று அதிர்ச்சியடைய வேண்டாம்! மருத்துவமனைக்குச் செல்பவர் களில் பலர் மேலும் ஆபத்தான சில நோய்களுடன் (வீடு) திரும்புகிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை அளிக்கிறது உலக சுகாதார நிறுவனம். எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் உலகில் 14 லட்சம் மக்கள் மருத்துவ மனையிலிருந்து பெற்ற தொற்று நோயால் அவதிப்படுகிறார்கள் என்கிறது அந்த நிறுவனம். இத்தகைய நோய்களுக்கு எச்ஏஜ (hospital-acquired infections) என்ற பெயரும் சூட்டப்பட்டுள்ளது. ஓராண்டில் எச்ஏஜ காரணமாக 2 லட்சம் பேர் பாதிப்புக்கு ஆளாகின்றனர். 80,000 பேர் இறந்தும் போகிறார்கள்.

“இந்த நிலைமையிலிருந்து மீள மருத்துவமனையைத் தூய்மையாகப் பராமரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்... ஒவ்வொரு கட்டத்திலும் நன்கு தீர்மானிக்கப்பட்ட செயல்முறை வடிவங்களை அமல்படுத்த வேண்டும்” என்கிறார் ஐஎன்ஜசிசி எனப்படும் மருத்துவமனைத் தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்கான சர்வதேச நிறுவனத்தின் தலைவர் விக்டர் டி. ரோசென்தால். இவர் இப்பிரச்சினை மீது பல ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வருபவர். “கைகளைச் சுத்தமாகப் பராமரிப்பது போன்ற தொற்றுநோய்த் தடுப்புக்கான வழிமுறைகளை சரிவரக் கடைப் பிடிக்காததாலும் பழசான தொழில் நுட்பத்தை மாற்றாமல் அப்படியே கடைப் பிடிப்பதனாலும்



எச்ஏஜ பாதிப்புகள் ஏற்படுகின்றன” என்கிறார் ரோசென்தால். எச்ஏஜ நோய்கள்தான் எவை என்ற கேள்வி எழுவது இயற்கை. இரத்த ஓட்டத்தில் தொற்றும் கிருமிகள், நிமோனியா, சிறுநீர்க் குழாய்த் தொற்று, அறுவைச் சிகிச்சை நடைபெறும் இடத்தில் ஏற்படும் தொற்று போன்றவையே அவை.

20 இந்திய நகரங்களில் உள்ள 40 மருத்துவமனைகளில் 2004ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுகளுக்கு ஆய்வுகளை நடத்திய ஐஎன்ஜசிசி 2015 ஆம் ஆண்டில் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது. அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த 2,36,700 நோயாளிகளிடமிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அப்படித் தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கை இந்தியாவில் எச்ஏஜ பாதிப்பு மிக அதிகமாக இருக்கிறது என்று கூறுகிறது. “வேறு பல நாடுகளில் உள்ளது போல, இந்தியாவில் மருத்துவமனைகளைத் தரப்படுத்த வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. இந்தியாவில் உள்ள தொழில்நுட்பம் வளர்ந்த நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் தொழில்நுட்பத்திலிருந்து மாறுபட்டது. பொது மருத்துவமனைகளில் தொற்று நோய்த் தடுப்புத் திட்டங்களை அமல்படுத்துவதற்கு நிர்வாகரீதியாகவும் நிதி ஒதுக்கீட்டின் மூலமாகவும் அரசு கொடுக்கும் ஆதரவு போதுமானதல்ல. இதன் காரணமாக இங்கே செவிலியர் - நோயாளிகள் விகிதம் மிகக் குறைவாக உள்ளது. மருத்துவமனைகளில் அன்றாடம் கூடும் மக்கள் கூட்டத்தின் காரணமாக பல தூய்மைப் பராமரிப்பு நடவடிக்கைகள் கைவிடப்படுகின்றன. இப்பெரும் கூட்டத்தை சமாளிக்கும் அளவுக்கு மருத்துவமனை ஊழியர்களின் எண்ணிக்கை இல்லாதது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது. அவசர சிகிச்சைப் பிரிவில் மூன்று படுக்கைகளுக்கு ஒரு நர்ஸ் என்பது போது மானதே அல்ல. பொதுசுகாதாரத்திற்கு குறைவான நிதியே ஒதுக்கப்படுவதால் போதுமான எண்ணிக்கையில் ஊழியர்கள் நியமிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்கள், முறையான பயிற்சி, சரியான கல்வி, நோயாளிகளிடம் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை, காலத்துக்கேற்ற நவீன தொழில்நுட்பம் ஆகிய எல்லா அம்சங்களிலும் குறைபாடுகள் இருக்கின்றன. இவையெல்லாம் விரைவில் சரிசெய்யப்பட வேண்டும்” என்கிறார் ரோசென்தால்.



நடைமுறையில் உள்ள சிகிச்சை முறைகளுக்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டு தன்இயல்புமாற்றம் (mutation) அடையும் நுண்ணுயிரிகளை எதிர்க்க, உரிய சிகிச்சை முறைகளை உடனுக்குடன் கண்டுபிடிக்க வேண்டிய நெருக்கடியில் முன்னெப்போதையும் விட தற்போது நோயியல் வல்லுநர்கள் இருக்கின்றனர். ஒரு அறுவை சிகிச்சைக்குப் பிறகோ, மருத்துவமனைக்கு அடிக்கடி சென்று வருவதாலோ உடலில் எதிர்ப்புசக்தி குறைவாக உள்ள நோயாளிகளே புதிய தொற்றுநோய்க்கு ஆளாகின்றனர். “ஆன்ட்டிபயாடிக் மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்த வேண்டாம். தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து எச்ஏஜ பாதிப்புகளைக் குறைக்க வேண்டுமே தவிர, தொற்றுநோயைப் பரவ விட்டு அதன் பிறகு ஆன்ட்டிபயாடிக் மருந்துகளைக் கொடுத்துக் கொள்ளலாம் எனக் காத்திருப்பது சரியல்ல” என்று மருத்துவர்களை எச்சரிக்கிறார் ரோசென்தால்.

மூலம் - சிந்தியா ஆனந்த்




## எல்லையற்ற பெருவெளி

மன்னிப்புக் கேட்பது நன்று
மன்னிப்பை ஏற்பது மிகநன்று

நன்றியை உணர்வது நன்று
நன்றியைக் கல்வெட்டாக
மனவெளியில்
பதித்து வைத்திருப்பது மிகநன்று

மன்னிப்பில் உலகம்
உருளுவதை வரலாறுகள் கூறுகின்றன

தாயகத்தில்
அடிபட்டு இறந்தோர்க்கும்
அநியாயமாக அழிந்த அப்பாவிகளுக்கும்
ஆழ்மனக் கண்ணீரால் அஞ்சலிகள்
நாடு கடப்பதற்குக்
கதவைத் திறந்துவிட்டோர்க்கு நன்றி
எல்லை தாண்ட உதவியமைக்காக
கடலுக்கும் வானுக்கும் மிக நன்றி

புலம்பெயர்ந்தபோது வாழ்வளித்த
தேசங்களுக்கு மனம் நிறைந்த நன்றி

திக்கெட்டும் சென்று கல்வி பொருள்
செல்வங்களைச் சேமித்து வருதல் நன்று



புலம்பெயர் நாடுகள்
புலம் பெயர்ந்தோர்க்கு
இரண்டாம் தாயகமாகவும்
அவர்தம் பரம்பரைக்கு முதலாம்
தாயகமாகவும்
மாறிவிட்டமை தெளிவாகின்றது

தாய் வேருக்கு எப்போதும் நன்றி.
குடியேற்ற நிலங்களுக்கு
என்றென்றும் கனிவுடன் நன்றி.



- க. முத்துராஜா -

# மொன்றியலில் எடுக்கப்பட்ட ‘எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா’

- கவிஞர். ஆ. சிறிஸ்கந்தராஜா -
மொன்றியல்

தமிழகத்தில் வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா, அந்த வீச்சின் பொறியாக மொன்றியால் நகரில் வீணை மைந்தன், கே.ரி. சண்முகராஜா அவர்களின் சிந்தனையில் பற்றி, தமிழீழ அபிமானிகளின் தீபமாக (22/10/2017) அன்று மொன்றியால் வனியர் கல்லூரி அரங்கத்தில் ஒளிர்ந்தது.

தமிழகத்துத் திரைவானின் ஒரு நட்சத்திரமாக, தமிழக அரசியலைத் திருப்பிப்போட்டு ஒரு சஹாப்தத்தை வழங்கியவராக, மறைந்து 30 வருடங்களின் பின்னரும் ஒரு தலைவனாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களைக் கொண்டாடுகின்றோம் என்றால் - இளைய தலைமுறை உயர்வான விமர்சனங்களை இன்றும் மேடைகளிலும், சஞ்சிகைகளிலும் பரிமாறுகிறதென்றால் எத்தகைய ஒளிவீச்சை, காந்தப்புலங்களை இந்த மாமனிதர் எம்.ஜி.ஆர். உருவாக்கியிருக்க வேண்டும்.

வீணை மைந்தன் சண்முகராஜா, எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா எடுப்பதாக தொலைபேசி மூலம் எனக்குத் தகவல் தந்து, ஆதரவைக் கோரிய அந்தக்கணம் அதிர்வுடன் கூடிய மகிழ்ச்சி அலை நெஞ்சத்தில் அடித்தது. எனது பதின்ம வயதில் திரையுலகை ஆட்சிசெய்த மக்கள் திலகமும், நடிகர் திலகமும் ரசிகர் மனதை ஆட்சி செய்தது உண்மை. விழாவன்று பேராசிரியர். இராமு (தமிழகம்) குறிப்பிட்டிருந்தது போல நான்மட்டுமல்ல, “இன்றைய தினம் 45 வயதிற்கும் 80 வயதிற்கும் இடைப்பட்ட தமிழர்களில் எம்.ஜி.ஆர். ஆதிக்கம் இருக்காமல் இருக்கமுடியாது. இரத்தத்தில் அவரது வெப்பம் இன்றும் சூடாகவே இருக்கின்றது.” எம்.ஜி.ஆர், மக்களின் முதன்மையான பொழுதுபோக்கு ஊடகமான திரைப்படங்களில், தமிழ் கூறும் உலகத்திற்கு தமிழனின் புராதன, சரித்திர பிம்பங்களை தரிசிக்க வைத்து திருடாதே, தூங்காதே, விழிப்புணர்வோடு செயல்படு - மது, புகைபிடித்தலை விலக்கு-என சமூக ஒழுக்கத்திற்கு வித்திட்ட மாமனிதர்.

எம்.ஜி.ஆர். படங்களின் கருத்து நிறை வசனங்களால், பாடல்களால் சோகங்களை வென்று தம் வாழ்க்கையின் உந்துசக்தியை (positive energy)ப் பெற்றவர்கள் தமிழக மக்கள் மாத்திரம் அல்ல எங்கெல்லாம் அவரது திரைப்படங்களும் ஏனைய ஊடகங்களும் அவர் செய்தியை எடுத்துச் சென்றதோ, அங்கெல்லாம் வதியும் தமிழ் கூறும் நல்லுலகும்தான்.



தன் இரத்தத்தின் இரத்தமான ஈழத் தமிழினத்தின் விடுதலைக்கு தனது இறுதி மூச்சுள்ளவரை உதவிக்கரம் நீட்டி அணைத்தவை தான், இந்த மாமன்னனின் பொற்கரங் கள். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் தோள்கொடுத்த அந்த இலக்கு தோல்வியைத் தழுவியிருக்கலாம். ஆனால் ஈழத் தமிழர் இன்னல் தீர உதவவேண்டும் என்ற உணர்வு, மொழி, இனப்பற்றால் ஈழத்தமிழருக்காக நாடி நரம்புகளில் ஓடிய அவரது இரத்தத்தின் சத்தம் கௌரவிக்கப்படுவது சாலப்பொருத்தம்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களை பரப்பும் ஓர் அற்புத ஊடகம் சினிமா அதாவது திரைப்படங்கள். அவற்றை சமூகத்திற்கு வெற்றிகரமாக கொண்டுசேர்க்க அதன் பாத்திரங்கள் செதுக்கப்படவேண்டும். சொந்த வாழ்க்கையில் அந்தக் கருத்துக் களை கடைப்பிடிக்கும் நாயகனால் மட்டும்தான் மக்களின் மனதில் ஆழமான பதிவினைச் செய்யமுடியும். அதனால்தான் திரைக் கதைக்காக, பாடலுக்காக, கதாபாத்திரம் எழுதப்படாமல் மக்கள் திலகத்திற்காக எழுதப்பட்டது. கவிப்பேரரசு வைரமுத்து எம்.ஜி.ஆர். பாடல்களைப் பற்றி தந்த வரிகள் இவை: உங்கள் பாடல்களெல்லாம் தமிழ்நாட்டுக்கு நீங்கள் செய்த ரத்ததானம்.

ஒரு பாடலின் பாடலாசிரியன் காணாமல் போவது பாடலுக்கு வெற்றி ஆகாது என்ற போதிலும், பாடலாசிரியன் முகம் கரைந்து போய் நீங்கள் மட்டுமே முகம் காட்டுவது உங்கள் பாடல்களில் மட்டும்தான். இதனால் தான் கவியரசு கண்ணதாசன், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், வாலி, போன்ற புகழ் பெற்ற கவிஞர்கள் எழுதிய பாடல்கள் “எம்.ஜி.ஆர். பாடல்கள்” என்று முத்திரை குத்தப்பட்டது.

இனி, மொன்றியால் வனியர் கல்லூரி அரங்கத்தில் 22/10/2017 அன்று ஒளிர்ந்த நூற்றாண்டு விழா மேடைக்கு வருவோம். ஆரம்ப நிகழ்ச்சியாக, மங்கல விளக்கேற்றப்பட்டு, இலங்கையில் இழந்துவிட்ட நம் உடன்பிறப்புகளுக்கு அக வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்தினையும், கனடா தேசிய கீதத்தையும் தமிழில் செல்விகள்: பிரவீணாவும், சஹானாவும் இசையுடன் பாடி விழாவிற்கு ஆரம்ப தளம் அமைத்துக் கொடுத்தார்கள். விழாவை ஒரு கோர்வையாக, அழகு தமிழில் வார்த்துவிட்ட தொகுப்பாளினி திருமதி. உமாவும் உதவி ஆங்கிலத் தொகுப்பாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் செயல்பட்ட வினோத் அவர்களும் நிகழ்வினை மெருகேற்றினர். தமிழ்த்தாய் வாழ்த்தைத் தொடர்ந்து, கவிஞர் கல்கிதாசன், எஸ்.ரி. கனகசபாபதி வரவேற்புரை நிகழ்த்தினார். முகவுரையில், விழா எடுத்த நண்பர் வீணை மைந்தன், கே.ரி. சண்முகராஜாவிற்கு நன்றி நவின்றதுடன் கலந்து கொண்ட அத்தனை நிகழ்வுகளையும், அவற்றை வழங்கும் கலைஞர்களின் அறிமுகத்தையும் விபரித்த பாணி நன்றாக இருந்தது. அடுத்து அறிமுக வாழ்த்துக் கவியை வழங்கு முன்பு, தமிழ் மக்களின் நன்றியுணர்வை காட்ட எடுக்கப்பட்ட இந்த முயற்சியை ஒரு வரலாற்றுப் பதிவாகக் கருதி, தனியொருவனாக இந்த விழாவினை விதைத்த வீணை மைந்தன் கே.ரி. சண்முகராஜா அவர்களை வாழ்த்தி நன்றி கூறியது பதிவு செய்யப்பட்டது.

வாழ்த்துரையை வழங்கிய ஆசிரியர். கே.வி. செல்வராஜா, யாழ். நகரில் எம்.ஜி.ஆரின் வருகையின்போது பெற்ற தனது அனுபவங்களை சிறந்த ரசனையுடன் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து, நாத பாரதி, கே. சுதாகரன் அவர்கள் முத்தான மூன்று பாடல்களை ஆர்மோனியம், தாள வாத்தியங்கள் சேர பாடி காதுக்கினிய இசை விருந்தளிந்தார். விருந்தினர்களாக வருகை தந்திருந்த மொன்றியல் நகர பிதா. திரு. அலன் டி சொய்ஸா அவர்களும், நகரசபைத் தேர்தலுக்காக நிற்கும் அவர் பிரதிநிதிகளும் மொன்றியல் தமிழ் சமூகத்தின் கலாசார பண்புகளையும், மேடையில் இளையதலைமுறையினர் நிரூபித்துக் கொண்டிருக்கும் இயல், இசை, நாட்டிய கலை நிகழ்வுகளையும் பாராட்டுவதுடன் நின்றுவிடாமல், எம்.ஜி.ஆர் குணாதிசயங்களை விபரித்த அந்த ஈடுபாடு அதிசயிக்க வைத்தது. மறைந்த சமூக சேவகி திருமதி. ரமணி பாலேந்திரா அவர்களின் கணவரும், சமூக நலன் விரும்பியுமான பெரி. பாலேந்திரா அவர்களின் அரசியல் தொடர்பு இந்த பிரமுகர்களின் சமூகத்திற்கு பாலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

நகரசபைப் பிரமுகர் திரு. கிரஹம் தனது சிற்றுரையை நிறைவு செய்த பின்னர் தொகுப்பாளர் வினோத்தின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழில் பச்சை குத்தப்பட்ட கிரஹம் என்ற தனது பெயர் கொண்ட கரத்தை பார்வையாளர்களுக்குக் காட்டி பலத்த கரவொலியைப் பெற்றார். தமிழிசைத் தென்றல் பொன். சிவா, இளங்கலைஞர்களுடன் சேர்ந்து “ஒரு தாய் மக்கள் நாமென்போம்” பாடலை karaoke இசையுடன் தாளம் தப்பாது பாடி மெய்மறக்க வைத்தார். உச்சஸ்தாயி முத்தாய்ப்புக்களை சரியாக வைத்து T.M.S. அவர்களின் நினைவலைகளை அவர் பாடிய எல்லாப் பாடல்களிலும் காட்டினார் என்றால் மிகையாகாது.

(தொடர்ச்சி 38 ஆம் பக்கம்...)




# யாவரும்...

16 ஆம் பக்கத்தொடர்ச்சி

இருந்தது. இந்த இயற்கை விசைகளைத் தான் நாங்கள் பேரண்டத்தின் அந்த மூன்று நிமிட வரலாற்றில் இதுவரையிலும் பார்த்தோம்.

ஆரம்பத்தில் நான்கு இயற்கைவிசைகளும்



ஒன்றிணைந்து மேம்பட்டவிசையாக இருந்தன. பிளாங் யுகத்தின் பின்னர், ஈர்ப்பு விசை இந்த மேம்பட்டவிசையில் இருந்து தனியாகப் பிரிந்து வந்து விட்டது. அதன் பின்னர் பேரிணை காலம் முடிந்ததும் வலிந்தவிசை இணைப்பில் இருந்து விடுபட்டுக் கொண்டது. அதனையடுத்து வந்த மின்மென்விசைக் கால முடிவில் கடைசியில் ஒன்றாக இருந்த மின்காந்தவிசையும், மெலிந்தவிசையும் தனித்தனி விசைகளாகி விட்டன. இது எப்படி நிகழ்ந்தது என்பதற்கும் விளக்கம் தருகின்றார்கள் விஞ்ஞானிகள்.

பேரண்டத்தின் ஆரம்ப காலத்தில் பேரண்டத்தின் மிக உயர்ந்த வெப்பநிலையால் பிளாங்கின் யுகத்தில் எல்லா வகை இடையோன்களும் தாம் கொண்டிருந்த உயர் சக்தியால் போட்டோன்கள் போன்றே இயங்கின. அதனாற்றான் அவற்றினைப் பிரித்துப் பேதப்படுத்திப் பார்க்க முடியாத வகையில் தனியொரு விசையாக, மேம்பட்ட விசையெனக் கூறவேண்டி வந்து விட்டது. பிளாங்யுக முடிவில், முன்னரைப் போலல்லாது வெப்பநிலை கொஞ்சம் குறைந்ததும் ஈர்ப்போன்கள் போட்டோனை விடவும் வித்தியாசமாக தொழிற்படும் தன்மையைப் பெறு கின்றன. மற்ற மூன்று இடையோன்களும் ஒரே இயல்பிலேயே, அதாவது போட்டோன் கள் போன்றே இப்போதும் ஒழுகுகின்றன. அதனால் முதலாவது சமச்சீர் உடைவு நிகழ்கின்றது. மூன்று இயற்கை விசைக-ளின் ஒன்றிப்பான காலமாக பேரிணைக் காலம் வருகின்றது.

இனி, பேரிணைக் காலமுடிவிலும் புடவியின் வெப்பநிலை, இன்னமும் குறைந்து விடுகின்றது. இப்போது புடவி கொண்ட வெப்பநிலையானது வலிந்தவிசைக்குக் காரணமாக இருக்கும் இடையோன்களான குழுவோன்களை தம்மியல்பில் செயற்படக் கூடியதாக ஆக்கிவிடுகின்றது. எனவே பேரிணைவிசையில் போட்டோன்களுடன் ஒன்றாக இருந்த குழுவோன்கள் பிரிந்து விட, அடுத்த சமச்சீர் உடைவைப் பேரண்டம் காண்கிறது. இவ்விதமே, தமக்குப் பொருத்தமான வெப்பநிலை வந்ததும், மெலிந்தவிசைக்கான இடையோன்களும் தனியாகத் தம்மியல்பினைக் காட்டக் கூடியதாக வந்துவிடுகின்றன. அதனால், போட்டோன்களில் நின்றும் பிரிந்து அவை காணப்பட, மூன்றாவது சமச்சீர் உடைவும் நிகழ்கின்றது.

இங்கு ஈர்ப்போன்கள் தவிர்ந்த மற்றய இடையோன்களை விஞ்ஞானிகள் இனம் கண்டு கொண்டு விட்டார்கள். அதாவது, இயற்கை விசைகளுக்கான இடைத்தாக்கம், இடையோன்கள் என்பவை சரியான கருதுகோள்கள் என்பது உண்மையாக்கப்பட்டு விட்டது. ஆனாலும் பேரண்டத்தின் ஆரம்ப நிலைகளுக்கான விளக்கம் இன்னமும் கருதுகோள் வடிவிலேயே எங்களிடம் உள்ளது. அதாவது பிக்பாங்கின் பின் $10^{-12}$ செக்கன் வரையிலான காலப் பகுதிக்கான கருதுகோள்கள் இன்னமும் நிரூபிக்கப்படவில்லை.

இனி, பிக்பாங் நிகழ்ந்து $10^{-12}$ செக்கனின் பின்னராகப் பேரண்டத்தின் உள்ளே ஏற்பட்ட மாற்றங்களைப் பார்ப்போம். இக்காலப் பகுதியினைத் துணிக்கைக் காலம் என்கிறார்கள், இக்காலப் பகுதியில் நடந்திருக்கலாம் என விஞ்ஞானிகளினால் உய்த்தறியப்பட்ட விடயங்களிற் பல சரியானவை என்று நிரூபிக்கப்பட்டும் இருக்கின்றன. அல்லாமலும் இக்காலப் பகுதியிற்றான் பேரண்டத்துள் சடங்களின் செல்வாக்குக்கான அடித்தளம், இயற்கைவிசைகளினால் இடப்படுகின்றது. அதனால், அந்த மூன்று நிமிடங்களில் இது மிக முக்கிய காலமாக அமைந்து விடுகிறது. அதனை அடுத்த தடவை சந்திக்கையில் கவனிப்போம்.

# காப்புறுதி...

14 ஆம் பக்கத்தொடர்ச்சி

றுதி கம்பனிக்கு அறிவித்து விலையினை குறைத்துக் கொள்ளுங்கள் என அறிவுரை வழங்குவது வழமையாகும்.

வாகனகாப்புறுதிக்கு மனு செய்யும்போதே எந்த வருடம் முதல் அனுமதி பெற்றது? அடுத்த கட்டமாக உள்ள அனுமதி பத்திரம் எப்போது பெறப்பட்டது போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

வீதி ஒழுங்கு சட்டங்களை மீறிய வாகன ஓட்டத்தில், தண்டனை ரிக்கற் பெற்று குற்றச்சாட்டு ஒன்று பதிவில் போகும்போது அங்கு குற்றச்சாட்டின் தன்மை என்பது மாகாண அரசின் 'புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்' (demerit points system) என்னும் அளவுகோலால் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

அத்துடன் இங்கு குற்றச்சாட்டின் தன்மை என்பது சிறியது (Minor offense), பெரியது (Major Offence), கிரிமினல் சம்பந்தப்பட்டது (Criminal Offense) என பல தன்மைகளில் அமைத்து அதற்கேற்றவாறு விலையிலும் தாக்கத்தினை உருவாக்கும். பதிவில் போகும் ஒவ்வொரு குற்றச்சாட்டும், குற்றம் நடந்த திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கு மட்டுமே பதிவில் இருக்கும்.

சாரதி அனுமதி பத்திரத்தின் தரம், வலிமையில் இருக்கும் வருடங்கள், கடந்த மூன்று வருடங்களுக்குள் பதிவில் போன குற்றச்சாட்டுகள், கிடைத்த புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் போன்ற பல விடயங்களின் சுருக்கமான குறிப்பேட்டினை (Driving Abstract Record) ஒன்ராரியோ மாகாண அரச அலுவலகங்களில் (Service Ontario Offices) சிறிது தொகை கட்டணம் செலுத்தி பெற்று பரிசீலனை செய்து கொள்ளலாம். இப்பதிவேட்டினை பரிசீலனை செய்தே வாகன காப்புறுதி கம்பனிகளும் விலைகளை தீர்மானிக்கின்றன. இக்குற்றப் பதிவினுள் அகப்பட்டவர் அகப்படவில்லை என என்றுமே தப்பமுடியாது.

### - வாகன காப்புறுதி ஒன்றின் ஆரம்பமும் முடிவும் எப்படியிருக்கும்?

நேரடியாக முகவர் மூலம் அல்லது தொலைபேசி, மின் அஞ்சல், இணைய தள மூலம் வாகன காப்புறுதி பெற்றுக்கொள்ள மனு செய்யும்போதும் ஆரம்பிக்கும் குறிப்பிட்ட திகதி, நேரம் என குறித்த சில நாட்களுக்கு மட்டும் தற்காலிக காப்புறுதி ஒப்பந்த பத்திரம் என வழங்குவார்கள். இதனைப் பெற்று அடுத்த ஒரு நிமிடத்தில் கூட விபத்து என எவை நடந்தாலும் முறைப்படி நட்டஈடு கிடைக்கும். ஆனால் தற்காலிகமான காப்புறுதி பூரண பரிசீலனையின் பின்பு, ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஒரு வருடத்திற்கு வலிமையான காப்புறுதி ஒப்பந்தம் வழங்குவார்கள். அவர்கள் வழங்கும் பத்திரத்தில் முழு விபரங்களும் இருக்கும். பரிசீலனையின் போது நிராகரிக்கவும் படலாம். விலைகளில் மாற்றங்களும் செய்யப்படலாம்.

எந்தவொரு வாகன காப்புறுதி பத்திரத்திலும் காலாவதியாகும் நேரம் என்பது திகதி ஒன்று குறிப்பிட்டு நள்ளிரவு 12:01A.M என குறிப்பிடப்பட்டிருக்கும். தொடர்ந்து அந்த குறிப்பிடப்பட்ட வாகனக்காப்புறுதி ஒப்பந்தப் பத்திரம் புதுப்பிக்கப்படாவிட்டால் 12:02 A.M க்கு துர்ரதிஷ்டவசமாக விபத்து நடந்தால் எதுவிதமான நட்டஈடும் பெறமுடியாது. காலாவதியாகி ஒரு நிமிடம் கழிந்தாலும் வெறுமையாகி விடும்.

### வாகன காப்புறுதியில் 'ஓய்வு பெற்றவருக்கான விலைக் கழிவு' என்றால் என்ன? (Retiree Discount)

மாகாண அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விலை கழிவே இதுவாகும். ஆனால் பின் வரும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

1. வாகன சாரதி 65 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. 65 வயதிற்கு மேற்பட்ட அதே நபரே முதன்மை சாரதியாக (Principle Driver) இருக்க வேண்டும்.
3. தொழில் வருமானமோ அல்லது வர்த்தக வருமானங்கள் என எவையும் இருக்கக் கூடாது. ஓய்வூதிய பணத்துடன் மட்டும் வாழ்பவராக இருத்தல் வேண்டும்.

'வாகன காப்புறுதியின் ஓய்வுபெற்றவர்களுக்கான விலைக்கழிவு பிரகடன விண்ணப்பப் படிவம்' (Automobile Insurance Declaration for Retiree Discount) எடுத்து நிரப்பி மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை பிரகடனப்படுத்தி கைச்சாத்திட்டு வழங்க வேண்டும். 5%-10% வீதம் வரை நிரந்தரமான விலை கழிவு கிடைக்கும்.

# இத்தாலியரான...

10 ஆம் பக்கத்தொடர்ச்சி

குடியேற்றவும் உதவிக்கும் 1200 ஆண்கள் அக்குழுவில் இருந்தனர். தனது இரண்டாவது பயணத்தின்போது கிறிஸ்ரோபர் கொலம்பஸ் 500 அமெரிக்க பூர்வீகக் குடியினரை அடிமைப்படுத்தி ஸ்பெயினுக்குக் கொண்டு வந்திருக்கிறார். அரசி இசபெல்லாவுக்கு அடிமைப்படுத்தும் செயல் பிடிக்காத காரணத்தால் அதில் பலர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். மிகுதி பூர்வீகக் குடிகளை பார்சிலோனாவில் தங்க வைத்து மதமாற்றம் ஞானஸ்த்தானம் கொடுக்கப்பட்ட புனித எலுலேலியா பெருங்கோவில் பார்சிலோனாவில் கவர்ச்சியான தோற்றத்துடன் இருக்கிறது. மே 30, 1498 இல் கிறிஸ்ரோபர் கொலம்பஸ் புதிய உலகைக் கண்டுபிடிக்கத் தனது மூன்றாவது பயணத்தைத் தொடங்கினார். ஆறு கப்பல்களுடன் ஸ்பெயினிலுள்ள சன்லுகார் (Sanlúcar) துறைமுகத்திலிருந்து புறப்பட்டார்கள். தனது மூன்றாவது பயணத்தின் பின் ஸ்பெயினுக்குத் திரும்பிய போது, கொலம்பஸ், ஹெஸ்பானியோலாவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக பூர்வீகக் குடியினருக்குக் கொடுத்த காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கும் சித்திரவதைகளுக்குமாக கொலம்பஸ்ஸையும் அவரது சில ஆட்களையும் மன்னர் பெர்டினாண்ட்டினால் ஆறு வாரங்களுக்கு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். நான்காவது மற்றும் இறுதி பயணத்தின்போது கொலம்பஸின் நான்கு கப்பல்கள் மற்றும் 150 ஆண்களுடன் மே 09, 1502 அன்று ஸ்பெயினிலுள்ள காடிஸ் (Cádiz) துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது. இந்த பயணத்தின்போது கொலம்பஸ் அவருடைய 14 வயது மகன் பெர்னாண்டோ (Fernando), அவருடைய சகோதரர் பர்த்தலோமிவ் (Bartholomew) இருவரையும் கூட்டிச் சென்றார்.



ஸ்பெயினிலுள்ள வல்லடுலிட் (Valladolid) என்ற கிராமத்தில் மே 20, 1506 அன்று, 54 வயதில் நாள்பட்ட மூட்டு வாதத்துடன் வாழ்ந்த கொலம்பஸ் உணவு நச்சானதால் இறந்தார் எனக் கூறப்படுகிறது. பாக்டீரியா குடல் நோய்த்தொற்றுகளால் அல்லது பாலுறவால் பரவும் நோய்களால் ஏற்படக் கூடிய எதிர்வினை வாதம் என்றும் அவரது பயணங்களில் ஒன்றில் அவர் இந்த நோய்த்தொற்றை வாங்கியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கின்றனர். இறக்கும்வரை பூமி தட்டையென்றே நம்பினார் என்றும் கூறப்படுகிறது.

ஐரோப்பாவிலிருந்து ஆசியா வரையான ஒரு நேரடி கடல்வழி பாதையை கண்டுபிடிக்கப் போவதாக இருந்தார், அதற்குப் பதிலாக, அவர் தற்செயலாக மத்திய அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் கரிபியன் தீவுகளையும் கண்டுபிடித்தார். வட அமெரிக்காவுக்கு போகவேயில்லை. அவரைப் பின்பற்றி ஃபெர்டினென்டு மாஜெல்லன் (1480-1521) உலகை முதன் முதல் ஒருமுறை சுற்றி வந்து, பூமி தட்டையானது அல்ல, அது ஓர் உருண்டை என்று நிரூபித்துக் காட்டினார். அடுத்து வாஸ்கோட காமா

(தொடர்ச்சி 38 ஆம் பக்கம்...)

# இசைத்தமிழ் சிந்தனைகள், தமிழில் இசைப் பாடல் வகைகள் ஆகிய நூல்களின் வெளியீடு



**- குமுளன் -**

கடந்த வாரம் முனைவர் கௌசல்யா சுப்பிரமணியன் அவர்களின் இரு நூல்களின் வெளியீடு தமிழ் இசைக்கலாமன்றத்தில் சட்டத்தரணி ஸ்ரீபதியின் தலைமையில் வெளியீடு செய்யப்பட்டது. செல்விகள் சுருதி சர்வேஸ்வரன், சின்மயி சிவகுமார் ஆகிய இருவரும் முறையே சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்தும், தமிழ்தாய் வாழ்த்தும், கனேடிய நாட்டு கீதமும் இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து சிவஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள், வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள் ஆகிய இருவரும் ஆசியுரை நல்கினர். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் சுப்பிரமணியன் அவர்கள் தலைமை உரையில் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

தலைமையுரையில் தம்பையா ஸ்ரீபதி அவர்கள் தமிழ் இசைக்கலாமன்றம் கலையை வளர்ப்பதற்காக அரும்பாடு பட்டுவரும் ஒரு நிலையம். இந்த நிலையத்தில் இத்தகைய நூல் வெளியீடு இடம்பெறுவது பாராட்டத் தக்கதும் போற்றத்தக்கதும் ஆகும் என்றதுடன் தமிழ் இசை பற்றி பல்வேறு நூல்கள் வந்திருந்தாலும் இவ்விதமாக இலகுவான நடையில் ஆய்வுகளை தந்திருப்பது எமக்குப் பெருமை அளிக்கின்றது என்றார்.

அவர் தொடர்ந்து அனைத்து இசை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருமே இந்நூல்களை வாங்கி ஆதரவு நல்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதுடன் தமிழ் இசைபற்றி அறியத் தக்கதான பல விடயங்களைக்கொண்ட இந்த நூலை ஆசிரியர்கள் பயன்படுத்திப் பயனுற வேண்டும் என்றார்.

பேராசிரியர் சு. பசுபதியவர்கள் வாழ்த்துரை நல்கினார். அவரது வாழ்த்துரையில் மும்மூர்த்திகள் எனப்படும் தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் போன்றோர் கர்நாடக இசைக்கு பெரும் பணியாற்றியுள்ளனர். அவர்களுக்குப் பின்னர் ஏபிரகாம் பண்டிதர், சுவாமி விபுலாநந்தர் போன்றோர் இசைபற்றி ஆய்வுகளை மேற்கொண்டனர். அவ்வாறான ஆய்வுகளின் வரிசையிலே வைத்து எண்ணத்தக்கதாக இன்று கலாநிதி கௌசல்யா அவர்கள் அருமையான ஒரு பணியினை மேற்கொண்டுள்ளார் என்றார்.



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன் அடிகளார் வாழ்த்துரை நல்கினார். அவர் பேராசிரியர் சுப்பிரமணியன் அவர்கள், பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி அவர்களுக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத்தக்க ஒரு தமிழறிஞராவார். அவரது துணைவியார் தனது கலாநிதிப்பட்டப் படிப்பிற்காக மேற்கொண்ட ஆய்வினை நூலாக வெளியீடு செய்வது தமிழ் இசைத்துறைக்கு ஆற்றிய பெரும் பணியாகக் கருதலாம் எனவும் கூறினார். அவரது நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார். சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள் தனது வாழ்த்துரையில் கலாநிதி கௌசல்யா அவர்களின் இந்த நூல்கள் எமக்குக் கிடைத்த பொக்கிசமாகக் கருதுகின்றேன். ஒவ்வொரு இசை ஆசிரியர்களும் இந்த நூலை வாங்குவதோடு தங்கள் பிள்ளைகளுக்கும் பாடநூலாக கற்பிக்கவும் வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து "தமிழில் இசைப் பாடல் வகைகள்" என்னும் நூலைப்பற்றிய வெளியீட்டுரையை சங்கீத வித்துவான் ஸ்ரீமதி தனதேவி மித்திரதேவா ஆற்றினார். அவர் இந்த நூலைப்பற்றிக் குறிப்பிடும் போது,நூலாசிரியை மிக நுட்பமாக இசைப் பாடல்களைத் தொகுத்தும் விளக்கியும் உள்ளார் என்பதனை தக்க உதாரணங்களோடு எடுத்துக்காட்டி அவற்றில் சில அடிகளைப் பாடியும் காட்டி உரையாற்றினார். பேராசிரியர் வே.சா. அனந்த நாராயணன் அவர்கள் இந்நூல் பற்றிய கருத்துரையை தந்தார். அவர் தமிழ் இசையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி மிக ஆழமான கருத்துரையைத் தந்தார். தமிழ் இசையின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்தோர் பற்றியும் தமிழ் இசைக்கும் கருநாடக இசைக்குமான தொடர்பு எத்தகையது என்பது பற்றியும் உரையாற்றி னார். வடக்கேயும் தெற்கேயும் சரி சமமாக இசையின் வளர்ச்சி ஏற்பட்டிருந்தமையை பல்வேறு பாடல்களிலிருந்து எடுத்துக்காட்டி

(தொடர்ச்சி 41 ஆம் பக்கம்...)

JOBS! JOBS! JOBS!

Reach
Personal Recruitment Services

JOB OPENINGS IN SCARBOROUGH, TORONTO ,CONCORD, MISSISSAUGA & BRAMPTON

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு.
கனடாவுக்கு புதிதாக வந்தவர்கள், மொழி பிரச்சனை உள்ளவர்கள், தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம்

The following are positions
for which we offer temporary, part-time, contractual and full-time

- General Labour
- Electricians
- Mechanics
- Millwrights
- Office Assistants
- Information technology
- Accounting
- Transportation
- Industrial Construction
- Forklift Operators
- Manufacturing
- Skilled Tradesmen
- Construction
- Truck Drivers
- Machine Operators
- CNC Operators
- Receptionists

Reach Personal Recruitment Services
1585 Markham Road Suite 406
Office: 416.901.6253　Cell: 647.533.0492
email: reachprservice@gmail.com　Website: www.reachprs.com

# இத்தாலியரான...

10 ஆம் பக்கத்தொடர்ச்சி

(Vasco da Gama 1460-1524) இந்தியாவிக்குப் புதிய கப்பல் மார்க்கத்தைக் கண்டுபிடித்து 1498 இல் இந்தியாவுடன் வர்த்தகம் நிலைநாட்டப்பட்டது. இவ்வாறு ஐரோப்பாவிலிருந்து அன்னிய தேசத்தவர் (அலெக்ஸாண்டர், மார்க்கப் போலோ, வாஸ்கோட காமா) கிரேக்கர், ரோமானியர், போர்த்துக்கேயர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் இந்தியாவில் காலூன்றிய பின், இந்தியக் கலாசாரம், நாகரிகம், கல்வி அறிவு, மொழிகள் யாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அதே போல் 1505இல் போர்த்துக்கேயருடன் இலங்கை வணிகத்தொடர்பு ஏற்பட்டது. போர்த்துக்கேயர் (1505-1638), டச்சுக்காரர் (1638-1796), ஆங்கிலேயர் (1815-1948) இலங்கையில் காலூன்றிய பின், இலங்கைக் கலாசாரம், நாகரிகம், கல்வி அறிவு, மொழிகள் யாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

கொலம்பஸுக்கு மக்கள் கூடி வரவேற்பு நிகழ்த்திய பார்சிலோனா பெருங்கோயில் அல்லது புனித எலுலேலியா பெருங்கோவில் (Catedral de la Santa Cruz y Santa Eulalia)

றோமர்கள் கிறிஸ்தவர்களை (கிபி 284-305) துன்புறுத்தி வந்த காலங்களில் பதின்மூன்று வயது எலுலேலியா என்ற பெண் பிள்ளைக்கு நேர்ந்த கதை: அந்தப் பெண் பிள்ளையிடம் கிறிஸ்தவ மத விசுவாசத்தை கைவிட வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார். பெண் பிள்ளை அதனைச் செய்ய மறுத்துவிட ஆளுநர் அவருக்கு 13



தண்டனைகளைக் கொடுத்தார். சிறை, தூக்குதல், தீயில் நிற்றல், கற்களால் எறிதல், நகங்கள் மற்றும் கூர்மையான பொருள்களுடன் ஒரு பீப்பாயில் அடைக்கப்பட்டு ஒரு மலையின் கீழே தள்ளி விடுதல் போன்றவை அடங்கும். மத விசுவாசத்தை கைவிடாததால் சிறுமியை இறுதியில், சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார். அவரது உடல் முதலில் சாண்டா மரியா டி லெஸ் அரினஸ் தேவாலயத்தில் புதைக்கப்பட்டது. எலுலேலியா கிபி 663இல் புனிதராக அறிவிக்கபட்டார். 713இல் மூரிஷ் (முஸ்லீம்களின்) ஆக்கிரமிப்பின் போது உடல் மறைத்து வைக்கப்பட்டிருந்து, 878ஆம் ஆண்டில் மீட்கப்பட்டது. புனித எலுலேலியா பெருங்கோவில் கட்டுமானம் மே 01, 1298 அன்று, ஒரு ரோமானியக் கோவில் ஒன்று இருந்ததாக சொல்லப்படும் இடத்தில் அமைக்கப்பட்டது. 1339ஆம் ஆண்டில், புதிதாக கட்டி முடிக்கப்பட்ட புனித எலுலேலியா பெருங்கோவிலில் நில அறைக்குள் உடல் மாற்றப்பட்டது. பார்சிலோனா பல இடங்களில் புனித எலுலேலியா சிலைகள் மற்றும் தெரு பெயர்களுடன் புனித எலுலேலியாவை நினைவுபடுத்துகிறார்கள் மக்கள். புனித எலுலேலியாவின் திருவிழா ஒரு வாரத்திற்கு பார்சிலோனாவில் நடக்கிறது. பிப்ரவரி 12 அன்று அவளது விருந்து தினம் (her feast day). இவ் ஆலயத்தினுள் உள்ள தோட்டத்தில் நீர் தடாகம் 1448ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. எலுலேலியா கொலை செய்யப்படும்போது அவருக்கு வயது பதின்மூன்று. வயதொன்றுக்கு ஒரு வாத்து என்ற கணக்கில் இதில் தற்போது பதின்மூன்று வெள்ளை நிற வாத்துக்கள் விடப்பட்டுள்ளன.

இப் பெருங்கோவில் கூரையில், சுவர்களில் மிருகங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. அவை வீட்டு மற்றும் புராண ரீதியான மிருகங்களின் சிற்பங்கள் ஆகும். பெருங்கோவில் சுமார் 90 மீட்டர் உயரமும் 40 மீட்டர் அகலமும் கொண்டது. கோடைகால சனி, ஞாயிறு மாலை வேளைகளில் பெருங்கோவில் முன்றலில் ஆண்கள் பெண்கள் சேர்ந்து சர்டானா நடனம் (அவர்களது பாரம்பரிய நடனம்) வாத்திய இசையுடன் ஆடுவதைக் கண்டு களிக்கலாம். பெருங்கோவில் கோதிக் கட்டிடக்கலைக்குப் புகழ் பெற்றது. இவ்வாலயம் பார்சிலோனியா கத்தோலிக்க உயர் மறை மாவட்டத்தின் பேராலயம் ஆகும். பேராலய கூரைமட்ட மாடியிலிருந்து கோதி கட்டிடக் கலையிலான அக்கால கட்டிடங்கள் நிறைந்த பழைய பட்டிணம் முழுவதையும் அங்கிருந்து கண்டு ரசிக்கலாம்.

பார்சிலோனாவில் அமைந்துள்ள இந்தப் பெருங்கோவிலில் தான் கொலம்பஸுக்கு மக்களால் வரவேற்பு உபசாரமும் கொலம்பஸ் கூட்டிவந்த அமெரிக்க பழங்குடியினருக்கு மதமாற்றமும் ஞானஸ்தானமும் நடைபெற்றதால் கூடிய விருந்தினரை கவருகிறது. இன்றும் இத்தேவாலயம் நவீனப்படுத்தப்படாமல் அதே உள், வெளித் தோற்றத்துடன் இருக்கிறது.

# மொன்றியலில்...

35 ஆம் பக்கத்தொடர்ச்சி


திலக் அவர்களின் Montreal S.M.Dance Group அளித்த நடனங்கள், அவர்கள் எடுத்த நடனப் பயிற்சியின் தரத்தை உறுதிப்படுத்தியது. "ஆடலுடன் பாடலை கேட்டு" பாடலை "குடியிருந்த கோயில்" பாணியில் தொடங்கி, புதிய ரப் பாடலை கலந்து அதற்கேற்ப உடைகளையும் ஒரே மேடையில் தந்த பாங்கு அதிரடியாக இருந்தது. Ram Dance Acadamy யின் "நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க" (ஒளி விளக்கு-நரிக்குறவர் நடனம்) பாடலுக்கான நடனத்தை செல்விகள்: விரிஷிகாவும் துஷியும் துள்ளியாடிய போது, முகபாவனையை வரிகளுக்கேற்ப அள்ளித் தந்தார்கள். செல்வன் சாரதா கௌரீஷ், "நான் ஆணையிட்டால்..." பாடலைக் கறுப்புக் கண்ணாடி அணிந்து பாடி, பார்வையாளர் கண்களை விரியவைத்தார். Karaoke இசையுடன் அவரது குரல் இணைந்தது நன்றாக இருந்தது. செல்வி தர்சனா சிவதாசனின் "எனது பார்வையில் மக்கள் திலகம்" என்ற தலைப்பிலான பேச்சு ஒரு நதியின் பிரவாகம் போல தங்கு தடையின்றி ஓடி அவையை நிறைத்தது. முன் கூட்டியே வீணைமைந்தன் கே.ரி. சண்முகராஜா அவர்களால் ஆத்ம ஜோதி மையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வென்றவர்களுக்கு ஆசிரியர். திரு. சிவானந்தம் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. முதல் பரிசான தங்கப் பதக்கத்தை ஆரம்பப் பிரிவில் செல்வி. சிரோமி நதீஸ்குமாரும், மேற் பிரிவில் செல்வி. இஷானி பாலசுந்தரமும் பெற்றார்கள். ஆறுதல் பரிசுகளை செல்வன். சுகிர்தன் நித்தியானந்தமும், செல்வி. அஸ்வினி நல்லையாவும் பெற்றுக் கொண்டார்கள். நம் பிள்ளைகள் "மெல்லத் தமிழினிச்சாகும்" என்ற ஆதங்க வரிகளுக்கு அடித்த ஆறுதல் மணியோசை மனதிற்கு நிறை வைத்தருவதாக இருந்தது.

மொன்றியல் வாழ் தமிழ்க் குழந்தைகளை இந்த அளவிற்கு மொழிவன்மை, ஆளுமை, உச்சரிப்புடன் வார்த்து நின்ற ஆத்மஜோதி மைய நிலையத்தின் சேவை அளப்பரியது. அவர்தம் பெற்றோரின் முயற்சிக்கும், இந்த இயந்திர வாழ்க்கையின் மத்தியில் பிள்ளைகளை சேவை நிலையத்திற்கு அழைத்து வரும் அந்த விலைமதிப்பற்ற நேர ஒதுக்கீட்டிற்கும் தலை வணங்குகிறோம். இளங்கவி. ரகுவின் கவிதைப்பூக்கள் அழகாகவே மலர்ந்தது. விழா மதிப்புரையை சிறப்பாக வழங்கிய திரு.கே.பி.லிங்கம் அவர்களும், இளங்கவி ரகுவும், நேரப்பற்றாக்குறை காரணமாக காட்டிய விரைவு அவதானிக்கக் கூடியதாக இருந்தாலும், பதிவுகள் ஆழமானதாகவே இருந்தன.



பரம்ஜி (தேமதுரம். பி.ஞானா) அவர்களின் "விடியலைத்தேடி" என்ற திரைக்கதை நூல் வெளியீடு, வீணைமைந்தன் கே.ரி. சண்முகராஜாவின் "எம்.ஜி.ஆர். நினைவாண்டு சிறப்பு மலருடன்" சேர்த்து வெளியிடப்பட்டது. விழாவின் ஆதரவாளர்களும், வர்த்தகப் பிரமுகர்களுமான திரு. ராஜகோபால் (AMR Store), திரு. குமரேசன் (Thanjai Restaurant) மற்றும் ஆசிரியர். கே.வி. செல்வராஜா, ஆ. சிறிஸ்கந்தராஜா ஆகியோருக்கு பிரதிகள் பிரதம விருந்தினர், உதயன் பிரதம ஆசிரியர். திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டன. வீணை மைந்தன் கே.ரி. சண்முகராஜா தனது வரவேற்புரையில் தமிழீழ தானைத் தலைவனுக்கு, தமிழகத்தின் தலைவன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். "தம்பி! நானிருக்கின்றேன். விடுதலைக்கு நீ போராடு" என்று கோடிகள் வழங்கிய நிகழ்வைப் பேசியபோது எழுந்த கரவொலி புலம் பெயர்ந்த மக்களிடை நீறுபூத்த நெருப்பாக இருக்கும் தமிழுணர்வை பறை சாற்றுவதாக இருந்தது. பிரதம விருந்தினரான, உதயன் பிரதம ஆசிரியர். திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் தனது உரையில் குறிப்பிட்டதுபோல, அரங்கம் நிறைந்திருந்தால், நிலவும் ஒரு அமைதியான நிலை மாறி இந்த விழா இன்னும் களை கட்டியிருக்கும் என்பது நிதர்சனமே.

வர்த்தகப் பிரமுகரும் சமூக ஆர்வலருமான திரு. சண்முகலிங்கம் (மார்சே மாருதி, திரு. சிறி) அவர்களின் ஆதரவிற்கு நன்றிகூறும் வேளை, மக்கள் திலகத்தை நெஞ்சில் வைத்து இந்த விழா சிறப்புற ஆதரவு தந்த அனைத்து ஊடகங்களுக்கும் மற்றும் உள்ளங்களுக்கும் விழா ஒருங்கிணைப்பாளர்களின் சார்பில் நன்றி நவில்தல் கடனாகும். இடைவேளையில், சிற்றுண்டிச் சேவை "தமிழீழ பாரி மகளிர் நிதிக்காக" எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுமன நிறைவாக இருந்தது. விழாவை திரு. கே.ரி. சண்முகராஜா அவர்களுடன் கை கோர்த்து முன்னெடுத்த எஸ்.ரி. கனகசபாபதி (கவிஞர் கல்கிதாசன்) அவர்களும், திரு. நடா (ஆரணி) அவர்களும் இந்த வரலாற்றுப் பதிவில் இடம் பிடிக்கின்றார்கள்.






# 1958 முதல் FIFA உலகக் கோப்பையில் இத்தாலி முதல் முறையாக வெளியேறியது!

## விளையாட்டுத் தகவல்கள் 385



எஸ். கணேஷ்

39 வயதில், 175 முறைகால் பந்து, பஃப்பன் தேசியப் போட்டிக்கான ஒரு வீரராக ரஷ்யாவின் இறுதிப் போட்டியாக அறிவிக்கப்படும் என்று அறிவித்தார். இது அவரது ஆறாவது உலக கோப்பை போட்டியிட முடியாது சின்னமான கோல்கீப்பர் Gian-luigi பஃப்பன் ஒரு யுகத்தின் முடிவை குறிக்கிறது. சான் சிரோவில் ஒரு சூடான சூழலில் 74,000 ரசிகர்கள் ஆதரவு இருந்தாலும், 2006 உலகக் கோப்பை வெற்றியாளர்களால் ஒரு வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பிபா உலக கோப்பை கால்பந்து திருவிழா, 2018ஆம் ஆண்டு ஜூன் 14 முதல் ஜூலை 15 வரை ரஷ்யாவில் நடைபெறுகிறது. இதற்கான தகுதி சுற்று போட்டிகள் உலகின் பல்வேறு நகரங்களில் ரசிகர்களின் பலத்த ஆரவாரங்களுக்கு இடையே நடைபெற்று வருகின்றன.

இத்தாலியின் மிலான் நகரில்உள்ள சேன் சிரோ மைதானத்தில், நடைபெற்ற, தகுதி சுற்று பிளே ஓஃப் 2ஆவது லெக் போட்டியில், இத்தாலி-சுவீடன் அணிகள் பலப் பரீட்சை நடத்தின. ஆட்ட நேரம் முடியும் வரையில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் இரு தரப்புக்கும் வெற்றி, தோல்வியின்றி போட்டி ரோவில் முடிவடைந்தது. ஆனால் பிளே ஓஃப் சுற்று 2 லெக் கொண்டதாகும். இத்தாலிக்கு எதிரான முதல் லெக் போட்டியில், சுவீடன் 1-0 என வெற்றி பெற்றிருந்தது. இதனால் ஒட்டுமொத்த கோல்கள் அடிப்படையில் 1-0 என சுவீடன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் 2018 உலக கோப்பை கால்பந்து தொடருக்கு சுவீடன் தகுதி பெற்றது. அதேசமயம் இத்தாலி அணி உலக கோப்பைக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு பின் அதாவது 1958ஆம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக உலக கோப்பைக்கு முன்னேறும் வாய்ப்பை இத்தாலி தவற விட்டுள்ளது.

1934, 1938, 1982, 2006 என இத்தாலி இதுவரை 4 முறை உலக கோப்பையை வென்றுள்ளது. ஆனால் இம்முறை உலக கோப்பைக்கு இத்தாலி தகுதி பெற முடியாமல் போனது, இத்தாலி நாட்டின் ரசிகர்களையும், உலகம் முழுவதும் உள்ள அந்த அணிக்கான ரசிகர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. சுவீடனுக்கு எதிரான 2ஆவது லெக் போட்டியில் இறுதி விசில் அடிக்கப்பட்டதும் இத்தாலி வீரர்கள் கண்ணீர் விட்டனர்.



இந்த போட்டியுடன் இத்தாலி அணியின் நட்சத்திர வீரர் ஃபபான் ஓய்வு பெற்றார். கோல் கீப்பரான அவர் கடந்த 1997ஆம் ஆண்டு ரஷ்ய அணிக்கு எதிரான போட்டியின் மூலம் சர்வதேச கால்பந்து அரங்கில் அடியெடுத்து வைத்தார். 20 ஆண்டு சர்வதேச கால்பந்து வாழ்க்கையில், இத்தாலி அணிக்காக 175 போட்டிகளில் விளையாடியுள்ளார். 2006ஆம் ஆண்டு உலக கோப்பையை வென்ற அணியில் அவர் விளையாடியது குறிப்பிடத்தகுந்த சாதனையாகும். அவர் கூறுகையில், ''இத்தாலி அணியின் ரசிகர்கள் அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். எனது கடைசி போட்டி இப்படி ஆனது வேதனையாக உள்ளது. இந்த தோல்வி இத்தாலி வீரர்கள் ஒவ்வொருவரையும் சாரும். எனினும் இந்த தோல்வியில் இருந்து மீண்டு வர முடியும். இத்தாலி அணிக்கு சிறப்பான எதிர்காலம் உள்ளது'' என்றார். உலக கோப்பைக்கு தகுதி பெற முடியாததால், இத்தாலி அணியின் மனேஜர் ஜியாம்பியரோ வென்டுரா கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளார். அவரது ஒப்பந்தம் 2020ஆம் ஆண்டுவரை உள்ளது. போட்டி முடிவடைந்த பிறகு, தேசிய தொலைக்காட்சியிடம் அவர் பேசவில்லை. எனினும் சிறிது நேரத்திற்கு பின் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அவர் கூறுகையில், ''நான் ராஜினாமா செய்ய மாட்டேன்'' என்றார்.




## நகைச்சுவைத் தொடர் 362 ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



போர் - சமாதானம்
போரும் ....சமாதானமும்
ஏன்? எதற்கு? முடிவென்ன? விடிவென்ன?
இராம ராவண யுத்தம்! பாரதப்போர்!
அசோகனை மனம் மாறவைத்த, மதம் பரப்ப வைத்த கலிங்கத்துப்போர்.
உலகிலேயே பல்லாயிரக்கணக்கானவர்களை பலிகொண்ட
1ஆம் 2ஆம் உலக மகா யுத்தம்.






நாம் வாழும் காலத்திலேயே காலத்துக்கு காலம் பல தோற்றத்தில் தமிழர்களை கொடூரமாகப் பலிகொண்ட ஈழப்போர்.

காரணமில்லாப் போர்களும், உயிரோடு பிடிக்கப்பட்டவர்களும், அகதியாக தங்கச்சொன்ன இடங்களில் உயிரோடு புதைக்கப்பட்டவர்களும், கொல்லப்பட்டவர்களும் நடந்தது இன்றும் நடந்து கொண்டிருக்கிறது



கடந்தவாரமும் யாழ். அதிரடிப்படையினர் சிலர் தமிழ் இளைஞனில் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.
(வெகு விரைவில் தமிழர்களுக்கு விடிவு கிடைக்கும்...
தமிழ் எம்.பி.க்கள் கூட்டங்களில் பேசுவது காதில் ஒலிக்கிறது)



ஈழப்போரில் தமிழ்மக்கள் கொல்லப்பட்டார்களா? காணாமல் போயுள்ளனரா? என ஐ.நா சபை இன்றுவரை விசாரணை செய்து கொண்டிருக்கின்றது.

உலகன்னை ஜெயலலிதாவின்ரை மர்ம மரணம் அப்பொலோ ஆஸ்பத்திரி விடயத்தை கண்டுபிடிச்சினமாம். சீனா, மன்னாரிலை பெற்றோல் கண்டுபிடிக்கப்போகுதாம். ஆனால் ஐ.நா வினால் ஏன் தமிழற்றை பிரச்சினையை கண்டுபிடிக்கேலாமல் கிடக்கு எனக் கேட்டது ஆச்சரியமாக இருந்தது.

உலகர் அமைதியாக இருந்து சரித்திர சம்பவங்களை நினைத்துக் கொண்டிருந்தார்.
மறைக்கக்கூடிய மறந்துபோகக்கூடிய விடயமா?
நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே நீங்கிடாத துன்பம் பெருகுதே.
ஈழப்போரும் இழப்புகளும் மனக்கண்முன் வந்துபோனது.
அவர்களை நினைக்காத நேரமுண்டா.

இறுதிப்போர்: விமான குண்டுவீச்சு பல நாடுகளில் தயாரிக்கப்பட்ட நவீன ஆயுதங்கள் அரசபடையால் பரீட்சை செய்து பார்க்கப்பட்டது. முல்லைச்சமர் அழுகுரல்கள் உயி-ரோடு புதைக்கப்பட்ட மக்களின் மரண ஓலங்கள் எதுவுமே தெரியாததுபோல அரசபடை-யின் வெற்றி விழாவென சங்கூதிய சங்கூதும் ஊடகங்கள்.

உலகர் ஜாக்கெட்டைப் போட்டுக்கொண்டு புறப்படும் நேரம் செக்கண்ட்புளோர் செல்லம்மா கவனிக்கத் தவறவில்லை.



கார்த்திகைப்பூக்கள் ஒளிர்ந்தன.
தமிழ் வாழ தாம் வீழ்ந்து கல்லறையில் கனவுகளுடன் துயில்கொள்ளும் கண்மணிகளுக்காக அவர்களுக்காகவே காத்திருந்து கண்சிவந்து காட்சி தரும் செங்காந்தள் பூக்கள்.



நவம்பர் 20 மாவீரர் வாரம் ஆரம்பம் - நவம்பர் 27 மாவீரர் நாள். 24 மணி நேரமும் உலகநாடெங்கும் வாழும் தமிழ் உறவுகள் ஏற்றும் கார்த்திகை தீபங்கள் இருண்ட பல உள்ளங்களுக்கு வெளிச்சத்தை கொடுக்கும்.

ராசா என்பார் மந்திரி என்பார் ராஜ்யம் இங்கு இல்லை.
பணம்தான் வாழ்க்கை, பணம் இல்லையெண்டால் வாழ்க்கையில்லையென உலகில் நினைக்காத ஆக்கள் இல்லை என தத்துவ கதை சொல்வதுபோல ஆரம்பித்தா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.


'சவூதி இளவரசர் கெலிகெப்டர் விபத்தில் இறந்துவிட்டார்' என செய்திகள் தெரிவித்தாலும் இஸ்ரேல் பத்திரிகைச் செய்திகளின்படி சவூதி போர் விமானம் அவரை சுட்டு வீழ்த்தியதாக இஸ்ரேல் செய்தி வெளியிட்டுள்ளது.

"காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" - பட்டினத்தார்.
'நாடாளும் மன்னனும் பிடிசாம்பலாவது திண்ணம்'.
"ஆசையே துன்பத்திற்கு காரணம்" - புத்தர்



பதவியிலுள்ள பல மந்திரிகள் ஊழலில் ஈடுபட்டதால் சொத்துக்கள் பறிமுதலுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். அரச பரம்பரை சரித்திரங்கள் இன்றுவரை மூடுமந்திரங்களாகவே இருக்கிறன.

இலங்கையில் பிரபல ஓவியங்கள் உள்ள சிகிரியாமலை. அதனை ஆண்டுவந்த தாதுசேனனை மகன் காசியப்பன் கொலைசெய்து ஆட்சியைப் பிடித்தான்.




1980 இல் சுட்டுக் கொல்லப்பட்ட பிரதமர் பண்டாரநாயக்கா கொலையின் பின்னணி அதனையடுத்து மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தது ஏதோ ஏதோ.....பதவி?

பரம்பரை அரசியல் வரலாற்றில் இந்தியா 1948இல் சுதந்திர இந்தியாவின் பிரதமர் நேரு, அதன்பின் அவரது மகள் இந்திரா காந்தி அவரது பதவிக்காலத்தில் அரசியலில் கால்பதித்த சஞ்சாய் காந்தி 1980 இல் அதாவது 6ஆவது மாதத்தில் விமான விபத்தில் இறந்தார் காரணம்...விபத்து?



இந்தியாவின் முதல் பெண் பிரதமர் இந்திரா காந்தி 1984 ஒக்ரோபர் 31இல் தனது இரு சீக்கிய மெய் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

போருக்கு சில விதிமுறைகள் உண்டு. வைத்தியசாலைகள், மக்கள் வழிபாட்டுத்தளங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என சர்வதேச சட்டங்கள் இருந்தாலும் இன்று எந்த அரசும் இராணுவமும் கண்டுகொள்வதில்லை. அரசன் அன்றறுக்கும், தெய்வம் நின்றறுக்கும். என்றோ யாரோ செல்லி வைத்தார்கள்.



1997 இல் லட்சோப லட்சம் மக்களின் மனதில் இடம்பிடித்த இளவரசி டயானா ராச பரம்பரை கௌரவம் காரணமாக பிரான்சில் வாகன விபத்தில் இறந்தார். (திட்டமிட்டுக்கொலை செய்யப்பட்டதாக அரச பரம்பரையினரின் ஆலோசகர் ஒருவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஞாபகம் இருக்கிறதா நவம்பர் 15.....30




18. வ.உ. சிதம்பரம் நினைவுதினம்

19. சர்வதேச ஆண்கள் நாள்



20. குழந்தைகள் நாள்.

27. மாவீரர் நாள். வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார். மாபெரும் வீரர் மானம் காத்தோர் மக்கள் மனதில் நிற்கின்றார்.




## பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களுக்கான செயற்திட்டம்

கடந்த 25 வருடங்களாக இலங்கையில் பொதுச்சேவை செய்துவரும் இலங்கை இந்துப்பேரவை முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் இருந்து மொத்தமாக 50 கணவனை இழந்த குடும்பங்களுக்கு நிரந்தர வாழ்வாதாரத்தை வழங்க $17,000 கனேடிய டொலரை சேகரிக்கிறது.

பணம் அனுப்ப வேண்டிய வங்கிக்கணக்கு:

Name of Account: Hindu Council of Sri Lanka Account Number: 1990767
Name of Bank : Bank of Ceylon Branch : Milagiriya Bambalapitiya
Swift code : BCEYLKLX
Contact: Velluppillai Rajendra Tele Phone: 011.94.11.272.1785
Email: siva.duraiswamy@yahoo.com Web Page: www.hinducouncilsl.com




# இசைத்தமிழ்...

37 ஆம் பக்கத்தொடர்ச்சி

உரைத்தமை சபையை மிகவும் கவர்ந்தது. இறுதியாக ஒரு வெண்பாவால் நூலாசிரியை வாழ்த்தி உரையை நிறைவு செய்து கொண்டார்.

"இசைத் தமிழ்ச் சிந்தனைகள்" என்ற இரண்டாவது நூலுக்கான வெளியீட்டு







உரையை மருத்துவக் கலாநிதி இராம நாதன் லம்போதரன் அவர்கள் மிக நயமாக எடுத்துரைத்ததோடு இந்நூலாசிரியரின் எழுத்து நடையின் சிறப்பம்சங்கள் பற்றியும் விதந்துரைத்தார். அவை இந்நூலாசிரியரின் திறமையை வெளிக்காட்டுவதாக அமைந் துள்ளது என்றார்.

கருத்துரையினை இசை ஆசிரியை ரேணுகா பாலச்சந்திரன் அவர்கள் ஆற்றும் போது அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு விடயங்களையும் எடுத்து அலசி உரையைத் தந்தார் எனலாம். தொடர்ந்து கலிபோர்ணியாவில் இருந்து வந்த இசை யறிஞர் அசோக் சுப்பிரமணியம் அவர்கள் தமிழ் இசையின் நுணுக்கங்கள் பற்றியும் தமிழில் இசைப்பாடல்களை எழுதுவது பற்றியும் சிலாகித்து உரையாற்றினார். அவர், தான் எழுதிய சில பாடல்களையும் பாடிக்காட்டினார்.

தொடர்ந்து இரு முதுபெரும் தம்பதியினரு க்கு பாராட்டும் கௌரவமும் மேற்கொள்ளப் பட்டது. அந்தண சிவாச்சாரியார் நிர்த்தன ராஜக் குருக்கள் தம்பதியினரும், கவிநாயகர் வி. கந்தவனம் தம்பதியினரும் மேடைக்கு அழைக்கப்பட்டு நா. சுப்பிரமணியன் தம்பதி யினரால் மலர் மாலையும் பொன்னாடையும் அணிவித்து நூல்களின் முதற்பிரதிகள் கொடுத்து கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் நூற்பிரதிகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கௌசல்யா அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது. கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம் அவர்கள் தமது நன்றி யுரையில், தமிழ் இசை ஆராய்ச்சியானது ஆபிரகாம் பண்டிதரில் தொடங்கி விபுலானந்தருடாக இன்று நூறாவது ஆண்டில் காலடி வைத்துக்கொண்டிருக்கும் இவ் வேளையில் எனது நூல்களை வெளியீடு செய்ய வேண்டுமென விரும்பினேன். அதற்கு பெருந்தொகையில் வந்து ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் வார்த்தைகளால் நன்றி கூற இயலாதுள்ளதெனவும் கரம் கூப்பி சிரம் தாழ்த்தி நன்றியினைக் கூறிக் கொள்கிறேன் எனக்கூறியதோடு தமிழ்இசை என்ற தேரினை உலகெங்கிலுமுள்ள இசை யார்வலர்களாகிய தமிழ் மக்கள் அனை- வரும் ஒன்றிணைந்து வடம் பிடித்து இழுத்து அதன் முன்னேற்றத்திற்குப் பாடு படவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து தமது நன்றியுரையினைப் பூர்த்தி செய்தார்.

இந்த நிகழ்வுகள் அனைத்தையும் மிகச் சிறப்பாக தனது அழகு தமிழில் அறிமுகம் செய்து நூல் வெளியீட்டை உயிரோட்டம் மிக்கதாக இறுதிவரை தக்கவைத்தவர் அன்றைய அறிவிப்பாளராகக் கடமை யாற்றிய திருமதி கோதை அமுதன் என்பது குறிப்பிடத்தக்கது.








Ajax

CREMATORIUM & VISITATION CENTRE INC.

Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax

## New Crematorium / Visitation Centre




**Serving our Community at:**

**384 Finley Avenue Ajax, ON L1S 2E3**

**Tel: 289-372-3300 / *info@acvc.info***

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.



# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

*Best Rates & Advice You Can Trust!*

**Purchase**

**Refinance**

**Renewal**

PRE-QUALIFIED

PRE-APPROVED

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*





**Pradeepraj Mani**
*Mortgage Agent*
LIC# M14001956
**416.997.3862**
np_57@hotmail.com

**Gaya Kathir**
*Mortgage Agent*
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca

MORTGAGE ALLIANCE

வீடு வாடகைக்கு பெற்றிட...
Mega Financial Group
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
Buy / Sell / Lease
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2

we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
(University of Toronto)
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( 1 Block South of Finch Ave. East on Warden)

Homes by Natheesh
BUY SELL/ RENT/ INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
• FREE Home Evaluation
• FREE Home Staging
• FREE Virtual Tour
HomeLife/GTA
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
647.545.8462
SALES REPRESENTATIVE

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

KOENIG PROPERTY MANAGEMENT LTD
We take the stress out of managing your investment property.
416.895.5000 • 1.800.909.7209

TOP 100 REALTORS IN CANADA (#68 of 21,000)
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
Buy / Sell
RE/MAX
All-Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்

வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க..
பொன்னம்பலம் மகாலிங்கம்
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8 Tel: 905.201.9977
*Independently owned and operated

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்...
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

BUYING OR SELLING
வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned & Operated

BUY/ SELL PROPERTIES
$229,900 6 Third St Kawartha Lakes
$319,900 222 Verdun Rd - Oshawa
$1,268,888 99 Haviland Circ - Brampton
$199,900 1054 Cannon St E Hamilton
$199,900 252 Tragina Ave N - Hamilton
$499,000 3558 Regional Rd 57 Rd - Scugog ON
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com
www.newcondoproject.ca/com
RE/MAX DYNASTY REALTY INC.
Dynasty Realty Inc. Brokerage*
Tel: 905.471.0002
8 Shadlock St. #7, Markham ON L3S 3K9
Independently owned & operated

www.tamilvanakkam.com
Tamil VANAKKAM
தமிழ் வணக்கம் உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம் தமிழ் வணக்கம்

வீடு வாடகைக்கு... வாங்க... விற்க...
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416.716.1540
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2